
# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்
இறக்கை: 3 இறகு : 7

ஜூலை 2014 • ₹.25



## பிரதமர் மோடி

## முழுநீள அதிகாரம் மூடிய பெருங்கனவு!

ஏகன் • இன்குலாப் • இரா.எட்வின் • சு.இராமசுப்பிரமணியன் • ஜோ டி குரூஸ்
யாழன் ஆதி • நா.விச்வநாதன் • சாளை பஷீர் • முகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Les points cardinaux

# திசைகள்

**tisaikaḷ** (p.35)
**Les points cardinaux**

Face au soleil levant
Je tourne le dos à l'ouest

A gauche, le nord
Le vent du nord m'étreint

A droite, le sud
Le vent du sud divague

Vaadai, le vent du nord
Sozhagame, le vent du Sud
Kachchan, le vent d'ouest
Kondal, le vent d'est
Les points cardinaux célèbrent
Le nom des vents

C'est ainsi qu'autrefois
Ma mère m'a enseigné
Simplement, les points cardinaux

Aujourd'hui, je suis perdu.

Aucun vent ne porte plus de nom.

Je reconnais seulement la tempête
Elle souffle de partout
Je ne suis pas d'ici, mais de là-bas
Malgré mes efforts
J'échoue à chaque tentative
De retrouver mes points cardinaux

Suis-je désorienté ?
Pourquoi ce doute ?
Je viens du Nord
Mes souvenirs me le rappellent

Tu viens du Sud
Me disent mes hôtes
De cette contrée froide


D'où suis-je venu ?
Où vais-je ?
Ceux qui sont nés de mes semences
Me demandent quelle direction prendre.

Il fut facile pour ma mère
De me l'enseigner
Mais enseigner à mes enfants
Je ne le puis.

Je n'ai pas la simplicité de ma mère.

Si quelqu'un me montrait
Une seule fois
La direction du levant
Je me tournerais et me dresserais
Face au soleil resplendissant dès l'aube
Je reconnaîtrais les points cardinaux
Et alors je les enseignerais à mes enfants

00000 00000 00000




## பிரஞ்சு மொழியில் கிபி அரவிந்தன் கவிதை

திசைகள்

சூரியனுக்கு காலைச்
முகம் காட்டி நின்றால்
புறமுதுகில் மேற்கிருக்கும்.

இடக்கைப் பக்கம் வடக்கு
வாடைக்காற்று தழுவும்.

வலக்கைப் பக்கம் தெற்கு
சோழகம் பெயரும்.

வாடை, சோழகம்
கச்சான், கொண்டல் என்றே
திசைகள் உணர்த்தும்
காற்றின் பெயர்கள்.

அன்றைக்கு அம்மா சொல்லிடும்
எளிமையில்
திசைகள் துலக்கமாய் இருக்கும்.

இப்போவெல்லாம் திசைகள்
எனக்கு துலக்கமாயில்லை.

பெயர் சொல்லும்படியான
காற்றுகளும் ஏதுமில்லை

வீசுவது புயலெனத் தெரியும்
புயலுக்குண்டா திசை?
அதனிடை நான் இல்லாததால்
வெளியில் நின்றபடி
திசைகளைத் துலக்கும்
ஓரோர் தடவையும்
முயற்சியில் தோற்கிறேன்.

அவை தொலைந்திருக்குமோ?
ஏன் இந்த சந்தேகம்
வடக்கிருந்து புறப்பட்டவன் நான்
என் நினைவு சொல்கிறது.

தெற்கிருந்து வருகிறாய் நீ
குளிர் வலையத்தில்
எதிர்கொள்பவர் சொல்கின்றனர்.

எங்கிருந்து வந்தேன்
எத் திசையில் செல்கிறேன்?
என் விந்தணுவில் முளைத்தவையும்
குரலெழுப்புகின்றன
எத்திசையை முகங்கொள்வது?

எனக்குச் சொல்லித்தர
அம்மாவுக்கு இலகாயிருந்தது
என் குழந்தைகளுக்குச் சொல்லித்தர
எனக்கோ முடியவில்லை.

அம்மாவின் எளிமை எனக்கில்லை.
ஒரேவொரு தடவை
எழுவான் திசையை
யாரேனும் சுட்டுவீராயின்
சுடரும் விடியல் சூரியனுக்கு
முகம் காட்டி நிற்பேன்.
திசைகளைக் கண்டு கொள்வேன்.
குழந்தைகளுக்கும் அறிவிப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

000 00000

# காக்கைச் சிறகினிலே

இறக்கை 3 இறகு 7

திருவள்ளுவராண்டு 2045
ஆனி - ஆடி
ஜூலை 2014

வெளியிடுபவர்
ஆசிரியர்
**வி. முத்தையா**

ஆசிரியர் குழு
**இரா. எட்வின்**
**நெற்கோ**
**சித்தன்**

நெறியாளர்கள்
**கி.பி. அரவிந்தன்**
**ஓவியர் வீர.சந்தானம்**
**டிராட்ஸ்கி மருது**

புலம்பெயர் நாடுகளுக்கான தொடர்புக்கு :

கனடா :
**வி. மகேந்திரன்**
V. Mahenthiran
Mahenthiran_v@hotmail.com

ஐரோப்பா :
**க. முகுந்தன்**
K. Mukunthan
kmukunthan@gmail.com



காக்கையில் வெளியாகும்
கதை, கவிதை மற்றும்
கட்டுரைகளின் கருத்துகள்,
கட்டுரையாளர்களின் கருத்தாகும்.
காக்கையின் கருத்தாகாது.


## எது இறையாண்மை?

சிங்களவர்களைத் தவிர இலங்கை மண்ணில் எவரும் நிம்மதியாய் உயிர்வாழ அனுமதிக்கக் கூடாது என்பதில் உறுதியாய் இருக்கிறார் இலங்கை அதிபர் ராஜபக்ச.

தமிழ் தீவிரவாதிகளை வேரறுப்பதாய் உலகுக்குச் சொல்லிவிட்டு அதிபயங்கரப் பேரழிவை ஏற்படுத்தும் கொத்துக் குண்டுகளைப் பொழிந்து, லட்சக்கணக்கான தமிழ் மக்களை குடும்பம் குடும்பமாய் துடிதுடிக்கக் கொன்றொழித்ததற்குப் பின்னரும் இரத்தவெறி அடங்கவில்லை ராஜபச்சவுக்கு.

இசுலாமிய சமூகத்தைச் சேர்ந்த மாணவிகள் படுதா உடை அணிந்து பல்கலைக் கழகத்துக்குள் நுழைய துணைவேந்தர் அனுமதி மறுத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்ததையொட்டி, இலங்கையில் வன்முறை வெடித்து ஆயிரக்கணக்கான இசுலாமியர்களின் வீடுகளும் வணிக நிறுவனங்களும் அடித்து நொறுக்கப்பட்டதோடு இசுலாமியர்களின் வழிபாட்டுத் தலங்களும் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈழத்தமிழ் மக்களை ஓடஓட விரட்டி ராஜபக்ச அரசு பலாத்காரம் செய்தபோதும் கூட்டம் கூட்டமாய் கொலை செய்தபோதும்கூட கண்டும் காணாமல் இருந்த இசுலாமிய நாடுகள் எல்லாம் இலங்கையின் அசைவை இப்போது உற்றுக் கவனிக்கத் தொடங்கி இருக்கின்றன. எந்த வணிகத்துக்கு ஊறு நேர்ந்துவிடக்கூடாது என்று ஒதுங்கிநின்று வேடிக்கை பார்த்தார்களோ, அதே வணிகத்தால் சிங்களவர்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் மூர்க்கம் காட்டுகிறார் ராஜபக்ச. எதையும் செய்யத் துணியும் புத்தபிட்சுகளின் பூரண ஆசியோடும் அதிபரின் அமோக ஆதரவோடும் அடங்காத கொலைவெறியோடும் ஆயுதமும் கையுமாய் இலங்கை வெளியெங்கும் சுதந்திரமாய் உலவித் திரியும் சிங்களக் காடையர்கள் பெற்றிருக்கிற பயிற்சி அரசுக்கு பேருதவி செய்கிறது.

இனப்படுகொலை செய்த கொலைக் குற்றவாளியாய் உலக அரங்கில் தலைகுனிந்து நின்று கொண்டிருக்கும் இந்தத் தருணத்திலும் இப்படி ஒரு கொடூரத்தை இசுலாமியர்கள்மீது அதிபர் ராஜபக்ச நிகழ்த்துகிறார் என்றால், அவருக்கு பக்கபலமாய் இருந்து தைரியமூட்டுவது எது? அல்லது யார்? என்பதைக் கண்டறிய வேண்டிய பொறுப்பு முன்னிலும் இந்தியாவுக்குத்தான் இப்போது அதிகமாய் இருக்கிறது.

இன ஒடுக்கு முறையும் மத ஒடுக்குமுறையும் ஒடுக்கமுனைகிறவனின் கைகளையே முறித்துப்போடும் என்பதுதான் உலக ஒடுக்குமுறை வரலாறுகள் சொல்லித்தரும் பாடம். அந்த திசையை நோக்கித் தன்னைத் தானே நகர்த்திக்கொண்டும் வருகிறார் ராஜபக்ச. பேசுவதெல்லாம் பொய்; செய்வதெல்லாம் குற்றம்; நடப்பதெல்லாம் ஒடுக்குமுறை; நிகழ்த்துவதெல்லாம் கொலை; எல்லாப் படுபாதகங்களுக்கும் தானே தொடக்கப்புள்ளியாய் இருப்பதை சர்வதேச சமூகம் சுட்டுவிரல் நீட்டிச் சொன்னால் அது இலங்கையின் இறையாண்மைக்கு எதிரானது என்று அலறுகிறார். எது இறையாண்மை? என்பதை காலம் அவருக்குக் கற்றுத் தரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

**ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி**
**உங்கள் கைகளில்**

ஒவ்வொரு மாதமும் 29 அல்லது 30 ஆம் தேதியில் 'காக்கைச் சிறகினிலே' அஞ்சல் செய்யப்படுகிறது. 5ஆம் தேதிக்குள் இதழ் கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய செல்பேசி எண்: 98414 57503.

**உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| தனி இதழ் விலை | ரூ. 25 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 275 |
| இரண்டு ஆண்டு | ரூ. 500 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ. 1250 |
| மாணவர் சந்தா | ரூ. 200 |

(மாணவர்கள். கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் (வெளிநாடு) | $ 30 |

காசோலைகள், வங்கி வரைவோலைகள். அனைத்தும் KAAKKAI, (A/c No. 60111010005660, SYNDICATE BANK, Triplicane, Chennai - 5. IFSC: Synb0006011) என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும். பணவிடை (மணியாடர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.


தொடர்பு முகவரி :
**காக்கை**
288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600005.
செல்பேசி: 98414 57503
மின்னஞ்சல் : kaakkaicirakinile@gmail.com
https://www.facebook.com/kakkai.cirakinile


# சிறகுக்குள்ளே...




10




21




36




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் மோடி
# முழு நீள அதிகாரம் மூடிய பெருங்கனவு!

இந்திய ஜனநாயகம் பளபளக்கிறது. தேநீர்க் கடைக்காரர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் நாட்டின் உயரிய பதவியில் அமர்ந்திருக்கிறார்.

எட்டு மாதங்கள். 5800 கூட்டங்கள், நிகழ்ச்சிகள். சுமார் 3 லட்சம் கி.மீ. தொலைவுக்குமேல் பயணம். உரிய பக்கபலங்களுடன் திட்டமிட்ட, சளைக்காத உழைப்பு. இந்தியப் பிரதமராக நரேந்திர தாமோதர தாஸ் மோடி, தனிப் பெரும்பான்மையுடன்.

பா.ஜ.க நாடாளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டபோதே, தான் வேறுமாதிரி என்பதை மோடி அழுத்தமாகப் பதிவு செய்தார். ஜனநாயகத்தின் ஆலயம் எனப் போற்றப்படும் நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்துக்குள் நுழையும் முன் மண்டியிட்டு வணங்கிச் சென்றார். அவரைப் பிரதமராக முன்மொழிந்த மூத்த தலைவர் அத்வானி, "மோடி, பா.ஜ.க.வுக்கு பெரிய கிருபை செய்திருக்கிறார்" என்று குறிப்பிட்டார். பின்னர் பேசிய மோடி "மகன் தாய்க்குச் செய்வது கடமையல்லவா... அதைக் கிருபை என்று அத்வானி சொல்லியிருக்கக் கூடாது. கட்சியும் தேசமும் எனக்குத் தாய்போல... செய்யவேண்டியது என்

**ராஜஸ்தானிலுள்ள அனைத்து மக்களவைத் தொகுதிகளையும் பா.ஜ.க கைப்பற்றியும், அந்த மாநிலத்துக்கு எந்தப் பிரதிநிதித்துவமும் இல்லை. இப்படிப் பல இல்லை. ஆனாலும் கட்சியில் வெளிப்படையாக எதிர்க் குரல் கிளம்பவில்லை. அதுதான் மோடி என்பதாகப் பதிவாகியிருக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வரிப்பணத்தில் கனத்த ஊதியத்தையும் சலுகைகளையும் அனுபவித்துவிட்டு, குளிரூட்டப்பட்ட அறைகளில் கோப்புகளோடு சுருங்கிக்கிடந்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளுக்கு, அவர்களது பொறுப்பின் விரிந்த எல்லையை உணர்த்தியிருக்கிறார்.**

கடமை" என்று உணர் வயப்பட்டு தழுதழுத்த குரலில் பேசினார். அத்வானியே ஆடிப்போய்விட்டார். அவரது முகமும் உடல் மொழியும் அதைப் பிரதிபலித்தது. குறிப்பின்றி, தங்குதடையின்றி அரங்கத்தில் கூடியிருந்தவர்களின் கவனத்தைச் சற்றும் சிதறவிடாமல் தக்கவைத்து நீண்டநேரம் மோடி ஆற்றிய உரையின் முடிவில், பா.ஜ.க.வின் மூத்த, முன்னணித் தலைவர்கள் கனத்த சிந்தனையின் பிடியில் இறுகிக் கிடந்தது புலப்பட்டது.

முந்தைய ஆட்சியாளர்கள் எதுவுமே நல்லது செய்யவில்லை என்று சொல்வதில் தமக்கு உடன்பாடில்லை என்று குறிப்பிட்ட மோடி, அந்த ஆட்சியின் நல்லதிட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல வேண்டுமென்பதே தமது அணுகுமுறை என்றார். பிரசாரத்தில் காங்கிரஸ் ஆட்சியைத் துவைத்துக் காயப்போட்ட பா.ஜ.க. பிரமுகர்கள், மோடியின் கூற்றில் உள்ள உண்மை உரச, உணர்ந்து நெளிந்தார்கள். தெளிந்துமிருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

குறைந்தபட்ச அரசுக் கட்டமைப்பு... அதிகபட்ச நிர்வாகம் என்ற முன்னறிவிப்புடன் அமைச்சர்கள் பட்டியல் வெளியானது. அத்வானி, முரளிமனோகர் ஜோஷி இல்லை. எதிர்பார்த்த முகங்கள் இல்லை. ராஜஸ்தானிலுள்ள அனைத்து மக்களவைத் தொகுதிகளையும் பா.ஜ.க கைப்பற்றியும், அந்த மாநிலத்துக்கு எந்தப் பிரதிநிதித்துவமும் இல்லை. இப்படிப் பல இல்லை. ஆனாலும் கட்சியில் வெளிப்படையாக எதிர்க் குரல் கிளம்பவில்லை. அதுதான் மோடி என்பதாகப் பதிவாகியிருக்கிறது.


பதவியேற்பு நிகழ்ச்சிக்குத் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு(சார்க்)தலைவர்களை அழைத்தார். ஒருபக்கம் இது சிறந்த ராஜதந்திர செயல் நோக்காகப் பார்க்கப்பட்டாலும் இன்னொரு பக்கம் எதிர்ப்பும் கிளம்பியது. குறிப்பாக இலங்கை அதிபர் ராஜபக்சே வருவதற்கு தமிழகத்திலிருந்து ஒலித்த சில கட்சிகளின் எதிர்ப்புக் குரல் வழக்கத்தைவிட மெலிந்திருந்தது. பா.ஜ.க கூட்டணியில் அங்கம் வகித்த இரு கட்சிகளின் குரல் முற்றிலும் ஒடுங்கியிருந்தது. ராஜபக்சேவை அழைக்க வேண்டாம் என்று ஓங்கி எதிர்ப்புத் தெரிவித்த முதல்வர் ஜெயலலிதா, பதவியேற்பு நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளவில்லை. மோடி அசரவில்லை. எந்த எதிர்ப்புகளுக்கும் பணிந்துவிடாமல், தான் நினைத்தது போலவே பதவியேற்பு நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார். நிகழ்ச்சிக்குப் பிறகு "சார்க்" நாடுகளின் தலைவர்களுடன் தனித்தனியே இரு தரப்பு உறவு குறித்த பேச்சுவார்த்தையையும் நடத்தினார். பதவியேற்ற மறுநாளே புதிய அரசு முழு வீச்சில் செயல்படத் தொடங்கிவிட்டது என்ற உணர்வை ஏற்படுத்தினார். அத்துடன், வெளியுறவுக் கொள்கையில் தமது அரசின் முன்னுரிமைப் புள்ளியையும் உலக நாடுகளுக்கு வட்டமிட்டுக்காட்டினார்.

முதல் நூறு நாள்களில் புதிய அரசு மேற்கொள்ளவேண்டிய முதன்மைப் பணிகளை அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கறாராக எடுத்துரைத்தார். அமைச்சக அலுவலகங்களை செயலர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டார். ஒழுங்கற்று, தூசி படிந்துகிடந்த கோப்புகள், பழைய நாற்காலிகள், இதர பாழடைந்த பொருட்களை உடனடியாகக் காலி செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டார். அதற்கு விளக்கம் சொல்ல முற்பட்ட செயலர்களிடம், "பயன்படுத்துங்கள். அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காலிசெய்யுங்கள்" என்று கண்டிப்புடன் கூறிவிட்டார். ஓடாத மின் விசிறிகளையும் சுட்டிக் காட்டி, எல்லாம் மாறியிருக்க வேண்டும் என்று காலக்கெடுவையும் விதித்துவிட்டார். மக்கள் வரிப்பணத்தில் கனத்த ஊதியத்தையும் சலுகைகளையும் அனுபவித்துவிட்டு, குளிரூட்டப்பட்ட அறைகளில் கோப்புகளோடு சுருங்கிக்கிடந்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளுக்கு, அவர்களது பொறுப்பின் விரிந்த எல்லையை உணர்த்தியிருக்கிறார்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது வீட்டுக்கே நேரில் சென்று சந்தித்து, ஆலோசனை பெற்றுவந்தார். நலிந்திருந்த அரசியல் நாகரிகத்தை மீட்கும் செயலாக அது பார்க்கப்பட்டது.

மத்திய அமைச்சர்கள் உறவினர்களைத் தனிச்செயலர்களாக நியமிக்கக் கூடாது என்று உத்தரவிட்டார். அமைச்சரவையில் இரண்டாம் இடத்தில் உள்ள மூத்த அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் நியமனம் உள்பட 8 அமைச்சர்களின் தனிச் செயலர் நியமனத்தை நிராகரித்தார்.

குறிப்பிட்டக் காலக்கெடுவுக்குள் அமைச்சர்கள் சொத்துக் கணக்கைத் தாக்கல் செய்யவேண்டுமென்று உத்தரவிட்டார்.

மத்திய அமைச்சர்கள் கூடுதல் பணிகளையும் அதிகாரத்தையும் துணை அமைச்சர்களுக்கு ஒதுக்கித்தரவேண்டும் என்றார்.

அரசு நிர்வாகத்தில் காலக்கெடுவுடன் கூடியசெயல்பாடு, வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை வலியுறுத்தினார். அமைச்சர்கள் தமது தனித் தொலைபேசி எண்கள், சொந்த ஊர் தொடர்பு, மற்றும் பொதுவாக அவர்கள் அடிக்கடி சென்றுவரும் இடங்கள் ஆகியன பற்றிய தகவல்களைச் சமர்ப்பிக்கவேண்டுமென உத்தரவிட்டார்.

செயலர்கள் நிலையிலான உயர்அதிகாரிகளை துறைசார் முன்னுரிமையின் அடிப்படையில் நான்கு பிரிவுகளாக உருவாக்கியிருக்கிறார். அதன்மூலம் அரசுப் பணிகளைத் துறைகளுக்கிடையில் வேகமாக ஒருங்கிணைத்துச் செயல்படுத்த முடியும் என்று நம்புகிறார்.

இந்தியக் கணக்குத் தணிக்கை அதிகாரியின் அறிக்கையை அரசியலாக்கக்கூடாது என்றார். அலைக்கற்றை ஊழல் புகாரில், கணக்குத் தணிக்கை அதிகாரியின் அறிக்கையின் பேரிலேயே பா.ஜ.க தலைவர்கள் உள்பட அனைவரும் உரக்கப்பேசினார்கள்.

தேவையின்றி அமைச்சர்களும் கட்சிப்பிரமுகர்களும் ஊடகங்களில் பொதுப்பிரச்சினைகள் பற்றிக் கருத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று அறிவுறுத்தினார். தேர்தலுக்கு முன்பு வழக்கமாக காலை 11 மணிக்கு பா.ஜ.க. அலுவலகத்தில் நடந்து வந்த பத்திரிகையாளர் சந்திப்பு நிறுத்தப்பட்டது. பா.ஜ.க அமைச்சர்களும் பிரமுகர்களும் இப்போது பத்திரிகையாளர்களை நேருக்குநேர் எதிர்கொள்வதையே தவிர்க்கிறார்கள் என்கிறார் தலை நகரின் மூத்த பத்திரிகையாளர் ஒருவர்.

முதல் அமைச்சரவைக் கூட்டத்திலேயே கருப்புப் பணத்தை ஒழிப்பதற்கான தீவிர நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மாநிலங்கள் சார்ந்த பிரச்சினைகளில் உரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாகாலாந்து போன்ற சிறிய மாநிலங்கள்கூட முன்னோடித்திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கின்றன. முன்மாதிரித்திட்டங்களை எந்த மாநிலம் செயல்படுத்தினாலும் அதை எடுத்துக்கொள்வோம் என்று கூறி, பா.ஜ.க. தலைவர்கள் கட்டி எழுப்பியிருந்த "பெரும்பிம்பத்தை" அவர்கள் முன்னாலேயே உதிர்த்துப்போட்டார்.**

கவனமும் கூடுதல் நிதி ஒதுக்கீடு அளிப்பது குறித்தும்கூடப் பேசப்பட்டது.

வி.ஐ.பி. க்கள் மற்றும் வி.வி.ஐ.பி.க்கள் எனப்படும் முக்கிய, அதி முக்கியப் பிரமுகர்களுக்கு அளிக்கப்படும் பல அடுக்குப் பாதுகாப்பு குறைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. என்.எஸ்.ஜி என்றறியப்படும் தேசியப் பாதுகாப்புப் படைக்குப் பதிலாக, மத்திய தொழிற்பாதுகாப்புப் படையினரை முக்கியப் பிரமுகர்கள் பாதுகாப்புக்குப் பயன்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பூனைகள் புடைசூழ வலம்வரும் வி.ஐ.பி.க்களின் காட்சியை ஊடகங்களில் பார்த்துப் பார்த்து சலித்துப்போன குடிமக்களுக்கு இதுசற்றே நிவாரணம் தரலாம்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசும் நாடாளுமன்றக் கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றிய மோடி, "சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ள நபரை சந்திக்கும்போது அவரிடம் பேசக்கூட நடுங்குகிறோம். 1200 ஆண்டுகால அடிமைப் புத்தி நம்மைவிட்டு இன்னும் போகவில்லை" என்று பகிரங்கமாகக் கூறினார். 1200 என்ற கணக்கை எந்த அடிப்படையில் சொன்னார் என்று தெரியவில்லை. ஆனால் கருத்து இந்தியச் சமூகத்தின் மனசாட்சிக்கு விடப்பட்ட கூர்மையான கேள்வி.

அதேபோல, மூத்த தலைவர்களைக் கண்டால் மரியாதை செலுத்துங்கள். காலில் விழாதீர்கள் என்றும் வெளிப்படையாக அறிவுறுத்தினார். மூத்த தலைவர்களைக் கண்டால், முழங்கால்வரையும் அல்லது அதற்குக் கீழேயும் குனிந்து, பின் நெஞ்சில் கைவைத்து மரியாதை செலுத்துவது வட இந்தியாவில் பொதுமரபாக இருக்கிறது. திராவிடப் பாரம்பரியத்தில் நெடுங்காலமாக ஊறிக்கிடப்பதாக கருதப்படும் தமிழகத்தில், முட்டுவரை அல்லது பாதம்வரை என்றெல்லாம் அரைகுறையாகக் கிடையாது. நெடுஞ்சாண்கிடையாகப் படுத்து வணங்குவது அன்றாடம் காணக்கிடைக்கும் காட்சி. மோடி, வலதுசாரி அரசியலின் முகமாக இருக்கலாம். ஆனால், திராவிட மற்றும் இதரசாரிக்கட்சிகள் குற்ற உணர்வுடன் ஏற்றுக்கொள்ளவேண்டிய உண்மை இது.

அதே நாடாளுமன்ற உரையில், தேர்தல்வரை மீண்டும்மீண்டும் பா.ஜ.க. தலைவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட "குஜராத் மாதிரி" வளர்ச்சி என்ற கருத்தாக்கத்தை, சித்திவிநாயகர் கோவிலில் உடைக்கும் சிதறு தேங்காய்போல மோடி உடைத்தெறிந்தார். "குஜராத் மாதிரி" வளர்ச்சி என்றெல்லாம் எதுவும் இல்லை. குஜராத்திலேயே நல்ல திட்டங்களைச் செயல்படுத்தும் பிற மாவட்டங்களை நாங்கள் மாநில அளவில் செயல்படுத்தினோம். அதுபோல, குஜராத்தைவிட முன்னேறிய மாநிலம் என்று தமிழகம் கோருகிறது. இருக்கட்டும். அங்கும் மழைநீர் சேகரிப்பு என்ற நல்ல திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. நாகாலாந்து போன்ற சிறிய மாநிலங்கள்கூட முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கின்றன. முன்மாதிரித் திட்டங்களை எந்த மாநிலம் செயல்படுத்தினாலும் அதை எடுத்துக்கொள்வோம் என்று கூறி, பா.ஜ.க. தலைவர்கள் கட்டி எழுப்பியிருந்த "பெரும்பிம்பத்தை" அவர்கள் முன்னாலேயே உதிர்த்துப்போட்டார்.

காங்கிரஸ் கட்சியின் மக்களவைத் தலைவர் மல்லிகார்ஜூனகார்கே, தேர்தல் வெற்றி, தோல்விப் பற்றிக் குறிப்பிட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பேசுகையில், பாண்டவர், கௌரவர் என மகாபாரதத்தை எடுத்துக்காட்டிப் பேசினார். பின்னர்பேசிய மோடி, மகாபாரதப் போர் முடிந்துவிட்டது; எதிர்க்கட்சிகள் உள்பட அனைத்துத் தரப்பினருடனும் ஆலோசித்தே ஆட்சியை நடத்தவிரும்புகிறேன் என்றார்.

பதவியேற்ற ஒரே மாதத்தில் முதல் வெளிநாட்டுப் பயணமாக மோடி பூடான் சென்று வந்திருக்கிறார். இந்தியாவைப் போல, பூட்டானும் சீனத்துடன் எல்லையைப் பகிர்ந்துகொள்ளும் நாடு. பூட்டானுக்கும் சீனாவுக்கும் சுமூக உறவு இல்லை. இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான் உள்பட இந்தியாவின் அண்டை நாடுகளுடன் சீனா நெருக்கமாக இருக்கும் நிலையில், மோடி பூட்டானுக்கு சென்று வந்திருப்பது, வல்லரசுகளுக்கு உணர்த்திய பெருங்குறிப்பு என்று வெளியுறவு நோக்காளர்கள் கருதுகிறார்கள். போகப்போகத்தான் தெரியும்.

தொலைக்காட்சி நடிகையாக இருந்து அரசியலுக்கு வந்த, ராகுல்காந்தியை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற ஸ்மிதிஇரானி அமைச்சராக நியமிக்கப்பட்டதும் தொடர்ந்து அவரது கல்வித் தகுதிபற்றிய கேள்விகள் எழுந்ததும் சலசலப்பை ஏற்படுத்தியது. மோடி சற்றும் பின்வாங்கவில்லை. தனது முடிவில் உறுதியாக நின்றார். எதிர்ப்பு தன்னால் வலுவிழந்து போனது.

இவையும் இவைபோல் பலவும் சேர்ந்து, பதவி ஏற்றக் குறுகிய காலத்திலேயே, கருத்து ரீதியாகவும் செயல் நோக்கிலும் மோடி, கட்சி கடந்தும் பரவலாக நேர்மறை தாக்கத்தை உருவாக்கியிருக்கிறார். காங்கிரஸ் கட்சியின் சசிதரூரும் பின்னர் கபில்சிபலும் சமூக ஊடகங்களும் மோடியை வியந்தது அதற்கு சாட்சி.

இதற்கெல்லாம் மேலாக, நாடாளு மன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரையும் மோடி அரசின் மீதான எதிர்பார்ப்பை ஏகத்துக்கும் உயர்த்தியிருக்கிறது.

அதே வேளையில், மோடியின் இன்னொருபக்கமும் இருக்கிறது.

பதவியேற்ற அடுத்த நாளே, அவசரச் சட்டம் போட்டு முதன்மைச் செயலரை நியமித்தது; முந்தைய ஆட்சியில் அமைக்கப்பட்ட அதிகாரம் பெற்ற அமைச்சரவைக் குழுக்களைக் கலைத்தது; முக்கியமான பாதுகாப்புத் துறைக்குத் தொடக்கத்திலேயே தனி அமைச்சரை நியமிக்காமல் நிதிஅமைச்சரான அருண்ஜெட்லியிடம் கூடுதல் பொறுப்பாக ஒப்படைத்தது; அதேபோன்று முக்கியத் துறைகளான தகவல் தொழில்நுட்பம் மற்றும் சட்டம் இரண்டுக்கும் ரவிசங்கர் பிரசாத்தை நியமித்தது; தொண்டு நிறுவனங்களுக்கு வரும் வெளிநாட்டு நிதிசார்ந்த கெடுபிடி உத்தரவுகள் மற்றும் அது தொடர்பான சர்ச்சைகள்; புதிய நீதிபதி பதவிக்கு உச்ச நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த கோபால் சுப்பிரமணியம் (ஒருவழக்கில் மோடி தலைமையிலான குஜராத் அரசைக் கடுமையாக விமர்சித்தவர்) பெயரை நிராகரித்தது; காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட மாநில ஆளுநர்களை உள்துறைச் செயலர் மூலமாக தொலைபேசியில் பதவி விலக அறிவுறுத்தியது; தேசியப் பேரிடர் நிர்வாக மையம், கலாசார உறவுகளுக்கான இந்திய மையம், தேசிய மகளிர் ஆணையம் உள்ளிட்ட முக்கிய அமைப்புகளின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களைப் பதவி விலக நிர்பந்தம் அளித்ததாக எழுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான் உள்பட இந்தியாவின் அண்டை நாடுகளுடன் சீனா நெருக்கமாக இருக்கும் நிலையில், மோடி பூட்டானுக்கு சென்று வந்திருப்பது, வல்லரசுகளுக்கு உணர்த்திய பெருங்குறிப்பு என்று வெளியுறவு நோக்காளர்கள் கருதுகிறார்கள். போகப்போகத்தான் தெரியும்.**

சர்ச்சை; கடந்த வாரம் ரயில் பயண மற்றும் சரக்குக் கட்டணத்தை, ரயில்வே பட்ஜெட்டுக்கு முன்பே தடாலடியாக உயர்த்தியது; அடுத்து சமையல் எரிவாயுவின் விலையும் உயர்த்தப்படலாம் என்ற முன் கசிவு... இப்படி ஒரேமாதத்தில் மோடிக்கு எதிரான பொதுக்கருத்தை உருவாக்கக் கூடிய நீண்ட பட்டியலும் உண்டு.

இன்னொரு முக்கிய சர்ச்சையும் கிளம்பியது.

மோடியால் ஆங்கிலம்பேச முடியும் என்றாலும் அவர் வசதியாகக் கருதுவது ஹிந்தி மற்றும் குஜராத்தி என்கிறார்கள். சார்க் நாடுகளின் தலைவர்களுடன் நடந்த பேச்சுவார்த்தையில் கூட மொழிபெயர்ப்பாளர்களின் உதவியுடன் ஹிந்தியில்தான் மோடி பேசியதாகத் தெரியவருகிறது. பூட்டான் நாடாளுமன்றத்திலும் ஹிந்தியில்தான் உரையாற்றினார். மத்திய அரசுக் கோப்புகள் ஹிந்தியில் இருக்கவேண்டும் எனவும் மோடி உத்தரவிட்டதாகச் செய்திகள் வெளியாயின. தொடர்ச்சியாக, சமூக ஊடகங்கள் மற்றும் அரசின் அனைத்துத் துறைகளிலும் அலுவல் மொழியான ஹிந்தி ஊக்குவிக்கப்படும் என்று மத்திய உள்துறை இணையமைச்சர் அறிவித்தார். தமிழகத்திலிருந்து கடும் எதிர்ப்புக் குரல் ஒலித்தது. முதல்வர் ஜெயலலிதா தமது கண்டனத்தை தெரிவித்தார். "மொழிப் போராட்டக்களங்கள் இன்னும் உலர்ந்து விடவில்லை" என்றார் தி.மு.க தலைவர் கருணாநிதி. மறு நாளே, ஹிந்தி பேசாத மாநிலங்களுக்கு இந்தச் சுற்றறிக்கை பொருந்தாது என்ற அறிவிப்பு வெளியானது. ஹிந்தியை ஊக்குவிப்போம், ஆனால் திணிக்க மாட்டோம் என்று மூத்த அமைச்சர்கள் விளக்கம் கொடுத்தார்கள்.

இதற்கெல்லாம் பொதுவாகப் பதிலளிப்பது போல, "நாட்டு நலன்கருதி சில கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் என் மீதான மக்களின் அன்பு குறையக்கூடும். ஆனால் நீண்டகாலத்தில் அவர்கள் இதன் பலன்களை உணர்ந்து என்மீது கூடுதல் அன்பு செலுத்துவார்கள்" என்று மோடி குறிப்பிட்டிருக்கிறார்.

தனது செல்வாக்கு சரிந்தாலும் சரி, தேச நலன்கருதி கடுமையான முடிவுகளை தாம் எடுக்கத் தயங்கப் போவதில்லை என்பதையே மோடி இவ்வாறு கூறியிருக்கிறார் என்று புரிந்துகொள்ளலாம்.

மக்கள் எவ்வாறு எடுத்துக் கொள்வார்கள்? போகப்போகத்தான் தெரியும்.

இராக்கின் உள்நாட்டுப் போரில், தீவிரவாதிகளிடம் சிக்கியுள்ள 39 இந்தியர்களின் பிரச்சினை மோடி அரசுக்கு பெரும் சவாலாக உருவெடுத்திருக்கிறது. தூதாண்மை உறவில் புதிய அரசின் செல்திசை இன்னும் உருப்பெறாத நிலையில் இப்படியொரு சிக்கல். மீட்போம் என்கிறது மோடி அரசு. நம்புவோம்.

அரசுக் கட்டமைப்பின் ஆதாரச் சக்திகளாகத் திகழும் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் மோடி தனது முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்று தோன்றுகிறது. மோடி எடுக்கும் முடிவுகளும் அவை சார்ந்த உறுதித்தொனியும், அமைச்சர்களையும் அதிகார வட்டங்களையும் படபடப்புடன் யோசிக்க வைத்திருக்கிறது. மோடியுடன் வரும்போது, கண்டிப்பான தலைமையாசிரியருடன் வரும் மாணவன் போல, மூத்த அமைச்சர்கள் சிலரே பவ்யம் காட்டுவதைப் பார்க்க முடிகிறது. சிறிய தவறுகளுக்குக்கூட பதில்சொல்ல நேரிடும் என்ற கலக்கத்தை அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் மோடி உருவாக்கியிருக்கிறார். இது மோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பும் அதிகபட்ச நிர்வாகத்துக்கு உந்து சக்தியாக அமையுமா அல்லது மோடி விரும்பாத விளைவுகளை ஏற்படுத்துமா என்பதை இப்போது சொல்ல முடியாது.


மோடியின் ஆட்சி, சீனப் பாணியின் தன்மைகளைக் கொண்டதாக இருக்கும் என்று அவதானிக்கிறார் லண்டனிலிருந்து வெளிவரும் பிரபலமான ஃபைனான்சியல் டைமஸ் பத்திரிகையின் கட்டுரையாளர் டேவிட்பில்லிங்.

மாசேதுங் காலத்துக்குப் பிறகு, பெரும் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் சீனாவை சந்தைப் பொருளாதாரப் பாணிக்கு நகர்த்தி வளர்ச்சியும் வெற்றியும் கண்டவர் டெங்ஸியோபிங். "முதலில் சிலராவது பணக்காரர்களாகட்டும்" என்பது டெங்கின் நோக்கு. அதைப் பிரதிபலிக்கும் வகையில், எல்லோருக்கும் நியாயமான பகிர்வு என்பதை விட, முதலில் வளர்ச்சியை முடுக்கிவிடுவோம் என்பதாக மோடியின் நடவடிக்கை அமையலாம் என்பது அக்கட்டுரையாளரின் கணிப்பு.

நேரு காலத்திலிருந்து சமதர்ம சமுதாயம் பற்றி அதிகம் பேசிவந்த நாடு இந்தியா. அந்நோக்கில் வளர்ந்த நாடா என்பது தீவிர விவாதத்திற்குரியது. குறைந்தபட்ச ஒழுங்கு உறுதிசெய்யப்படும் பட்சத்தில் தான் வளர்ச்சிக்கான வாய்ப்பே சாத்தியம். சுதந்திரமடைந்த இத்தனை ஆண்டுகளில் அத்தகைய நிலையை எட்டவே இந்தியா போராடிக்கொண்டிருக்கிறது.

நமக்கு ஜனநாயகப் பகட்டு அதிகம். ஜனநாயகம் என்ற பெயரில் எல்லா முடிவுகளையும் கேள்விக்குள்ளாக்குவது, வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அனைத்தையும் முடக்குவது, உரிமைக் குரல் முதல் பொதுநலவழக்கு வரை சகல ஆயுதங்களையும் பல வேளைகளில் உள்நோக்கோடு பயன்படுத்துவது... என்று நமது ஜனநாயகப் பகட்டுக்கு நாம் கொடுக்கும் விலை அதிகம். மிக அதிகம். இந்தப் பகட்டே நமது ஜனநாயகத்தை கேள்விக்கும், கேலிக்கும் உள்ளாக்கியிருக்கிறது.

சகித்து, சகித்து பழைய தலைமுறை இந்த ஜனநாயகப் பகட்டால் நொந்துபோயிருக்கிறது. புதிய தலைமுறைக்கு அறவே பிடிக்கவில்லை. இவையிணைந்த புள்ளியை மோடி நன்கு



புரிந்துகொண்டு, அதற்கேற்ப செயல் நோக்கை அமைத்துக்கொள்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்னும் பிடிபடவில்லை. ஆட்சிக்கு வந்து ஐம்பது நாள்கூட ஆகவில்லை. அதற்குள் அற்புதங்களை எதிர்பார்ப்பது நியாயமில்லை.

நெடுங்காலம் நாம் கொண்டாடி வந்த அதே இந்திய ஜனநாயகம்தான் தனிப்பெரும் அதிகாரத்துடன் மோடிக்கு இந்த வாய்ப்பை வழங்கியிருக்கிறது.

ஜனநாயகம் அளித்த தீர்ப்பை மோடி முற்றிலும் தான் நினைத்தபடி பயன்படுத்துவது சாத்தியமா? எதிர்க்கட்சிகளைச் சமாளிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அவரது கட்சியின் அக, புறச் சூழலே தொடர்ந்து அவருக்குப் பக்கபலமாக இருக்குமா...? தெரியவில்லை.

இந்திய ஜனநாயகம் எண்ணற்ற சூட்சுமங்களையும் சூத்திரங்களையும் கொண்டது.


பழம் தின்று கொட்டை போட்டவர்களாகக் கருதப்பட்டவர்கள் கூட, தொண்டை விக்க அல்வா துண்டுகளை விழுங்கியதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

பிரதமர் மோடிக்கு வாழ்த்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத குமரி



**கோபக்காரர், ஆனால் ஈரமுள்ள இதயத்துக்குச் சொந்தக்காரர். தனக்கு பசிக்கும்போது அயலானுக்கும் பசிக்கும் என்ற ஞானம் உள்ளவர். சென்னை லயோலாக் கல்லூரியில் படித்தக் காலங்களில்கூட அவரைத்தேடிப் போய் மணிக்கணக்கில் ஆமந்துறையின் அந்தக்கால வாழ்க்கைப் பற்றியும், இளவட்டங்கள் அடித்த சுவராஸ்யமான கூத்துகள் பற்றியும் பேசிக்கொண்டிருப்பேன்.**

கல்லூரிக்கு கால்சட்டை போட்டுப்போன முதல் ஆள் நானாகத்தான் இருக்க வேண்டும். முதல் நாளே முதல்வரின் பார்வையிலும் பட்டுவிட்டேன். விரலசைத்து என்னை அருகே அழைத்த முதல்வர் பால்சாமி சொன்னார், "எலேய், எந்த ஊருடே? காலேஜிக்கி கால்சட்டயெல்லாம் போட்டுட்டு வரக்கூடாது." முதல்வர் பால்சாமி ஆங்கில வகுப்பு எடுப்பதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். சாமர்செட்மாமும், சார்ல்ஸ் மக்கன்ஸூம் இவர் மூலமாகத்தான் எனக்கு அறிமுகமானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நிலைப் பள்ளியில் விஞ்ஞானப் பாடம் எடுத்துப் படித்திருந்தாலும் மதில்மேல் பூனையாகவே தேறியிருந்ததால் வேறு எந்தக் கல்லூரியிலும் முயல்வதற்கான வாய்ப்பும் இல்லாமல் போனது. ஆமந்துறை செல்வமரியான் ஆசிரியரின் மகன் இன்னோசென்ட் ரொஸ்காலின் புண்ணியத்தில் எனக்கு கள்ளிகுளம் கல்லூரியில் இளங்கலை பொருளாதாரம் கிடைத்தது. முப்பத்திரண்டு இஞ்ச் பெல்பாட்டமும், இடுப்பில் இரண்டு இஞ்ச் பெல்ட்டும், கட் ஷுவும் அணிந்தபடி ஒருதலை ராகம் கதாநாயகன் கெட்டப்பில் வருவார். பின்னாளில் அவரோடு சூளைமேடு உஷா நிவாஸில் தங்கும் வாய்ப்புக் கிடைத்தது.

கோபக்காரர், ஆனால் ஈரமுள்ள இதயத்துக்குச் சொந்தக்காரர். தனக்கு பசிக்கும்போது அயலானுக்கும் பசிக்கும் என்ற ஞானம் உள்ளவர். சென்னை லயோலாக் கல்லூரியில் படித்த காலங்களில்கூட அவரைத்தேடிப் போய் மணிக்கணக்கில் ஆமந்துறையின் அந்தக்கால வாழ்க்கைப் பற்றியும், இளவட்டங்கள் அடித்த சுவராஸ்யமான கூத்துகள் பற்றியும் பேசிக் கொண்டிருப்பேன்.

“மாப்புள சுடுதண்ணிக்கி நல்ல போத, நடுப்பூசயில குடில்ல இருந்த பாலன் சுருபத்த எடுத்து தோள்ல போட்டு ஆராரோ ஆரீரரோங்குறாம்.”

“எக்மோர் ஓட்டல்ல கபேராக்காரிகிட்ட கைகுடுத்துற்றுச் சொல்லுறாம், அயம் சப்பரிங் ஃபிரம் ஃபிவர் அன்னேபிள் டு அட்டன் கிளாஸ். சிரிச்ச சிரிப்புல கொடல் வெளிய வந்திற்று.”

கல்லூரி முதல்வரே கூப்பிட்டு சொல்லிவிட்டார் வேறு வழியேயில்லை. அன்று மாலையே ஆமந்துறை வந்து, ஆத்தாவிடம் பணம் வாங்கி மறுநாள் திருநெல்வேலி ஜங்ஷன் வந்து துணி எடுத்து, அங்கு எதிரிலேயே இருந்த ஸ்டார் டைய்லரிங்கில் தைப்பதற்காகத் துணியைக் கொடுத்த பிறகுதான் மூச்சு வாங்கினேன். அந்தக் காலத்தில் கோட் சூட் தைக்க வேண்டுமென்றால் திருநெல்வேலி ஸ்டார் டைய்லரிங்தான். நான்கு நாள் கழித்து வந்து வாங்கிக்கொள் என்றார் எனக்கு அளவு எடுத்த மாஸ்டர். ரசீதோடு ஆமந்துறை வந்த எனக்கு நின்றால், நடந்தால், அமர்ந்தால், படுத்தால் பேண்ட் போடும் கனவு. ஆமந்துறையிலும் பெல்பாட்டமும், ஸ்டெப் கட்டிங்கும் பிரபலமாகி இருந்தது. பேலா சோசப்பும், கட்ட பிராஞ்சி வாத்தியார் மகன்கள் பாஸ்கரும், ரவியும் பெல்பாட்டம் போட்டபடி ஸ்டெப் கட்டிங்கோடு தெருக்களில் அலைந்து கொண்டிருந்தார்கள்.

பக்கத்தூரிலிருந்து கள்ளிகுளம் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு வரலாறு படித்த ஜான்சனிடம் என்னைப் பொறுப்பாக பார்த்துக்கொள்ளும்படி ஒப்படைத்து விட்டுப் போனாள் ஆத்தா. வகுப்பிலேயே பொடியனாய் இருந்ததால் பெண் பிள்ளைகள் அமரும் முன்பெஞ்சில் கொண்டுபோய் வைத்துவிட்டார்கள். யாரும் என்னை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. இளம் வயதிலிருந்தே கறுப்பன், கூனன், நீட்டு மூஞ்சி என்ற அடைமொழிகளோடே வளர்ந்திருந்தேன். மேல்நிலை வகுப்பு விஞ் ஞானத்தில் படித்திருந்த ரிக்கர்ட்ஸ் நோயின் அறிகுறியான எலும்பு கோணலாக வளர்தல், நெஞ்சுக்கூடு தூக்கியிருத்தல் போன்றவை எனக்கே இருப்பதாக எண்ணிக்கொண்டு அலைந்தேன். வழக்கம் போல யாரிடமும் அதிகம் பேசுவதில்லை. மாலை வேளைகளில் சாயா குடிப்பதற்காக கள்ளிகுளம் வரை தனியாகவே நடப்பேன். கல்லூரியின் மைதானங்களைக் கடந்து போகும்போது அங்கு விளையாடுபவர்களையும் அவர்களது உடல்வாகுவையும் பார்த்துப் பார்த்துப் பிரமித்துப் போவேன். பெண்களின் முலைகளையொத்த மார்போடு ஹரிஸான்டல் பார் கம்பிகளுக்கிடையில் புகுந்து புகுந்து விளையாடுபவர்களைப் பார்த்து ஏங்கிப் போவேன். இவ்வளவு கேவலமான உடம்பை வைத்துக்கொண்டு நானும் எப்படி போய் அவர்கள் முன் நிற்பது என்ற மனபிராந்தி எப்போதும் என்னை பிடுங்கித் தின்றபடியே இருந்தது. ஒருநாள் இரவு, நல்ல பௌர்ணமி நிலவு, விடுதியில் எல்லோரும் அயர்ந்து தூங்கியபடி இருக்கிறார்கள். சத்தமில்லாமல் எழுந்த நான் வடக்கு கோடியில் எனது வகுப்பறையின் அருகிலேயே இருந்த ஹரிஸான்டல் பார் கம்பிகளின் முன்னால் நிற்கிறேன்.

“செத்து விழுந்தாலும் பரவாயில்ல, என்னய நோஞ்சாமின்னு எவனும் சொல்லக்கூடாது”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடலைத் தேற்றியே ஆகவேண்டும் என்ற வெறி இருந்தது என்னுள். மாலை வேளைகளில் சக மாணவர்கள் விளையாடுவதைப் பார்த்து புரிந்து கொண்டு இரவில் தன்னந்தனியே வந்து விளையாட ஆரம்பித்த நான் ஆறு மாதங்களுக்குள்ளாகவே வளைந்து நெளிந்து மற்ற மாணவர்கள் வந்து வேடிக்கை பார்க்குமளவுக்குத் தேறியிருந்தேன்.**

உடலைத் தேற்றியே ஆகவேண்டும் என்ற வெறி இருந்தது என்னுள். மாலை வேளைகளில் சக மாணவர்கள் விளையாடுவதைப் பார்த்து புரிந்துகொண்டு இரவில் தன்னந்தனியே வந்து விளையாட ஆரம்பித்த நான் ஆறு மாதங்களுக்குள்ளாகவே வளைந்து நெளிந்து மற்ற மாணவர்கள் வந்து வேடிக்கை பார்க்குமளவுக்குத் தேறியிருந்தேன். தினசரி நடக்கும் இந்த வாதப் பரீட்சையை வேவுபார்க்க எனக்குத் தெரியாமல் கிளம்பி வந்து பாதுகாப்பாக நின்றவன்தான் என் அறைத் தோழன் கலந்தபனை மணிக்குமார். வளர்த்திக்கேற்ற வண்ணமாய் புஜபல பராக்கிரமத்தோடு இருப்பான். இந்து குடும்பம். குழந்தை குட்டிகள் என்று ஆனபிறகும்கூட எங்கள் நட்பு தொடர்கிறது. கள்ளிகுளம் கல்லூரியில் ஒரு ஆளுமையாக நான் உருவானதற்கு மணிக்குமாரின் நட்பே முதற்காரணம்.

முதலாமாண்டில் எலிக்குஞ்சானாக கல்லூரியில் கால்பதித்திருந்த நான் இரண்டாமாண்டில் ஹரிஸான்டல் பார் விளையாட்டில் தேறி 'பார் ஆனந்தாக' வலம் வந்தேன். ஆனால் மற்றவர்களைப்போல் மீசை இன்னும் முளைத்தபாடில்லை. விடுமுறையில் ஆமந்துறை வந்தால் நண்பன் முட்டி சார்லஸ் உதவியோடு ஆட்டுப்பால் எடுத்து, மேல் உதட்டுக்கு மேல் தடவி மீசை முளைக்க வேண்டும் என்று தவம் கிடந்தேன். விடிகாலையில் எழுந்து ஊறவைத்த கொண்டைக் கடலையை சாப்பிட்டுவிட்டு ஆமந்துறையின் கிழக்கே மையவாடிக்கு பணியே எடுத்துவிடும் ஓட்டம், கிழூரில் சுயம்பு லிங்கசாமி கோவிலுக்கு பணியே முடியும். மாலையில் தேரிக்காட்டில் மட்டைப் பந்து விளையாட்டு. கரைபிடிக்கும் கட்டுமரங்களைப் பட்டறை ஏற்றுவதற்கு நண்பர்களோடு நானும்... திரண்டுவரும் உடலோடு மீசையும் குனுக்கிறது. பொழுது சாயும் வேளையில் ஆமந்துறை தோப்பு கிணறு பக்கமிருந்து வடக்காக நடந்து மொட்டடப்புளி, மானாட்டா விலக்கு தாண்டி, இடையன்குடி வரை நடப்போம். போஸ்ட் மாஸ்டர் ஸ்டீபன் அண்ணன் தன் வாலிபக்கால காதல் கதைகளைச் சொல்லியபடியே வருவார்.

"பட்டுக்கோட்ட கல்யாண சுந்தரம் இருபத்தி ஒம்போது வயசுலே செத்துற்றாம் ஆனா இத்தன வயசுக்குள்ள எப்புடி இப்புடி ஒரு ஞானமின்னே தெரியில தம்பி" என்று அங்கலாய்ப்பார்.

இரண்டாம் ஆண்டில் கல்லூரி வந்தால் வாத்தியாரையே மடக்கி கேள்வி கேட்கும் துணிவு பெற்றிருந்தேன். அது ஒரு பரிணாம வளர்ச்சி. பேரா.அசோகனின் பன்னாட்டுப் பொருளாதாரம் நடந்தபடியிருந்தது. பாடத்துக்கு சிறிதும் சம்பந்தமில்லாத கதை அளந்தபடியிருந்தார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன் முடியவில்லை எழுந்துவிட்டேன்.

"என்ன சார் பாடத்த விட்டுட்டு ஏதேதோ சொல்லுறீங்க...'' வகுப்பில் இருந்த ஆனானப்பட்ட சண்டியர்கள் எல்லோரும் வாய் பிளந்தபடி என்னைப் பார்க்கிறார்கள். நானோ முன்பெஞ்சில் அமர்ந்திருந்த குமரியைப் பார்த்தபடியே அமர்ந்தேன் கண்கள் குளமாக...என்னோடு அதே வகுப்பில் படித்த குமரியிடம் ஒரு தலையாய் காதல் வயப்பட்டிருந்தேன். ஒருவேளை அது ஈர்ப்பாகவும் இருக்கலாம். ஆனால் அவள் பார்வையின் விளிம்பில் நான் பட்டுவிட மாட்டேனா என்று ஏங்கிய காலம் அது. கல்லூரியில் சண்டித்தனம் பண்ணவும் மற்றவரின் கவன ஈர்ப்பை பெற முனைந்ததற்கும் குமரியும் ஒரு காரணம்.

சமீபத்தில் வெளிவந்த மரியான் திரைப்படத்தில் ஒரு வசனம் எழுதியிருந்தேன்.

''சாதிக்கிறபய அத்தன பேருக்கும் பொம்புளவாட, பொம்புளவாட பட்டுகிட்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருக்கனுமில'' விதை கள்ளிகுளம் கல்லூரியிலேயே விழுந்திருந்தது.

கள்ளிகுளம் கல்லூரியில் பொருளாதாரம் சொல்லித்தந்த பேராசிரியர்கள் பழனி, முருகேசன், ஜோதிரன் போன்றோரை மறக்கவே முடியவில்லை. காலையில் முதல் வகுப்பிலேயே பேரா.காசிபழம் Micro Economics வகுப்பு எடுப்பார்.

"Marginal ulility is an additional ulility which is added to the total ulility by consuming one more unit of a commodity" பசுமரத்தாணியாய் பதிந்துபோன பாடங்கள்.

மூன்றாம் ஆண்டில் நண்பன் மணிக்குமாரின் உடல்வாகுவையும் மிஞ்சி அவனிலும் உயரமாக வளர்ந்திருந்தேன். விடுதியில் எதிர்ப்பேயில்லாமல் உணவுச் செயலராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தேன். முந்தின வருடம் கல்லூரி தேர்தலின்போது ஏற்பட்டிருந்த கலவரத்தின் காரணமாக கல்லூரி நிர்வாகம் இந்தமுறை மாணவர் யூனியனுக்குச் சம்மதிக்கவில்லை. விடுதி மாணவர் நிர்வாகமே கல்லூரி மாணவர் நிர்வாகம் என்றிருந்தது. கல்லூரி முதல்வரோடு பரஸ்பர ஒப்பந்தம் செய்திருந்தோம், நாங்கள் ஸ்டிரைக் பண்ணுவதுபோல ஆரம்பிப்போம், நீங்கள் கல்லூரியைக் காலவரையறையின்றி மூடிவிட வேண்டும். விடுதியைக் காலி பண்ணி எல்லோரும் கிளம்பியபின் அவர்கள் பின்னாலேயே கல்லூரி இரண்டு மூன்று நாட்களில் திறப்பதாக அழைப்பு வரவேண்டும். இருதரப்பும் ஏற்றுக்கொண்ட அருமையான ஏற்பாடு. அந்தக் காலத்தில் எங்களது அந்த மூன்றாம் வருடம்தான் கல்லூரி அமைதியாகவும், நல்லமுறையிலும் நடந்ததாகச் சொல்வார்கள்.


கல்லூரி முடிந்த மாலைப் பொழுதில் கள்ளிகுளம் பாய் கடைக்கு சாயா குடிக்கப் போவதே பெரும் பொழுதுபோக்காய் இருந்தது. தன்னிச்சையாய் சினிமா பார்க்கப் போனது கள்ளிகுளம் முருகா டாக்கீஸ்தான். வள்ளியூர் சித்ராவிலும், அருணாவிலும் அவ்வப்போது நல்ல படங்கள் வரும். இரவுக் காட்சி பார்த்துவிட்டு நடந்தே கல்லூரி வருவோம்.

கோடைக் காலங்களில் கல்லூரிப் பக்கம் உள்ள விளங்காடுகளில் நல்ல பதநீர் கிடைக்கும். கூட்டிப்போய் வாங்கித்தருவான் மணிக்குமார். பதநீருக்குள் நுங்கு போட்டு சாப்பிடுவதும் மாம்பழங்களை குடைந்து போட்டு சாப்பிடுவதும் இன்று

கல்லூரி முடிந்த மாலைப் பொழுதில் கள்ளிகுளம் பாய் கடைக்கு சாயா குடிக்கப் போவதே பெரும் பொழுதுபோக்காய் இருந்தது. தன்னிச்சையாய் சினிமா பார்க்கப் போனது கள்ளிகுளம் முருகா டாக்கீஸ்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நினைத்தாலும் வாயில் தேனூற வைக்கிறது. வள்ளியூரில் சைவமானால் சரஸ்வதி கபே, அசைவமானால் செல்வி ஹோட்டல்.

விடுதியில் பழமையாக இருந்த உணவு முறைகளை மாற்றி பிரட், பட்டர் ஜாம் என புதிய உணவுகளை அறிமுகப்படுத்தினோம். சாப்பாட்டு கட்டணத்தை பங்கீட்டு முறைக்கு கொண்டுவந்து சக மாணவர்களுடைய பாராட்டைப் பெற்றோம்.

அன்று ஒரு செவ்வாய்க்கிழமை இரவு. விடிந்தால் புதன்கிழமை காலை உணவுக்காக இட்லி, சட்னி சாம்பாரோடு கேசரியும் போட வேண்டும் என்ற ஏற்பாடு. நள்ளிரவு ஒரு மணியிருக்கும் அறைக் கதவை தடதடவெனத் தட்டுகிறார் தலைமைச் சமையல்காரர். அடித்துப் பிரண்டு எழுந்து என்னவென்று கேட்டால்,

"எய்யா, நாள காலயில போடுறதுக்கு சுடச்சுட கிண்டி வச்சிறுந்த கேசரிய அண்டாவோட காணும்" என்றார் தலைமைச் சமையற்காரர்.

"எலேய், இது செட்டிகுளத்தான்வ வேலயாத்தாம் இருக்கும். கௌம்புடா ஒரு கை பாத்திருவோம்" என்றான் கலந்தபனை மணிக்குமார்.

அவனைச் சமாதானப்படுத்தியபடியே அந்த நள்ளிரவிலேயே கள்ளிகுளம் ஓடிப்போய் ஒரு ஜீப் பிடித்து வள்ளியூர் வந்து கடையை அப்போதுதான் மூடிக் கொண்டிருந்த கடைக்காரர் காலில் விழுந்து கேசரிக்கான அனைத்து பொருட்களையும் வாங்கி சத்தமேயில்லாமல் விடுதிக்குள் கொண்டுவந்து சமையல்காரரிடம் கொடுத்துவிட்டு அமைதியாய் படுக்கப் போய்விட்டோம்.

மறுநாள் காலை உணவு வேளை. திட்டமிட்டது போலவே சாப்பாட்டறையில் கோஷம் போடுகிறார்கள்.

"கேசரி வேண்டும், கேசரி வேண்டும்
அறிவித்தபடியே கேசரி வேண்டும்"

பரபரப்பாகி, வாக்குவாதம் வந்து, அடிபிடியாகி கல்லூரி ஸ்டிரைக் வரைபோகும் என்பது சக விடுதி மாணவர்களின் எதிர்பார்ப்பு. அமைதியாய் அமர்ந்திருந்தோம். இட்லி, சட்னி, சாம்பார் பரிமாறியாகிவிட்டது எந்த நேரமும் தட்டுகள் பறக்கலாம் என்ற நிலை. கள்ளப் புன்னகையோடு அமர்ந்திருந்த எதிர் அணியினர் தலையெல்லாம் முற்றிய கதிர்போல முனகிச் சாய, சுடச்சுட கேசரி பரிமாறினார் தலைமைச் சமையல்காரர். மதிய வேளையில் வள்ளியூர் செல்லும் வழியில் மங்கம்மா சாலையில் மடப்புரம் அருகே ஆலமரமொன்றில் காகங்கள் கூட்டமாய் கரைந்து கொண்டிருக்கிறதே என்று பார்த்தால் கேசரி அண்டா ஆலமரக் கிளையில் தொங்கியபடி இருந்ததாம். அன்றிலிருந்து விடுதியில் 'கேசரி ஆனந்த்' என்பது என்னுடைய பெயராகியிருந்தது.

இன்றும் பணியிடங்களில் ஏற்படும் சிக்கலான, சவாலான பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு இந்த ஆளுமை வந்து துணை நிற்கிறது. கடந்து வந்தவர்கள் எவரும் மறக்கவே முடியாதது கல்லூரி வாழ்க்கை. அரும்பும் மீசையும், குரும்பும் ஆசையும் இந்தக் கல்லூரிப் பருவத்தில்தான். இன்றும் குமரியின் வேலொத்த விழிப்புருவத்தையும், குழி விழுகன்னத்தையும் என்னால் மறக்கவே முடியவில்லை. கல்லூரிப் படிப்பின் இறுதி நாளில் பசுமை நிறைந்த நினைவுகளே பாடித் திரிந்த பறவைகளே பழகிக் களித்த தோழர்களே பறந்து செல்கின்றோம் நாம் பிரிந்து செல்கின்றோம் என்று கூடிப் பாடியபோது "உன்னை எனக்கு ரெம்ப புடிக்கும்" என்று திருவாய் மலர்ந்தாள் குமரி. அந்த நாட்களை இன்று நினைத்தாலும் உள்ளமும் உடலும் உரமேறிவிடுகிறது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவு

உதடுகள் பிரியும்போது
வார்த்தைகள் கிடைக்கிறது
இமைகள் பிரியும் போது
பார்வைகள் கிடைக்கிறது

மலையில் இருந்து பிரியும்
சந்தனம் மார்புக்கு
மணம் தருகிறது
செடியில் இருந்து பிரியும்
பூக்கள் நாசிக்கு வாசம் தருகிறது

வானில் இருந்து பிரியும்
மழை பூமியில்
பயிரின் உயிரைக் காக்கிறது
காட்டில் இருந்து பிரியும்
மூங்கில்தான் புல்லாங்குழலை தருகிறது

மண்ணில் இருந்து பிரியும் பொன்தான்
சிம்மாசனத்தில் முத்தாகிறது
உடலில் இருந்து பிரியும்
சோம்பல்தான் வீரிய
உழைப்பின் சொத்தாகிறது

பிரிவு என்பது வாழ்வின் அடக்கம்
மகிழ்ச்சியின் தொடக்கம்

நெல்லில் இருந்து உமி
பிரியும் போது அரிசி கிடைக்கிறது
சொல்லில் இருந்து
பொய் பிரியும் போது
வாய்மை கிடைக்கிறது

சூரியன் பிரியாமல்
இரவு ஏது ?
இரவு பிரியாது
பகல் ஏது ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கடத்திய பாடம்

**திமுகவிலிருந்து அவர் வெளியேறியவுடன் தமிழகத்திற்கு நல்ல அரசியல் வாய்த்தது என்று வாய்கிழியப் பேசியவர்களில் என்னைப் போன்ற எத்தனையோ பேர் வைகோவை நம்பி ஏமாந்தவர்கள். எதற்காகக் கட்சியை விட்டு அவர் வெளியேற்றப்பட்டார்?**

கடந்த காக்கைச் சிறகினிலே இதழில் (ஜூன் 2014) மக்கள் கவிஞர் இன்குலாப் எழுதிய கட்டுரைக்கு மறுப்பாக இக்கட்டுரையை நான் எழுதவில்லை. மாறாக இக்கட்டுரை அத்தகையப் போக்கினைக் காட்டும் என்றால் அதற்கு நானே பொறுப்பு.

பலரது எதிர்ப்பார்ப்புகள் பொய்த்துப்போனது போல் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் என்னுடைய எதிர்ப்பார்ப்பு மிகவும் சரியாக இருந்தது. அதிமுக 35 தொகுதிகள் பெறும் என என் நண்பர்களிடம் நான் கூறியிருந்தேன். அதே போல் நிகழ்ந்தது. ஆனால் கண்டிப்பாக வைகோ தோற்பார் என்று கட்டியம் கூறினேன். வைகோ தோற்றார். ஏனென்றால் இன்குலாப் அவர்கள் சொன்னதுபோல் காங்கிரஸ் எதிர்ப்பு என்னும் ஒற்றை நோக்கோடு மட்டும் வைகோ இல்லை. ஈழத் தமிழர் ஆதரவு என்னும் ஒற்றைக்கொள்கையைத் தவிர வேறு எந்தக் கொள்கையிலும் வைகோ நிலையாக இருந்தார் என்று சொல்ல முடியாது.

திமுகவிலிருந்து அவர் வெளியேறியவுடன் தமிழகத்திற்கு நல்ல அரசியல் வாய்த்தது என்று வாய்கிழியப் பேசியவர்களில் என்னைப் போன்ற எத்தனையோ பேர் வைகோவை நம்பி ஏமாந்தவர்கள். எதற்காகக் கட்சியை விட்டு அவர் வெளியேற்றப்பட்டார்? அதற்குப் பிறகு அவர் சொன்ன இலட்சியத்தில் உறுதி, கொள்கையில் நேர்மை, அரசியலில் தூய்மை என்னும் எதுவும் இன்று அவரிடம் கிடையாது.

தேர்தல் வரும்போதெல்லாம் அவர் மிகச்சரியாகத் தவறான முடிவுகளை எடுப்பவராகவே இருந்திருக்கிறார். அவர் தோற்றுப்போன இதற்கு முன்பானத் தேர்தல்களே அதற்கு சாட்சி.

அதிமுகவும் திமுகவும் செய்துவிட்டு தமிழக மக்களிடம் மன்னிப்புக் கேட்ட செயலை வைகோ வேண்டுமென்றே கடந்த தேர்தலில் செய்தார் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சமூகநீதியிலும், சமதர்ம சமூகத்தின் அமைவிலும் அக்கறைக் கொண்ட எவரும் வைகோவின் அரசியலில் உள்ள பொய்மையை அறியாமல் இருக்கமுடியாது.

இந்துத்துவ அமைப்பான பாஜகவுடன் கூட்டணி வைப்பது என்பது எத்தகைய தவறான செயல் என்பதை இன்குலாப் உட்பட அனைவரும் அறிவர். ஆனால் அதற்கு காங்கிரஸ் எதிர்ப்பு என்பதுதான் ஒரே காரணம் என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளமுடியாது. எங்கள் ஊரில் ஒரு சொலவடை சொல்வார்கள் 'நல்ல வாயங்கிட்ட தப்பிச்சி, நாற வாயங்கிட்ட மாட்டன கத' என்று. அதுமாதிரிதான் வைகோவின் நிலை. அதற்காக காங்கிரஸை நான் 'நல்லவாயன்' என்று சொல்ல மாட்டேன். காங்கிரஸ் தோற்றது. தமிழக மக்கள் அதற்கு தண்டனைத் தந்திருக்கிறார்கள். திமுக தோற்றது தமிழக மக்கள் அவர்களுக்கு அவர்களின் தவறானப் போக்குகளுக்குத் தண்டனை அளித்திருக்கிறார்கள். இவர்களுக்கு எதிராக நின்ற வைகோ ஏன் தோற்றார்? தோற்றவர்கள் தண்டனைப் பெற்றவர்கள் என்றால் வைகோவும் தண்டனைப்பெற்றவரே.

தண்டனைப் பெறும் அளவுக்கு வைகோ என்ன தவறு செய்தார்? அவரின் போக்குகள் சரியாக இருந்தனவா என்பதை வைகோ மறு ஆய்வு செய்ய வேண்டும். ஒரு தமிழ்த் தேசிய அமைப்பு தமிழ்நாட்டிற்கு என்னென்ன தேவை என உணர்கிறதோ அத்தனையையும் இன்றைக்கு ஜெயலலிதா அவர்கள் சுவீகரித்தார்கள். அவற்றை உடனடியாகத் தன் செயல்திட்டத்தில் வைத்தார்கள். அதனால் அவர்கள் வெற்றி எந்த கூட்டணியும் இல்லாமல் சாத்தியமாயிற்று. தற்காலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலில் மோடி அவர்களைச் சந்தித்து அவர் கொடுத்திருக்கும் தமிழகத்திற்கானத் தேவைப்பட்டியல் ஜெயலலிதாவை இன்னும் வெற்றியாளராக மாற்றக் கூடும். ஆனால் வைகோ இத்தகைய நலங்களைப் பேசுபவராக இருந்து கொண்டு அவற்றிற்கு எதிராக இருக்கக்கூடிய பாஜகவுடன் கூட்டணி வைத்து நாடகீயமான ஓர் அரசியலை நிகழ்த்துவாராயின் அவர் எப்படி வெல்ல முடியும் என்பது அறம் சார்ந்த கேள்வி.

தமிழகத்தில் தட்டையான அரசியலாளராக உருமாறி இருக்கும் தமிழருவி மணியன் வடிவமைக்கும் சிலையாக வைகோ ஆனது எந்தக் காரணத்தால்? ராஜ்நாத் சிங்கிற்கு திருநெல்வேலி இருட்டுக்கடை அல்வா கொடுத்து விருந்து வைத்து கூட்டணி பேசினார். கூட்டணியில் இருந்தார்.

தமிழீழப் பிரச்சினையில் காங்கிரஸுக்கும் பாஜகவுக்கும் எந்தவிதமான வேறுபட்ட பார்வை இருக்கிறது? இரண்டுமே தமிழீழம் அமைவதை ஏற்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்கள் வாழவேண்டும் என்று வற்புறுத்துபவை. அப்படி இருக்க ஈழவிடுதலைக்கு பாஜகவை வைகோ நம்பினார் என்பது எத்தகைய துர்கனவு. அது எதார்த்தத்தில் மிகவும் மோசமானது என்பதை மோடியின் பதவியேற்பு அன்று ஜந்தர் மந்தரில் நின்றுகொண்டு வைகோ தொண்டை தண்ணீர் வறள கத்திக்கொண்டிருந்ததிலிருந்து அவருக்கும் அவருடைய கழகக் கண்கமணிகளுக்கும் தெரிந்திருக்கும்.

மோடி தங்கியிருந்த குஜராத் இல்லத்திற்கும் ராஜ்நாத் வீட்டிற்கும் அலைந்து அவர் ஆற்றிய பணிகள் எந்தப் பயனும் தரவில்லை. பாஜகவினர் தமிழர்கள் கேட்கும் இத்தகைய எதுவும் கிடைக்காது என்பதுதான் நிஜம். வெளியுறவுத் துறை அமைச்சராக இருக்கும் சுஸ்மா சுவராஜ் இலங்கைக்கு எதிராக ஏதாவது பேச முடியுமா என்பதை யோசிப்பாரா வைகோ!

சேதுசமுத்திர திட்டம் அண்ணாவின் கனவு திட்டம் என்று வைகோ எவ்வளவு



பேசியிருப்பார் என்று வேறு எவரையும்விட அவரது மீசைக்கு அதிகம் தெரிந்திருக்கும். அந்தத் திட்டம் சுற்றுச்சூழல் பிரச்சனைக் கொண்டுள்ளது என்பதைத் தாண்டி அது தடைபடுவதற்கு இராமர் பாலம் பிரச்சினைதான் என்பதும் அந்த நம்பிக்கையைக் கைவிடாமல் பலகோடி ரூபாய் மக்கள் பணம் போனாலும் பரவாயில்லை என்று இராமர் பாலத்திற்காக வழக்காடும் பாஜகவிடம் இராமர் பாலம் என்று ஒன்று இல்லை என்று வழக்காடுவாரா வைகோ? ஆனால் கருணாநிதி அப்படி பேசியிருக்கிறார்.

கூட்டணியில் யார் வந்தாலும் போனாலும் பரவாயில்லை, நாடெங்கும் மோடி அலை வீசுகிறது எங்களுக்கானத் தொகுதிகளைக் கொடுங்கள் என்று கேட்டு இனிமேல் மதிமுகவுக்கு வசந்தகாலம் வந்துவிட்டது என்று வைகோ பாலைவனத்தில் பால்குடித்துக் கனவு கண்டாரே எந்த நியாயத்தில் அது நடந்தது? தேர்தல் அரசியல் என்பது அப்படி வைகோவை தலைகீழாக மாற்றியிருக்கிறது என்றால் எங்களுக்கு ஒரு கருணாநிதி போதும் இன்னொருவர் எதற்கு?

2002 குஜராத் கலவரங்களைக் குறித்து நாம் என்ன சொல்வது? வைகோவே பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சை பாராளுமன்றக் குறிப்பிலிருந்து

**தமிழீழப் பிரச்சினையில் காங்கிரஸுக்கும் பாஜகவுக்கும் எந்தவிதமான வேறுபட்ட பார்வை இருக்கிறது? இரண்டுமே தமிழீழம் அமைவதை ஏற்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்கள் வாழவேண்டும் என்று வற்புறுத்துபவை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எடுத்து தமிழக மக்களுக்குக் குறிப்பாக இன்குலாப் அய்யாவுக்கு தர வைகோவால் முடியுமா? சிறுபான்மை மக்களுக்கு எதிராக செய்யப்பட்ட அந்தக் கலவரங்களுக்குப் பிறகு வைகோ யாரை ஆதரித்தார்? அன்று தொடங்கிய அவர் ஆதரவு இன்றுவரை தொடர்கிறது. சிறுபான்மை இஸ்லாமியர்களுக்கு பாஜக எத்தகைய தேர்தல் வாக்குறுதிகளைத் தந்தது? சட்டத்திற்கு உட்பட்டு ராமர்கோயில் கட்டுவது, பொதுசிவில் சட்டத்தைக் கொண்டுவருவது போன்றவைதான் ஆனால் வைகோவுக்கு இதெல்லாம் உடன்பாடில்லாதவை. இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்தும் மோடி அலை மட்டும் போதும்.அந்த அலையில் எப்படியாவது வென்றுவிடலாம் பதவிக்குச் சென்றுவிடலாம் என்பதைத் தவிர அவருக்கு என்ன இருக்கிறது? அப்பாவி தமிழர்கள் அறியாமல் இருப்பதுதான் வருத்தம். ஒரு சதவீதம்கூட ஓட்டுவங்கி இல்லாமல் இருந்த பாஜக இன்று தன்னுடைய கணக்கைத் தமிழகத்தில் தொடங்கியிருக்கிறது என்றால் அதற்கு வைகோதான் காரணம்.

பாஜக கூட்டணியில் பாமக சேருகிறது. ஆதித்தமிழர்களான தலித்துகளை அவர்கள் சமீபத்தில் நடத்திய விதம் குறித்து எந்த கவலையும் இல்லாமல் அந்தக் கூட்டணியில் இருந்தார். மருத்துவர் ராமதாஸ் திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி சேரமாட்டேன் என்று மதிமுகவுடன் கூட்டணி வைத்தார். வைகோ அது பற்றி ஒரு வார்த்தை பேசவில்லை. இதற்கும் காங்கிரஸ் எதிர்ப்புதான் காரணமா எனத்தெரியவில்லை.

தர்மபுரியில் அவர்களால் திட்டமிட்டு நடத்தப்பட்டக் கொடுமையின் வெப்பம் இன்னும் கொளுத்தப்பட்ட வீடுகளின் சுவர்களிலிருந்துகூட குறையவில்லை. நத்தம் காலனியில் உள்ள மதிமுக செயலாளர் வீடு கொளுத்தப்பட்டது அது பற்றியெல்லாம் வைகோவிற்கு கேள்வி இல்லை. 300க்கும் மேற்பட்ட வீடுகள் கொளுத்தப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டு நடுத்தெருவில் இன்றும் அங்கே மக்கள் இருக்கிறார்களே அவர்களை மக்களாகப் பார்க்க வேண்டாம் குறைந்த பட்சம் ஓட்டுகளாகவாவது வைகோ பார்த்தாரா?

தலித் மக்கள் கொல்லப்பட்டால் அதைப் பற்றி அவர் பேசமாட்டார். அதைக் கண்டிக்கமாட்டார். அதற்குக் காரணமானவர்களைத் தண்டிக்கவேண்டும் என்று எண்ணமாட்டார். ஆனால் ராஜபக்சே வந்தால் மட்டும் எதிர்ப்பார். ராஜபக்சே மாதிரியே இந்திய அளவிலும் தமிழக அளவிலும் வெகுமக்களுக்கு எதிராக இருப்பவர்களுடன் கூட்டணி வைத்துக்கொள்வார். ஆனால் அவர் குரலுக்காக அவர் வெற்றிப்பெற வேண்டும் என்று நினைப்பது எப்படி என்று சரியாகும் எனத்தெரியவில்லை.

அவர் குரல் மது ஒழிப்புக்காக சப்தமிடுகிறது. அவர் கால்கள் மது ஒழிப்பிற்காக நடக்கின்றன என்கிறார்கள். எவ்வளவு அபத்தம் இது. மாறிவரும் சமூகச் சூழலில் மதுவை ஒழிக்க முடியுமா? மது ஒழிப்பு அரசியல்வாதிகளை நினைத்தால் சிரிப்பாக வருகிறது. தமிழ்நாட்டில் மது கூடாது என்பார்கள். பாண்டிச்சேரியில் மது ஒழிப்புக் குறித்துப் பேசமாட்டார்கள். தமிழகத்தில் டாஸ்மார்க் கூடாது என்பார்கள். தமிழகத்தைத் தவிர பிற மாநிலங்களில் மது இருப்பதையோ பெரிய பெரிய மதுவிடுதிகள் இருப்பதையோ அவர்கள் எதிர்க்கமாட்டார்கள். மது ஒழிப்புக் குறித்து இங்கே பேசும் யாரும் டெல்லியில் போய் மது ஒழிப்புப் போராட்டம் நடத்துவதில்லை.

மது ஆறாகப் பெருகி ஓடுவதை நான் ஆதரிக்கவில்லை. மாறாக மது குடிப்பதை, அதை விற்பதை அல்லது விற்பனை செய்யும் முறையை குறிப்பிட்ட வயதுடையவர்க்குத் தரலாம் என்னும் நிர்ணயத்தை குறித்துப் பேசலாம். ஆனால் மதுவை ஒழிக்க வேண்டும் என்பது நடக்காது அது மக்களை ஏமாற்றும் அரசியல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணு உலை எதிர்ப்பு அவர் கருத்து. அவர் கூட்டணி தலைவர் ராஜ்நாத் சிங்கின் கருத்தும் அதுதானோ? ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பு பாஜகவின் வட்ட செயலாளராவது அதை எதிர்ப்பாரா? பெரியாரியம் வைகோவின் கொள்கை. பெரியாரை செருப்பில் அடிப்பேன் என்பவர்களின் இயக்கம்தான் பாஜக. இப்படி எந்தக் கொள்கையிலும் நேர்மையாக இல்லாதவர்தான் வைகோ. அதனால்தான் அவரின் உரத்தக் குரல் அவரின் சொந்தத் தொகுதியிலேயே காணாமல் போய் விஜயகாந்த் வந்துதான் கண்டுபிடித்துத் தர வேண்டியதாயிருந்தது.

இப்படி வைகோ தவறான முடிவெடுத்ததை திமுகவோடு திருமாவளவன் கூட்டணி வைத்த கருத்தைச் சொல்லி சமனாக்கப்பார்க்கிறார் இன்குலாப் அய்யா. தேர்தல் அரசியலில் தலித் மக்கள் மட்டுமல்ல தலித் தலைவர்களும் பந்துகளாகத்தான் இருக்கிறார்கள். தாங்கள் யாருடன் கூட்டணி வைக்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானிப்பதில்லை, மாறாக திமுக அதிமுக தலைவர்கள்தான் தீர்மானிக்கிறார்கள். திருமாவளவனைப் பொறுத்தவரை அவர் ஒரு கூட்டணிக்கு முயற்சி செய்தார். கடந்த தமிழக சட்டமன்ற தேர்தலிலேயே அவர் அத்தகைய முயற்சியை எடுத்தார். தமிழீழ ஆதரவாளர்கள், தமிழ்தேசியவாதிகள் மற்றும் மார்க்சியர்கள் என்று ஓர் அணி அமைக்கலாம் என்று அவர் விடுத்த அறைகூவலை எந்தத் தமிழ்தேசியவாதிகளும் எடுத்துக்கொள்ளவில்லை.

திருமாவளவன் தமிழ்த்தேசியம் பேசினாலும், கெடுவாய்ப்பாக அவரை சாதியத் தலைவராகவே பார்க்கும் போக்கு ஊடகங்களுக்கு மட்டுமல்ல தமிழ்த்தேசியவாதிகளுக்கும் இருக்கிறது. ஏனென்றால் அவர் பேசுவது சாதியற்ற தமிழ்த்தேசியம். அது சாத்தியமற்றது. எந்தத் தலித் தலைவரும் சாதித் தலைவர் அல்ல. அவர்கள் சாதி ஒழிப்புத் தலைவர்கள். ஆனால் ராமதாஸ் போன்ற சாதித் தலைவர்களோடு சேரநினைக்கும் வைகோ போன்ற தலைவர்கள் திருமாவளவனோடு சேரமறுப்பது மிகவும் கொடுமையான செய்தி.

மேலும் திருமாவளவன் பாஜக கூட்டணியில் சேர்ந்திருந்தால் அவருக்கு கணிசமானப் பணமும் ஓட்டும் வெற்றியும் கூட கிடைத்திருக்கும். ஆனால் சாதி



எதிர்ப்பு, மதவாத எதிர்ப்பு என்னும் கொள்கைகளுக்காக அவர் அதில் சேரவில்லை. தமிழீழ ஆதரவாளர் என்ற கொள்கையின் அடிப்படையில் காங்கிரஸுடம் சேரவில்லை. தன்னிடமிருந்த பொதுவுடைமை இயக்கங்களையே கண்டுகொள்ளாமல் விட்டுவிட்ட அதிமுகவுடன் அவர் கூட்டணிப் பற்றி அறிக்கைக்கூட விட முடியாது. சாதித் தமிழ்தேசியவாதிகளும் திருமாவளவனை ஆதரிக்கவில்லை. அப்படி என்றால் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி என்ன செய்ய முடியும். ஊர்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட சேரிகளைப் போலத்தான் அது தனியே இருக்க வேண்டும்.

அதனால்தான் ஊழல் என்ற பொதுவிதியைத் தாண்டி சமூகநீதி, தமிழர்நலம், தமிழீழ ஆதரவு (தேர்தல் நேரத்திலேனும்), என்று தன் கொள்கைகளுடன் கொஞ்சம் நெருக்கமாக இருக்கிற திமுகவுடன் அவர் கூட்டணி அமைந்தது. அதை வைகோவின் பாஜக கூட்டணியோடு பொருத்திப் பார்ப்பது நியாயமாக இருக்காது என்றே படுகிறது. ஆனால் திமுக அவரை நடத்திய மிக மோசமான முறைகளையும் பார்க்கவேண்டியிருக்கிறது, ஓரிடம் வாங்குவதற்காக அவர் பட்டபாடு தலித்துகள் எத்தகைய அறிவும் திறனும் கல்வியும் வாய்க்கப்பட்டிருந்தாலும் சாதி இந்துக்கள் அவர்களைத் தலைவர்களாக ஏற்கமாட்டார்கள் என்று அம்பேத்கர் சொன்னது எத்தகைய உண்மையான சமூக ஆய்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நூறு வானவில்

வானவில்லில்
நிறம் தோய்த்து
வரைந்திருக்க வேண்டும்
உன்னை

கையில் கிடைத்திருப்பதோ
ஒற்றைக் கரிக்குச்சி

காதலின் மீது
பாரத்தைப் போட்டு
வரையத் தொடங்கினேன்

புள்ளிகள்
கோடுகள்
வளைவுகளெனத் தொடங்கி
வரைந்து முடித்தேன்
ஒருவாறு
உன் விஷயத்தை

இப்போது உன் புன்னகையில்
ஒரு நூறு வானவில்

நான்
மீனைத்தான் கேட்டேன்
நீ
தூண்டிலைத் தருகிறாய்

இப்படித்தான்
நான்
வரத்தைக் கேட்டால்
சாபத்தைத் தருவது
வாடிக்கையாகிவிட்டது
இந்த வாழ்க்கைக்கு

வரமோ சாபமோ
இட்டு நிரப்புவது
நீ என்றால்

எடுத்து வைக்கிறேன்
என் பாத்திரத்தை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுக் கழிவா? கல்லறையா?

தேனி மாவட்டத்தில், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில், பூமியின் அடி ஆழத்தில் தோண்டப்படும் குழி, நியூட்ரினோ ஆய்வு மையத்திற்காக என்று சொல்லப்பட்டாலும் கூட, அங்கே கூடங்குளம் அணுக் கழிவைப் புதைக்க திட்டமிடுகிறார்கள் என ஒரு வலுவான சந்தேகத்தை, கேரள மாநிலத்தின் முன்னாள் முதல்வர் அச்சுதானந்தன் எழுப்புவது கூர்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.


கூடங்குளத்தில், முதல் இரண்டு அணு உலைகளுமே முறையாக, முழுமையாக செயல்படத் துவங்காத நிலையிலும், வணிகரீதியாக மின்உற்பத்தியைத் தொடங்காத நிலையிலும், தேர்தல் காலத்தில், முந்தைய காங்கிரஸ் அரசு, அவசரம் அவசரமாக மேலும் இரண்டு அணு உலைகளுக்கு ஒப்பந்தம் போட வேண்டிய அவசியம் என்ன என்பது புரியாத புதிராகவே உள்ளது.

இன்றைய காலகட்டத்தில், வீடு கட்டுபவர்கள்கூட, ஒரு கழிவுநீர் தொட்டிக்கான இடத்தை ஒதுக்கிவிட்டு, அதன்பிறகே வீடு கட்டுகிறார்கள். ஆனால், இரண்டு 1000 மெ.வா. அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ள கூடங்குளத்தில், அணுக் கழிவை என்ன செய்ய வேண்டும் என்கிற தெளிவோ முன்கூட்டிய திட்டமிடலோ இல்லை என்பது மிகவும் வேதனைக்குரியது.

கூடங்குளம் அணு உலைகளின், 'அணுக் கழிவு மேலாண்மை' (*Nuclear Waste Management*) பற்றிய எந்தத் தகவலும், அணு ஆற்றல் துறையில் பொறுப்பான அதிகாரிகளிடமிருந்தோ, அரசிடமிருந்தோ இன்றுவரை வெளிப்படையாகச் சொல்லப் படவில்லை.

அணு ஆற்றல் துறையில் உயர் பொறுப்பு வகித்த முன்னாள் அறிவியலாளர் ஒருவர், 'அணுக் கழிவை அப்படியே ஓர் உருண்டையாக உருட்டி, வீட்டு வரவேற்பறையில் வைத்துக் கொள்ளும் அளவிற்கு தொழில்நுட்பம் முன்னேறிவிட்டது' என்று சொல்லி மக்கள் அனைவரையுமே அடி முட்டாளாக அடித்திருக்கிறார்.

இந்த நிலையில், அதே வளாகத்தில், மேலும் இரண்டு அணு உலைகள் என்றால்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றைய காலக்கட்டத்தில், வீடு கட்டுபவர்கள்கூட, ஒரு கழிவுநீர் தொட்டிக்கான இடத்தை ஒதுக்கிவிட்டு, அதன்பிறகே வீடு கட்டுகிறார்கள். ஆனால், இரண்டு 1000 மெ.வா. அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ள கூடங்குளத்தில், அணுக் கழிவை என்ன செய்ய வேண்டும் என்கிற தெளிவோ முன்கூட்டிய திட்டமிடலோ இல்லை என்பது மிகவும் வேதனைக்குரியது.**

அணுக் கழிவுகளின் அளவும் கூடத்தானே செய்யும். அணு உலைகளின் ஆபத்துகளைப் பற்றி எத்தனையோ நேர்மையான அறிவியலாளர்களும், சமூக ஆர்வலர்களும் பதிவு செய்துவிட்டார்கள். அணு உலைகள் ஏற்படுத்தும் ஆபத்திற்கு, சற்றும் குறைந்தது அல்ல, அணுக் கழிவுகள் ஏற்படுத்தும் ஆபத்து என்பதால், 'அணுக் கழிவு மேலாண்மை' பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

இன்றைய மனித வாழ்க்கை மின்மயமாகி விட்டது. மின்சாரம் இல்லையென்றால், உயிர் வாழ முடியாது என மக்கள் நினைக்கும் அளவிற்கு, அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில், மின்சாரத் தேவை ஏற்பட்டு விட்டது. ஒருமணி நேரம் மின்வெட்டு என்றால்கூட அமைதி இழந்து தவிக்கும் தனிமனித உணர்வையே, அரசுகளும், அறிவியலாளர்களும் மூலதனமாக்கி அணு உலைகளை அமைத்து வருகிறார்கள்.

கூடங்குளம் அணு உலைகள் இயங்கத் துவங்கிவிட்டால், எந்நேரமும் தடையில்லா மின்சாரம் வந்து, வாழ்வு சொர்க்கமாகிவிடும் என மக்களை நம்ப வைத்து, அதில் வெற்றியும் கண்டுவிட்டார்கள் ஆட்சியாளர்கள். அதனால்தான், உண்மையை எவ்வளவு உரத்துக் கூறினாலும், அது மக்கள் காதில் விழுவதே இல்லை.

அணு உலைகள் வேண்டாம் என கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் மறுத்த பிறகு, தமிழ்நாட்டை ஆண்ட/ஆளும் 'அறிவுஜீவிகள்', அவற்றைக் கூடங்குளத்திற்குக் கொண்டுவந்துவிட்டார்கள். 'சிந்திக்கும் வேலை' தலைமைக்கானது எனவும் பழைய மன்னராட்சி காலம் போல, தலைவன்/தலைவி சொல்லிவிட்டால், அது அனைத்துமே வேதம் என நம்புவதும்தான் தமிழனின் தனித்த அடையாள குணமாக மாறிவிட்டது என்பதும் அவலம்.

அணுக் கழிவு என்பது, வீட்டின் பின்புறமோ, ஊரின் ஒதுக்குப் புறமோ கொட்டும் குப்பைகள் போன்றதல்ல. அதனைப் புரிந்துகொண்ட காரணத்தாலேயே, கூடங்குளம் அணுக் கழிவை, கோலாரில் புதைக்கப் போகிறார்கள் என்ற செய்தி பரவிய உடனேயே, கர்நாடகம் கொந்தளித்தது. அதே வேளையில், எத்தனை அணு உலைகளை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள், அணுக் கழிவையும் இங்கேயே புதைத்துக் கொள்ளுங்கள் என்கிற அளவிற்கு தாராள குணம் உள்ளவர்களாக தமிழக மக்கள் இருக்கிறார்கள்! படமெடுத்தாடும் கருநாகப் பாம்பின் முன் அமர்ந்து, சிரித்து விளையாடும் சிறு குழந்தை போலத்தான் தமிழக மக்களை எண்ணி, வேதனைப்பட வேண்டியுள்ளது.

அணு உலைகளை வேண்டாம் என்று மறுத்த மாநிலங்கள், கூடங்குளத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில், தங்கள் பங்கைக் கேட்கத் தயங்குவதில்லை என்பதில் உள்ள அரசியலைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அணு உலைகளில், எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் யுரேனியம் 235 கழிகளே, பயன்பாட்டிற்குப் பிறகு (*Spent fuel*) அணுக் கழிவு எனப்படுகிறது. அணுக் கழிவு, மிகவும் ஆபத்தான கதிர்வீச்சுகளை, நீண்ட நெடிய காலத்திற்கு வெளிப்படுத்தும் பல்வேறு ரேடியோ அய்சடோப்புகளை உள்ளடக்கியது.

அணுக் கழிவில் உள்ள புளுட்டோனியம் 239 மனிதர்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் மிகப்பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கதிர்வீச்சுகளை, பல்லாயிரம் ஆண்டுகள் தொடர்ந்து வெளிப்படுத்தக் கூடியது. (அணுகுண்டு செய்வதற்கு புளுடோனியம் 239 பயன்படுகிறது என்பதைக் கவனம் கொள்ள வேண்டும்.) மற்ற ரேடியோ அய்சடோப்புகள், பல லட்சம் ஆண்டுகள், கதிர்வீச்சுகளை வெளிப்படுத்தக் கூடியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேடியோ அய்சடோப்புகளில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சுகளை, எந்த விதத்திலும் தடுத்து நிறுத்த முடியாது. எனவேதான், வெளிப்படும் கதிர்வீச்சுகள், வெளியே வந்து ஆபத்தை ஏற்படுத்தாத வகையில், அணுக் கழிவை, கொள்கலனில் போட்டு நன்றாக மூடி, பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஆபத்தான அணுக் கழிவுகளை, ஆபத்தில்லாமல் பாதுகாக்க கையாளப்படும் வழிமுறைகளே, 'அணுக் கழிவு மேலாண்மை' எனப்படுகிறது. அதுவிரிவானதும், சிக்கலானதும் ஆகும். என்றபோதும், சுருக்கமாக, புரிந்து கொள்ளும் விதத்தில் 'அணுக் கழிவு மேலாண்மை'யின் வழிமுறைகளை இங்கே காணலாம்.

ரேடியோ அய்சடோப்புகளின் ஆயுள், அவை வெளிப்படுத்தும் கதிர்வீச்சுகளின் செறிவு, ஊடுருவுதிறன் ஆகியவற்றின் அடிப்படையில், தாழ்நிலைக் கழிவு *(Low level waste)*, இடைநிலைக் கழிவு *(Intermediate level waste)*, உயர்நிலைக் கழிவு *(High level waste)* என மூன்று விதமாக அணுக்கழிவு வகைப்படுத்தப்படுகிறது. அதன் அடிப்படையிலேயே அணுக்கரு மேலாண்மையும் அமைகிறது.

தாழ்நிலை அணுக்கழிவை, ஒரு ஸ்டீல் உருளையில், ஒரு மந்த வாயுவோடு *(imert gas)* சேர்த்து, அடைத்து, மூடி, பின் அந்த உருளையை, கனமான கான்கிரீட் உருளைக்குள் இட்டு மூடிவிடலாம். கான்கிரீட் உருளை, கதிர்வீச்சுகள் வெளியேறாமல் தடுக்கும் கவசமாகப் *(Shield)* பயன்படுகிறது. இந்த உருளைகளை, அணு உலைகள் அமைந்திருக்கும் வளாகத்திலேயே, பூமியின் மேற்பரப்பிலேயே வைத்துப் பாதுகாக்கலாம்.

இடைநிலைக் கழிவுகள், கடினமான பாறைகளைக் கொண்ட திடமான பகுதியைக் கண்டறிந்து, 1000 மீட்டர் (3300 அடிகள்) ஆழத்திற்கு துளையிட்டு, அதன் அடிப்பகுதியில், அறைகளை உருவாக்கி, அவற்றில் புதைத்து வைப்பதன் மூலம் பாதுகாக்கப்படலாம்.

அதிக கதிர்வீச்சுத் திறனும், நீண்ட ஆயுளும் கொண்ட, 'உயர்நிலைக் கழிவுகளை' கையாள்வதும், பாதுகாப்பதும் மிகவும் சிக்கலானதாகும். அதற்காகப் பரிந்துரைக்கப்படும் சில வழிமுறைகளைக் காணலாம்.

பூமியில் 5 கி.மீ (3.1 மைல்) ஆழத்திற்கு, ஆழ்துளைக் கிணறு தோண்டி, அதன் அடித்தளத்தில், உயர்நிலைக் கழிவைப் புதைத்து வைக்கலாம்.

வடஅட்லாண்டிக் பெருங்கடலில், தரைப்பகுதியில், குறிப்பிட்ட இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எத்தனை அணு உலைகளை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள், அணுக் கழிவையும் இங்கேயே புதைத்துக் கொள்ளுங்கள் என்கிற அளவிற்கு தாராள குணம் உள்ளவர்களாகத் தமிழக மக்கள் இருக்கிறார்கள்! படமெடுத்தாடும் கருநாகப் பாம்பின் முன் அமர்ந்து, சிரித்து விளையாடும் சிறு குழந்தை போலத்தான் தமிழக மக்களை எண்ணி, வேதனைப்பட வேண்டியுள்ளது.**

அணுக் கழிவைப் புதைத்தால், பூமிப்பாளங்கள் நகர்வதன் காரணமாக அணுக்கழிவும் மெல்ல மெல்ல நகர்ந்து, பூமியின் கடினமான உட்பகுதியை அடைந்துவிடும் என நம்பப்படுகிறது.

'செயற்கைத் தனிம மாற்ற' முறையில், ஒருசில ரேடியோ அய்சடோப்புகளை, குறை கதிர்வீச்சுத்திறன் கொண்ட தனிமமாக மாற்றி பின் பாதுகாக்கலாம்.

அணுக் கழிவை, ராக்கெட்டுகளில் எடுத்துச்சென்று, மற்ற கோள்களில் கொட்டும் திட்டமும்கூட கொள்கை அளவில் உள்ளது. இடையில் விபத்து ஏற்படுமானால், கதிர்வீச்சு பூமியெங்கும் பரவிவிடும் ஆபத்தும் இதில் உண்டு.

ஆக, அணுக் கழிவைப் பாதுகாப்பது என்பது சிக்கலானதும், ஆபத்தானதும், பெரும் பொருட்செலவை ஏற்படுத்துவதும் ஆகும். ஏதோ ஒரு முறையில், அணுக் கழிவைப் புதைத்து வைத்துவிட்டு, அதை மறந்து இருந்துவிட முடியாது. தொடர்ந்து அதனைக் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். அதில் கவனக்குறைவு ஏற்படுமானால், பெரும் விபத்து ஏற்படுவது தடுக்க முடியாததாகிவிடும்.

அப்படி கவனக்குறைவு காரணமாக ஏற்பட்ட விபத்து ஒன்று பற்றிக் குறிப்பிடுவது, பொருத்தமானதாக இருக்கும். அமெரிக்காவிற்கும், சோவியத் ஒன்றியத்திற்கும் இடையில், பனிப் போர் (*Cold war*) நிகழ்ந்து கொண்டிருந்த காலக்கட்டம் அது. அணு ஆயுதப் போட்டியில் விரைந்து ஓட வேண்டிய நெருக்கடி, சோவியத் ஒன்றியத்திற்கு ஏற்பட்டது அதன் காரணமாக 'மாயக்' வளாகத்தில் ஆறு அணு உலைகள், அவசரமாகக் கட்டப்பட்டன. அவற்றின் அணுக் கழிவுகள் அதே வளாகத்தில், பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டன.

'சிதைவு வெப்பம்' (*decay heat*) காரணமாக, அணுக்கழிவு தன்னைத் தானே சூடாக்கிக் கொண்டது. அதனால், அணுக் கழிவுத் தொட்டிகளைச் சுற்றி, குளிர்நீர் சுழலும், குளிர்விப்பான் (*cooler*) வசதியும் செய்யப்பட்டது. பராமரிப்பதற்கு ஆட்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஒரு 'குளிர்விப்பான்' செயல் இழந்ததைக் கவனிக்காமல் விட்டுவிட்டதன் காரணமாக ஒரு 'வேதியல் வெடிப்பு' (*Chemical explosion*) நிகழ்ந்தது. அதனால், அந்த அணுக் கழிவுத் தொட்டியின், 160 டன் எடை கொண்ட கான்கிரீட் மூடி காற்றில் தூக்கி வீசப்பட்டது.

அதன் உடனடி நிகழ்வாக, கதிரியக்க அய்சடோப்புகளைக் கொண்ட அணுக் கழிவு, மொத்தமாகத் தூக்கி வீசப்பட்டது. அதன் பெரும்பகுதி, அருகிலேயே விழுந்துவிட்டது. ஒரு பகுதி மட்டும், 'கதிர்வீச்சு மேகமாக' மாறி அடுத்த 10மணி நேரத்தில், வடகிழக்கில் 350 கி.மீ தொலைவு நகர்ந்து விட்டது.

கதிர்வீச்சு மேகத்தின் வீழ்படிவு காரணமாக, புற்று நோய்க்குப் பலியாகி 50 பேர் மாண்டனர். 10,000 பேர், அவர்களது ஊர்களில் இருந்து, காரணம் ஏதும் சொல்லாமலேயே ஆடு, மாடுகளைப் போல அப்புறப்படுத்தப்பட்டனர். 4,70,000 பேர் கதிர்வீச்சிற்கு உள்ளாயினர்.

கதிர்வீச்சு மேகத்தின் வீழ்படிவு காரணமாக, 24,000 ச.கி.மீ.பரப்பு, 'நிரந்தர கதிர்வீச்சு மாசுப்பகுதியாக' (*Permanent Radiation contaminated Area*) அறிவிக்கப்பட்டு, தடை செய்யப்பட்டது. விபத்து நடந்த 'மாயக்' உட்பட 20 கிராமங்களும், 30 இனங்களும் சோவியத் நாட்டின் வரைபடத்திலிருந்தே நீக்கப்பட்டு விட்டன!

மொத்தமாக விழுந்த அணுக் கழிவை, மண்ணோடு வெட்டி எடுத்து, ஓரிடத்தில் குழிதோண்டி, அதில் புதைத்து, மூடி பின் அந்தப் பகுதி முழுவதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்வேலி அமைத்து, அப்பகுதியைத் தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவித்து விட்டனர். மேலும் அதனை 'பூமியின் கல்லறை' எனப் பெயரிட்டு அழைத்தனர்!

1957 ஆம் ஆண்டு நிகழ்ந்த இந்த விபத்து பற்றிய உண்மைகளை ஏறத்தாழ 20 ஆண்டுகள், மக்களிடமிருந்து மறைத்துவிட்டனர். *Zhores Mededev* என்கிற ரஷ்ய வரலாற்று ஆய்வாளர்தான் இதனை வெளிஉலகிற்கு முதன்முதலில் கொண்டு வந்தவர்.

பகைநாடானாலும்கூட அமெரிக்காவும், இந்த விபத்து பற்றிய உண்மைகளை 1959 ஆம் ஆண்டு முதலே தெரிந்திருந்த போதும், இரகசியமாகவே வைத்திருந்தது. நம் ஊரில் சொல்வார்களே, 'கூட்டுக் களவாணிகள்' என்று, அது இவர்களுக்குக் கச்சிதமாகப் பொருந்தும்.

ஆக, அணுஉலைகளும் சரி, அணுக் கழிவுகளும் சரி, அறிவியல் ரீதியாக, அவை ஒரே இடத்தில் சேமித்து வைக்கப்படும் பல அணுகுண்டுகளுக்குச் சமம் எனக் கருதலாம்.

பெரு வெள்ளம், புயல், சுனாமி, நிலநடுக்கம், எரிமலை போன்ற இயற்கைப் பேரழிவுகளில், மக்கள் பெருமளவில் மரணமடைவது இல்லையா என மிகவும் புத்திசாலித்தனமாக (தந்திரமாக/ முட்டாள்தனமாக) அணு உலை ஆதரவாளர்கள் கேட்பது உண்டு.

அனைத்து வகையான இயற்கைப் பேரழிவிற்குப் பின்னர், சில நாட்களில், சில வாரங்களில் அல்லது சில மாதங்களில், பேரழிவு ஏற்பட்ட பகுதிகளில், மக்கள் மீண்டும் குடியேறி, வழக்கமான வாழ்க்கையை வாழ முடியும். ஆனால், அணுஉலை, அணுக் கழிவு காரணமாக விபத்து ஏற்படுமானால், அங்கிருந்து அப்புறப்படுத்தப்படும் மக்கள், லட்சம் ஆண்டுகளுக்குப் பிறகும்கூட, அங்கே மீண்டும் சென்று வாழ முடியாது. இது மிகைப்படுத்தல் அல்ல, நிஜம் என்பதற்கு, மாயக், செர்னோபில், ஃபுகுஷிமா விபத்துக்கள் சாட்சிகளாக, நம் முன் நிற்கின்றன. இவற்றைப் புரிந்துகொள்வதற்கு, மக்கள் கண்களை மறைத்திருக்கும் 'அணு மின்சாரம்' என்கிற மாயத் திரை அகல வேண்டும். அறிவியலைப் பயன்படுத்தும் அரசியல் தப்பானதாக இருக்குமானால், அது அழிவியலை நோக்கியே இட்டுச்செல்லும் என்பது மட்டும் உறுதி.

●

## காக்கையின் கோரிக்கை




**காக்கைச் சிறகினிலே இதழுக்கு படைப்புகள் அனுப்புவோர் கவனத்திற்கு:**

படைப்பாளிகள் பக்க வரையறையைத் தீவிரமாகக் கவனத்தில் கொள்க. உங்கள் படைப்பு ஐந்து பக்கங்களுக்கு மிகாமல், (ஏறக்குறைய 750 வார்த்தைகள்) கணினி அச்சில் இருத்தல் அவசியம்.

படைப்புகளை எழுத்துப்பிரதியாக அனுப்புவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம். யுனிகோட் எனப்படும் ஒருங்குறி எழுத்துருவில் கணினி அச்சு செய்து அனுப்பவும். படைப்புகளை அனுப்புவோர் தங்களுக்கான பிரதியை வைத்துக் கொள்ளவும். வெளியிடுவதற்குத் தேர்வு பெறாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

உங்கள் படைப்பு வெளியிடுவதற்குத் தேர்வு பெற்றதா, இல்லையா என்பது குறித்து, படைப்பை அனுப்பிய ஒரு மாத காலத்திற்குப் பிறகு, தொலைபேசியில் (9841457503) தொடர்பு கொண்டு கேட்டறியலாம்.

கவிதை, சிறுகதை, கட்டுரை என உங்கள் படைப்பு எதுவாயிருப்பினும், நீங்களே ஓரிரு முறை படித்துப் பார்த்து, ஒற்று உள்பட மெய்ப்புத் திருத்தி அனுப்புமாறு கோருகிறோம்.

படைப்பை ஏற்பதும் நிராகரிப்பதும் ஆசிரியர் குழுவின் இறுதி முடிவுக்கு உட்பட்டது என்ற இதழியல் உலகின் மரபையும் ஜனநாயகத்தையும் மதித்துப் போற்றும் பண்பாடு நிறைந்தவர்கள் படைப்பாளிகள் என்று காக்கை முழுமையாக நம்பிக்கை கொள்கிறது.

இதழ் குறித்த தங்களது கருத்து அல்லது விமர்சனத்தை ரத்தினச் சுருக்கமாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். 60 முதல் 100 வார்த்தைகளுக்குள் இருத்தல் நலம். அதிகமான வர்களின் கருத்துகளை வெளியிடுவதற்கு இது உதவியாக அமையும்.


பிரபல சிற்றிதழ்கள் போல, விரிந்த கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளத்துடன் இயங்கும் நிலையில் காக்கை இல்லை. வெகுசில தன்னார்வலர்களின் கூட்டு முயற்சியில் இந்த இதழ் வெளிவருகிறது. முன்னும் பின்னும் அறிந்து ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பை அளிக்குமாறு படைப்பாளிகளையும் வாசகர்களையும் காக்கை நிமிர்ந்து கோருகிறது.

– ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உணர்வும் நன்னடத்தையும்

மதுரை தியாகராசர் கல்லூரிக்கு 1965–66இல் புதிய முதல்வராக நாங்கள் எல்லாம் ஆவலோடு எதிர்பார்த்த, ஏ.சி.செட்டியார் என்றழைக்கப்பட்ட அ.சிதம்பரநாதன் செட்டியார் வந்தார். அ.சிதம்பரநாதன் யாப்பிலக்கணத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். தமிழைப் போலவே ஆங்கிலத்திலும் சரளமாக உரையாற்ற வல்லவர். அழகிய தோற்றமும், வாய்பொங்கி வழியும் புன்னகையும் அவரை யாருக்கும் நெருக்கமானவராக நினைக்க வைக்கும். தமிழ் இலக்கிய மாணவர்களுக்கு அவருடைய தீவிரத் தமிழ் உணர்வு பற்றிக் கதைகதையாகச் சொல்லப்பட்டது.



தியாகராசர் கல்லூரி தமிழ்த்திறன் மிகுந்த ஒருவரை அடையாளம் கண்டு முதல்வராகப் பதவியில் அமர்த்தியது தமிழ் இலக்கிய மாணவர்களால் பாராட்டப்பட்டது.

அந்த ஆண்டு எங்களுடைய விடுதிக்காப்பாளர் அ.கி.பரந்தாமன் அவர்களுக்குத் தமிழக அரசு விருது தந்தது. அவருடைய சிறுவர்களுக்கான பாடல் தொகுப்புக்காகத் தரப்பட்ட இலக்கிய விருது அது. நாங்கள் தை விழாவாகக் கொண்டாடினோம். கல்லூரி முதல்வர் அ.சிதம்பரநாதன் அந்தப் பாராட்டுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

கி.பரந்தாமனாரின் பரிசுபெற்ற அத்தொகுப்பை வெகுவாகப் பாராட்டியதோடு, அத்தொகுப்பில் உள்ள ஒரு பாடலை சந்த நயத்தோடு பாடிக்காட்டியது என் நினைவில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பாடல்,

'சங்குச் சக்கர சாமி வந்து
சிங்குச் சிங்குன்னு பாடிச்சாம்'

என்று தொடங்கும். அவர் தமது நீங்காத சிரிப்போடு கிட்டத்திட்ட நடனம் ஆடுவது போன்ற பாவனையுடன் பாடினார்.

இன்றைய மதுரை காமராசர் பல்கலைக் கழகம் அன்று மதுரைப் பல்கலைக்கழகம் என்னும் பெயரில் இயங்கி வந்து ஓரிரண்டு ஆண்டுகள் ஆகி இருக்கலாம். அந்த இறுதியாண்டில் பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் துணைவேந்தராகப் பதவியேற்றார். தீவிரக் காங்கிரஸ் எதிர்ப்பிலும், இந்தி எதிர்ப்பிலும் நின்ற எங்களுக்குக் காங்கிரஸ் சார்பாளர் – வடமொழி ஆதரவாளர் என்று அறியப்பட்ட தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின் பதவி ஏற்பு, விரும்பத்தக்கதாக இல்லை.

தெ.பொ.மீ. என்று அழைக்கப்பட்ட தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின் புலமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தும் ஆராய்ச்சித்திறன் குறித்தும் அப்போது எனக்கு ஒன்றும் தெரியாது. உணர்வுமிக்க தமிழறிஞர்களால் வெறுக்கப்பட்ட தெ.பொ.மீயை நானும் வெறுத்தேன். பெரும்பாலான தமிழ் இலக்கிய மாணவர்களின் எதிர்ப்பாக என் எதிர்ப்பும் இருந்தது.

நான் எம்.பில் ஆய்வு மாணவனாக இருந்தபோதுதான் தெ.பொ.மீ.யின் நூல்களோடு எனக்கு அறிமுகம் ஏற்பட்டது. எம்.பில் வகுப்பில் சேர நேர்ந்ததே ஒரு தனிக்கதை. அதைப் பிறகு எழுதுவேன். தெ.பொ.மீ.யின் புலமை ஆழத்தையும், வாதத் திறனையும் அவருடைய 'வள்ளுவரும் மகளிரும்' என்னும் நூலைப் படித்தபோது உணர்ந்து வியந்து போயிருக்கிறேன் – அவருடைய ஆய்வு முடிவுகளோடு எனக்கு உடன்பாடில்லாவிட்டாலும்கூட.

தெ.பொ.மீ.யின் பதவி நியமனத்தைக் கண்டித்து எழுதப்பட்ட கவிதை ஒன்று அச்சடிக்கப்பட்டு எங்கள் கல்லூரியில் வழங்கப்பட்டது. அதன் படி ஒன்று எனக்கும் தரப்பட்டது. அத்துண்டறிக்கையின் தலைப்பு எனக்கு இன்றும் நினைவில் உள்ளது. 'கவின் தமிழ்ச் சோலைக்குள் காட்டெருமை நுழைகிறது'. தனித்தமிழில் அக்கவிதை இயற்றப்பட்டது. பாவலரேறு பெருஞ் சித்திரனாரின் 'தென்மொழி' ஏடு தனித்தமிழ்ப் பற்றுக் கொண்ட மாணவர்களால் ஆர்வத்துடன் படிக்கப்பட்டது. அதன் தூய தமிழ்நடையில் ஒருசில மாணவர்கள் பாக்களை யாக்கவும் செய்தனர். தனித்தமிழ் முயற்சிகளில் எனக்கு மதிப்பிருந்தாலும் அதில் நான் எதையும் எழுதவில்லை. இயன்ற மட்டும் வடசொல் உட்படப் பிற சொற்களைத் தவிர்த்து எழுதினாலும், தனித்தமிழில் எழுதுவது எனக்குச் செயற்கையாகத் தோன்றியது. தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் கலைச் சொல்லாக்கங்களைச் சேர்ப்பதற்குத் தனித்தமிழ் இயக்கம் இன்றியமையாதது என்று கருதுகிறேன். ஆனால் முழுக்க முழுக்கத் தனித்தமிழ் என் முயற்சியில் இருந்ததில்லை.

'தென்மொழி' ஆர்வலர் யாராலோ எழுதப்பட்ட பாடல் அது. எங்கள் கல்லூரித் தமிழ் இலக்கிய மாணவர்கள் யாராலும் அது இயற்றப்படவில்லை. யாரேனும் எழுதி இருந்தால் என்னிடம் சொல்லி இருப்பார்கள். கமுக்கமாகச் செய்யும் திறன் எங்கள் வட்டத்தைத் தவிர வேறு யாரிடமும் இல்லை. அதனால் அந்தத் துண்டறிக்கை எங்களிடையேகூட ஒரு பரபரப்பைத் தோற்றுவித்தது. கல்லூரியும் கொஞ்ச நேரத்தில் களேபரப்பட்டது.

அந்த முற்பகலில், நான் வகுப்பில் இல்லை. நூலகத்தில் இருந்தேன். 'போரடிக்கும்' பேராசிரியர் வகுப்பில் இருந்தால் நூலகத்திற்குள் நுழைந்து விடுவேன். முதல்வரின் பணியாளர் ஒருவர் என்னை நூலகத்தில் கண்டுபிடித்து விட்டார். 'முதல்வர் அவசரமாகக் கூப்பிடுவதாகச்' சொன்னார். நான் போனேன்.

முதல்வர் அ.சிதம்பரநாதனும் சூழ இரண்டு பேராசிரியர்களும் இருந்தனர். முதல்வரின் முகத்தில் வழக்கமான பெருஞ் சிரிப்பு இல்லை. அதுவரை நான் காணாத ஒரு முகமாக இருந்தது. எனக்கு நன்கு அறிமுகமான அப்பேராசிரியர்களின் முகங்களும் முதல்வரின் முகத்தைப் படி எடுத்திருந்தன. என்னைக் குற்றவாளியைப் போலப் பார்த்த முதல்வர் சிவப்பு வண்ணத்தில் அச்சடிக்கப்பட்ட அத்துண்டறிக்கையை என்னிடம் நீட்டினார்;

"சொல்லு. இதை யார் எழுதுனது?"

"எனக்குத் தெரியாது"

"அப்போ இதைப் படிச்சிருக்க?"

"ஆமாம்..."


"நீ எழுதாம இதை யார் எழுதுனது?"

எனக்கு வேறு பதில் இல்லை; சொன்னேன்:

**தெ.பொ.மீ. என்று அழைக்கப்பட்ட தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின் புலமை குறித்தும் ஆராய்ச்சித்திறன் குறித்தும் அப்போது எனக்கு ஒன்றும் தெரியாது. உணர்வுமிக்க தமிழறிஞர்களால் வெறுக்கப்பட்ட தெ.பொ.மீயை நானும் வெறுத்தேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"யாரோ தமிழ் மீது பற்றுக் கொண்டவன் எழுதி இருக்கான்."

அ.சிதம்பரநாதனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. என் பதில் அவருக்குச் சினமூட்டியது என்பது மட்டும் நிச்சயம். அவருக்கு என்னைப் 'போ' என்று வாயால் சொல்லத் தோன்றவில்லை. சுட்டு விரலைக் கதவை நோக்கிக் காட்டினார். நான் எதுவும் பேசாமல் வெளியேறினேன்.

முன்னரே எழுதியபடி மதுரையில் என் 'அண்ணனின்' அறையிலிருந்து வேறோர் விடுதியில் நண்பர்களோடு அறை எடுத்திருந்தேன். என் தங்கையின் கணவரை நான் அண்ணன் என்றுதான் சொல்லுவேன். தமிழ் மரபுப்படி அவரை அண்ணன் என்ற உறவில் வைத்துப் பேசுவதுதான் சரியானது. அவர் என் தாயாரின் கூடப்பிறந்த தங்கையின் மகன். எனக்குச் சின்னம்மாவின் மகன். சின்னம்மாவை எங்கள் ஊரில் 'சாச்சி' என்பார்கள். சிற்றப்பாவைச் 'சாச்சா' என்பார்கள். என் தங்கையை அவர் மணந்தார். அதனால், அண்ணன் உறவு போய் மச்சான் உறவு வந்துவிட்டது. எனினும் என் தங்கை பிறப்பதற்கு முன்பே அவரை அண்ணன் என்று விளித்துத்தான் பழக்கம். அவ்விளிப்பே நீடித்தது. அண்ணன் அறையிலிருந்து நான் வெளியேறியதற்கு அந்த விடுதிக்கு அடுத்திருந்த ஒரு பெண்ணின் என்மீதான ஒருதலைக் காதல் காரணமாய் இருந்தது. இளம் வயதில் எனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தின் காரணமாக எந்தப் பெண்ணின் 'உறவிலும்' எனக்கு ஈடுபாடு ஏற்படவில்லை. நான் ஓடி ஓடிப் போயிருக்கிறேன்.

போராட்டத்தின் காரணமாக அரையாண்டுத் தேர்வில் குறைந்த மதிப்பெண்தான் வாங்கியிருந்தேன். முதல்வர் அ.சிதம்பரநாதன் தேர்வு விடைத்தாள்கள் வந்த அடுத்தநாள் என்னைக் கூப்பிட்டனுப்பினார். போன என்னிடம், "மதிப்பெண் குறைந்துள்ளது. உன்னைப் பல்கலைக் கழகத் தேர்வுக்கு அனுப்ப முடியாது" என்றார். என்னைப் போலவே வேறு சில மாணவர்களும் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர். நண்பர் காளிமுத்து சிறையிலிருந்து விடுதலையாகி வந்ததால் தேர்வு எழுதினாரா என்று எனக்கு நினைவில் இல்லை. என்றாலும் முதல்வரின் எச்சரிக்கை என்மீதானதுதான் என்று கருதினேன். தமிழ்ப் பேராசிரியர்களின் பரிந்துரைகளின் பேரில் என்னைத் தேர்வுக்கு முதல்வர் அனுமதித்தார்.

தேர்வுக்கு ஒன்றரை மாதந்தான் இருந்தது. மதுரை நகரின் ஆரவாரமிக்கப் பகுதியில் இருந்த விடுதியில் இருந்து ஆழ்ந்து படிக்க முடியாதென்று முடிவு செய்தேன். விடுதியை விட்டு வெளியேறி, தியாகராசர் கல்லூரிக்கு அருகில் உள்ள ஐராவதநல்லூர் என்ற சிற்றூரில் அறை எடுத்துத் தங்கினேன். அந்த அறை ஒரு தென்னந்தோப்புக்குள் இருந்தது. அந்தச் சூழல் எனக்குப் பிடித்திருந்தது. அறைக்கு அவ்வப்பொழுது தோழர்கள் அசன் முகமது, சொக்கன், செயராமன் அடிக்கடி வருவார்கள். கவிஞர் நா.காமராசன் பெரும்பாலும் நாள் தவறாமல் வந்துவிடுவார். இப்படி நண்பர்களின் வருகை

அ.சிதம்பரநாதனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. என் பதில் அவருக்குச் சினமூட்டியது என்பது மட்டும் நிச்சயம். அவருக்கு என்னைப் 'போ' என்று வாயால் சொல்லத் தோன்றவில்லை. சுட்டு விரலைக் கதவை நோக்கிக் காட்டினார். நான் எதுவும் பேசாமல் வெளியேறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் என் படிப்புக்கு இடையூறு ஏற்படவில்லை.

ஆனால் அங்கும் ஒரு காதல் ஊறு குறுக்கிட்டது. என் அண்ணன் தங்கியிருந்த விடுதியை நடத்தியவரின் உறவுக்காரப் பெண்மணி ஒருவர் தம் காதலருடனும், அழகிய மகளுடனும் அந்தச் சிற்றூருக்கே வந்துவிட்டார். பார்த்தால் வணக்கம் சொல்லிப் புன்னகைத்து வந்துவிடுவேன். என் கவனமெல்லாமம் படிப்பில் இருந்தது. ஒருநாள் மாலையில் அந்தப் பெண்மணியும், அவருடைய காதலரும், அவர் மகளும் என் அறைக்கு வந்து விட்டார்கள். அவர்களை உட்காரச் சொன்னேன்.

அந்தப் பெண்மணி, ''உன்னிடம் ஒரு விஷயம் பேசணும்'' என்றார். என்ன என்பதுபோலப் பார்த்தேன். அம்மாவுக்குப் பின்னாலிருந்து மகள் ஒருவித எதிர்பார்ப்போடு என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பெண்மணி தொடர்ந்தார்: ''வந்து... என் மகளைக் கல்யாணம் செய்றியா?" என்று தயங்கியபடிக் கேட்டார். தாய்க்குப் பின்னிருந்த மகள் 'சரி என்று சொல்' என்பது போல தலையை ஆட்டிச் சைகை காண்பித்தாள்.

அவர்களுடைய நிலை எனக்குப் பரிதாபமாக இருந்தது. இருந்தும் என்னைத் தயார்ப்படுத்திக் கொண்டேன். தெளிவான குரலில் சொன்னேன். 'எனக்கு அப்படி ஒரு விருப்பம் இல்லை. எனக்குச் சின்ன வயசிலேயே என் உறவுக்காரப் பெண்ணைப் பேசிட்டாங்க...உங்க மகளுக்கு நல்ல மாப்பிள்ளை வாய்ப்பான்' என்றேன்.

அவர்கள் போய்விட்டார்கள். இருந்தாலும் ஐராவதநல்லூரின் அந்தத் தென்னந்தோப்பு எனக்கு உகந்ததாய் இல்லாமற் போய்விட்டது. இரண்டொரு நாளில் அந்த அறையைக் காலி செய்து விட்டேன்.

கல்லூரிக்கு எதிர்த்தாற் போலிருந்த தெப்பக்குளத்தை அடுத்திருந்த அனுப்பானடி என்னும் சிற்றூரில் ஓர் அறை கிடைத்தது. அந்த அறை மாடியில் இருந்தது. பக்கத்தில் ஓர் உணவகம். (மெஸ்) மதியம் அங்கே சாப்பாடு. மாலையில் நடந்து வந்து தெப்பக்குளத்தின் அருகிலிருந்த சிற்றுண்டிச் சாலையில் இரவு உணவு. காலையில் அறையிலிருந்தபடியே சன்னலைத் திறந்து எதிர்த்தாற் போலிருந்த தேநீர்க் கடைக்குச் சைகை செய்வேன். ஒரு வாழைப்பழம், ஒரு கடலை உருண்டை, ஒரு குவளைப் பால். காலை உணவு அவ்வளவுதான்.

அந்த மாடியில், கீழே குடியிருந்த குடும்பங்களைச் சேர்ந்த இரண்டுபேர் தங்கள் பெட்டிகளை வைத்திருந்தனர். எனக்குப் புகைப் பழக்கம் இருந்தபோதிலும் அவர்கள் கஞ்சாவைப் புகைத்துக் கொண்டு பேசியபடி இருப்பார்கள். நான் படிப்பதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஒருநாள் அவர்கள் பெட்டிகளை எடுத்து அறைக்கு வெளியே வைத்துவிட்டுக் கதவைப் பூட்டிவிட்டுப் போய்விட்டேன். அவர்கள் சௌராஷ்ட்ர இளைஞர்கள், தங்கள் பெட்டிகள் வெளியே வைத்திருப்பதைப் பார்த்துக் கத்தி இருக்கிறார்கள். சிறிது நேரத்தில் அறைக்குத் திரும்பிய என்னிடம் சண்டை போட்டார்கள். ''மரியாதைக்காகப் பெட்டியை வச்சேன்; இனி பெட்டி ரோட்டில் பறக்கும்" என்றேன். அவர்கள் அடங்கிப் போய்விட்டார்கள். அறைக்குள் தாழிட்டுக்கொண்டு படிக்க ஆரம்பித்துவிட்டேன்.

கொஞ்ச நேரத்தில் அறைக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தேன். வீட்டுக்கு உரிமையாளர் நின்று கொண்டிருந்தார். உள்ளே கூப்பிட்டேன். என்னை 'வெளியில் வா' என்று கூப்பிட்டார். வெளியில் வந்தேன். கைத்தடியை உயர்த்தியபடி என்னைச் சுட்டி, சத்தம் போட்டுச் சொன்னார். ''இந்தப் பையன் கூட யாராவது தகராறு பண்ணுனா உங்க

**தனித்தமிழ் முயற்சிகளில் எனக்கு மதிப்பிருந்தாலும் அதில் நான் எதையும் எழுதவில்லை. இயன்ற மட்டும் வடசொல் உட்படப் பிற சொற்களைத் தவிர்த்து எழுதினாலும், தனித்தமிழில் எழுதுவது எனக்குச் செயற்கையாகத் தோன்றியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரையும் காலி செஞ்சிடுவேன்.. என்றார்.

பிறகு என்னைப் பார்த்து "நீ எப்படிக் கஷ்டப்பட்டு படிக்கிறேங்குறது எனக்குத் தெரியும்.. நீ கவலைப்படாம இரு. இப்போ அறையைப் பூட்டிட்டு என் கூட வா" என்றார். அந்த சௌராஷ்ட்ர இளைஞர்கள் பயந்து நின்றார்கள். என்னைத் தம் வீட்டுக்குக் கூட்டிச் சென்றார். பக்கத்தில்தான் வீடு. வீட்டுக்குள் உள்ள திண்ணையில் உட்கார வைத்துவிட்டு, வீட்டிலுள்ள யாரையோ கூப்பிட்டு ஒரு 'கலர்' வாங்கிவரச் சொன்னார். அப்போது 'காளிமார்க்'தான் இருந்தது. என்னிடம் 'கலரைக்' குடிக்கச் சொல்லிவிட்டுச் சொன்னார். 'நீ கஷ்டப்பட்டுப் படிக்கிறதை டீக்கடைக்காரன் சொன்னான். நீ அப்படித்தான் இருக்கணும்' என்று சொன்னார். நான் விடைபெற்றுக் கொண்டேன்.

இப்படியாக அந்த மாதம் முழுதும் முயன்று படித்தேன். தேர்வு எழுதினேன். தேர்வு முடிவுகள் வந்தன. பத்துப்பேர் படித்த தமிழ் இலக்கியப் பிரிவில், ஒரு முதல் வகுப்பு. என் நண்பர் நா.பாலகிருஷ்ணன் பெற்றிருந்தார். ஓர் இரண்டாம் வகுப்பு – அது நான்தான். ஒன்றிரண்டு பேர் தேறவில்லை.

கல்லூரியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) முதலியனவற்றைப் பெற்றுக்கொண்டேன். மாற்றுச் சான்றிதழில் என் நடத்தைப் பற்றித் 'திருப்திகரமானது' (Satisfactory) என்று குறிப்பிடப்பட்டிருந்தது. முதல்வர் கையெழுத்திட்டிருந்தார். மற்றவர்களுக்கெல்லாம் 'நன்னடத்தை (Good) உள்ளவர்' என்று சான்று அளித்திருந்தார். நான் அ.சிதம்பரநாதன் அவர்களை நேரே சந்தித்து விடைபெற்றுக் கொள்ளும்போது கேட்டேன். 'என் நடத்தை Satisfactory என்று போட்டிருக்கிறீர்கள். மற்றவர்களுக்கு good என்று போட்டிருக்கிறீர்கள். ஏன்" என்றேன்.

''நான் 'bad' என்று போட விரும்பவில்லை'' என்றார். மற்றவர்கள் சான்றிதழ்களுடன் என் சான்றிதழ்களையும் ஒப்பிட்டால், எனக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமா?'' என்றேன். 'அதற்கு நான் ஒன்றும் செய்வதற்கில்லை' என்றார். 'தமிழ் உணர்வு வாழ்க' என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டே வெளியே வந்தேன்.

●


# நூல் பரிசுப் போட்டி அறிவிப்பு

## கவிமுகில் அறக்கட்டளை
## விழிகள் பதிப்பகம்

இணைந்து நடத்தும்

## கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் 80

## இலக்கியப் பரிசுப் போட்டி

2013இல் வெளிவந்த நாவல், சிறுகதை, மரபுக்கவிதை, நாடகம், கட்டுரை, நாட்டுப்புறவியல், புதுக்கவிதை, ஹைகூ ஆகியவற்றிற்குத் தனித்தனியே பரிசுகள் வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் நூல்களுக்கு 2014 செப்டம்பர் 27 ஆம் தேதி, தியாகராய நகர் அபிபுல்லா சாலையில் – தேவர் திருமண மண்டபத்தில் திரு.சங்கரவடிவேலு அவர்கள் வழங்கும் தலா ரூ.5,000 மொத்தம் ரூ 40,000 பரிசுத் தொகை வழங்கப்படும்.

போட்டியில் பங்கேற்போர் மூன்று படிகளை கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2014, ஜூலை 31 க்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
விழிகள் பதிப்பகம்,
8/எம் 139, 7 ஆம் குறுக்குத் தெரு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை – 41




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் ஒரு மேற்கு

கரையோரங்களில் பனைப்பூக்களைப்போல காய்ந்துப் போன மனித விட்டைகள். குமித்து வைத்த சந்தனமாக மலங்கள். ஈக்கள் அதில் கதம்பமாக மொய்த்துக்கொண்டிருந்தன. மண்ணில் புதைந்தபடி ஊமைச் சங்குகளும், சிப்பி ஓடுகளுமென கடற்செல்வங்கள் வெளியே எட்டிப்பார்த்தன.

கழட்டி விடப்பட்ட மிதியடிகளைப் போல விரவிக்கிடந்தன கட்டுமரங்கள். கரை ஒதுங்கி குளிர்க்காய்ந்த படகுகள். கரை நீள, அகலாய் விரிந்துகிடந்தது. ஒருவர் மீன் வலையை விரித்து காய வைத்துக்கொண்டிருந்தார். இரண்டு பெண்கள் பெரிய படுதாவை மணற்பரப்பில் விரித்து அதில் கருவாடுகளை குமித்து, விரவிக் காயவைத்துக்கொண்டிருந்தார்கள்.

கரையின் விளிம்பில் மேகத்தைத் தொடும் உயரத்தில் கலங்கரை விளக்கம் இருந்தது. அதன் உச்சியில் ஒரு வெள்ளைக்கொடி பறந்துகொண்டிருந்தது. அதனையொட்டி நின்றுக்கொண்டிருந்த தென்னை மரங்கள் அதன் உயரத்தை எட்டிப்பிடிக்க தென்னங்கீற்றுகள் அலாவிக் கொண்டிருந்தன. கடலலையின் ஓசைக்கேற்ப அவை வளைந்துக்கொடுத்து சலசலப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தன.

மஞ்சள் தேய்த்துக்குளித்த பெண்ணைப்போல சூரியன்தகித்தது. கடலைக்கு சற்று மேலே பறப்பதும், தண்ணீரை உரசி செல்வதுமாக மீன் கொத்திப் பறவைகள் பறந்துக்கொண்டிருந்தன. அதைத் தாண்டிய தூரத்தில் நான்கு படகுகள் கரையை நோக்கி வந்துக்கொண்டிருந்தன. அவற்றை ஒருசேரப் பார்க்கையில் அவை ரவிவர்மன் தூரிகையில் உயிர்ப்பித்த ஓவியம் போல தெரிந்தது.

கரையில் நான்கு பெண்கள் தலையில் முந்தானையை போட்டுக்கொண்டு,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடையை இடுப்பில் வைத்துக்கொண்டு கையை வேகமாக வீசி வேகு, வேகுவென வடக்கிலிருந்து தெற்காக நடந்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அவ்வப்போது கொட்டிய சிரிப்புச் சத்தம் மட்டும் எனக்கு கேட்பதைப்போல இருந்தது. அவர்களைத் தொடர்ந்து ஒரு குட்டி சிறுமி அழுதுக்கொண்டும் தன்னை தூக்கச்சொல்லி அடம் பிடித்தவாறும் ஓடினாள். அவளை விரட்டிப்பிடிக்க பிஞ்சுக்காலடிகள் அவளைத் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தன.

"அக்கா..." என்றவாறு அவர்களைவிளித்தேன். கடலலையின் உக்கிரமான பேரிரைச்சலில் அந்த அழைப்பு காற்றில் கரைந்து உலார்ந்துப்போனது. சிறுமி மட்டும் மெல்ல திரும்பிப்பார்த்தாள். அந்த அழைப்பு அவளுக்கு கேட்டிருக்கும் போலும். அழுகையை ஒரு கனம் நிறுத்தி என்னை திரும்பிப் பார்த்துகொண்டே நடந்தாள்.

"உங்களைத்தான்" என்றவாறு மறுபடியும் விளித்தேன். சிறுமிஅதற்கு மேல் நடக்கவில்லை. கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மூக்கில் வழிந்த சளியை மூக்கிற்கு குறுக்கே கையை கொண்டுச்சென்று ஒரு இழு இழுத்தாள்.பிறகு நடந்துகொண்டிருந்த அவளது அம்மாவைப் பார்த்தாள். உடுத்தியிருந்த பாவாடையை தூக்கி சொறுகிக்கொண்டு ஓடியவள், அம்மா சேலையைப் பற்றி இழுத்து என்னைக் காட்டினாள்.

"என்னடி...?" என்று எரிந்து விழுந்தாள் அவளது அம்மா. அந்தச் சிறுமி பாவம். அந்த ஒரு கனம் ஆடிப்போனாள். கைப்பிடி கருவேப்பிள்ளை கொத்துப்போன்றிருந்த அவளுடைய பூஞ்சை உடம்பு நடுங்கியது. முகம் சட்டென சூம்பிப்போனது.

"அவங்க கூப்பிடுறாங்கம்மா"

"யாரை ...?"

"உன்னத்தான்"

நான் அவர்களை நோக்கி நடந்துக்கொண்டிருந்தேன். அவர்கள் அந்த இடத்தில் நின்றார்கள். ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். கிசுகிசுத்துக்கொண்டார்கள். தலையில் கிடந்த முந்தானையை எடுத்து இடுப்பில் சொறுகிக்கொண்டு, இடுப்பில் வைத்திருந்த அன்னக்கூடையை கீழே வைத்தார்கள்.

"வேலப்பனை பார்க்கணும்"

"எந்த வேலப்பன்?"

"மீனவச் சங்கத் தலைவர் வேலப்பன்"

" மீனவச் சங்கத் தலைவரா? இல்ல மீன் பிடிப்புச் சங்கத்தலைவரா?"

தலையை ஒரு பக்கம் சாய்த்துக்கொண்டு சரியாகச்சொல்லுங்க எனும் தொனியில் ஒரு பெண்மணி கேட்டிருந்தாள். அதற்கு மற்றொரு பெண் "ஆமாங்ண்ணே. சரியாச் சொல்லங்க. இந்தக் குப்பத்துல ரெண்டு பேரு இருக்காங்க. மீன் பிடிப்புச்சங்கத் தலைவர் வேலப்பன் இவளுடைய வூட்டுக்காரர். அதோ பாருங்க ஒரு குடிசை தெரியுது. அதுக்கும் பக்கத்தில ஒரு மஞ்சள் வீடு தெரியுதுங்களா?அதை ஒட்டி ஒரு தென்னை மரம் தெரியுது பாருங்க. அதுக்கும் பக்கத்தில இருக்கிற காலனி வீடுதான் இவளுடைய வீடு. கடலுக்கு போக கிளம்பிக்கிட்டிருக்கிறார். மீனவச் சங்கத் தலைவர்னா பெரிய இடம். மேம்பாலத்தை ஒட்டி இருக்கிற பங்களாதான் அவருடைய வீடு. நீங்க யாரப் பார்க்கணும்?" எனக்கேட்டுவிட்டு வேகமாக கண்களைச் சிமிட்டிக்கொண்டாள்.

"மீனவர் சங்கம் வேற. மீன் பிடிப்பு சங்கம் வேறங்களா?" கேட்டேன் நான்.

"பின்னே இல்லைங்களா...? மீனவ சங்கம் பெரிய சங்கம். அவங்களுக்கு அரசியல் பின்புலம் உண்டு. தேர்தலில் போட்டியிடுவாங்க, எம்.எல்.ஏ, எம்.பி ஆகிறவங்க."

" மீன் பிடிப்பாளர் சங்கம்...?"

"புள்ளை, பொண்டாட்டியை குப்பத்தில விட்டுட்டுப் போயிவலை வீசி மீன் பிடிச்சு வயித்தக் கழுவுறவங்க..."

அவள் சொல்லிய பதிலில் நான் சிலாகித்துப்போனேன்.மேலும் சொல்லுங்க எனும் வகையில் அவர்களை ஆழமாகப் பார்த்தேன்.

" நீங்க இந்த ஏரியாவுக்கு புதுசுங்களா?"

அந்த சிறுமியின் தாயார் கேட்டார்.

" ம்" என்றவாறு தலையை ஆட்டினேன்.

" என்னடா இத்தனை சங்கம் இருக்குனு ஆச்சரியமா இருக்கா ?"

"ம்" என்றேன்.

"அட என்னாண்ணே நீங்க. இதுக்கே ஆச்சரியப்பட்டா எப்படி? இதுத் தவிர மீன் விற்பனையாளர்கள் சங்கம், மொத்த விற்பனையாளர்கள் சங்கம் என இன்னும் பல சங்கங்கள் இருக்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய இமை ஏறி இறங்கியது. உதட்டைப் பிதுக்கிக்கொண்டேன்.

“அதையும் தாண்டி ஆளும் கட்சி, எதிர்கட்சி, இந்து, முஸ்லிம், கிறிஸ்டின் பாகுபாடுகள் வேற இருக்குங்கண்ணே'' “என்றவள் அவளை உரசி நின்ற மற்ற பெண்களைப் பார்த்து அப்படிதானே என்றவாறு தலையாட்டி வைத்தாள். நான் அவர்களுடைய முகத்தை ஒரு சேரப்பார்த்தேன். அவர்களுடைய முகம் கலாய்ப்பு இல்லாமல் இறுகிப்போயிருந்தது.

“எல்லா சங்கங்களும் ஒன்னுச்சேருங்களா?” கேட்டேன்.

“ஊக்கூம்” என்றவாறு உதட்டைப் பிதுக்கினாள். அவளது செய்கைக்கு மற்றப் பெண்கள் கொல்லென சிரித்து வைத்தார்கள். “சிலோன்காரன்க நடுக்கடல்ல வச்சி மீன் பிடிக்கிறவங்களைசுட்டுத்தள்ளுனா சடலம் கரைக்கு வருகிற அன்னைக்கு மட்டும் பேதம் கடந்து எல்லாச் சங்கங்களும் ஒன்றுக்கூடும். அத்தோட அந்த ஒரு நாள் கூத்துமுடிஞ்சுரும்...”

எனக்கு கண் கட்டியது.படகோட்டி எம்.ஜி.ஆர் நினைவில் வந்துப்போனார்.கடல் மேல் பிறக்க வைத்தாய், எங்களை கண்ணீரில் மிதக்க வைத்தமாய்... முகாரி ராகம் எனக்குள் யாரோ பாடினார்கள்.

இந்திய தேசத்தை சூழ்ந்திருப்பது ஒரே கடல்தான். அதைத்தான் நாம் இந்தியமாக்கடல், அரபிக்கடல், வங்காள விரிகுடா என வெவ்வேறு பெயரிட்டு அழைத்துக்கொண்டிருக்கிறோம். ஒரே கடலைப்போலதான் நம் மக்களும். ஆனால் சாதியால், மதத்தால், நிறத்தால், மொழியில் உடைந்து அல்லவா கிடக்கிறார்கள். யாரோ பேச வேண்டிய தத்துவத்தை எனக்குள் நான் பேசிக்கொண்டேன்.

“சிலோன்காரங்களால நீங்களும் பாதிக்கப்பட்டிருக்கிறீங்களோ...?”

நான் அப்படிக் கேட்டதும் ஒரு இளம்வயதுப் பெண்ணின் கண்கள் உடைந்து கண்ணீர்ச் சுனை பெருக்கெடுத்தன. முந்தானையை அள்ளி வாயிற்குள் திணித்துக்கொண்டு குமறினாள். அவளை ஒட்டி நின்றவள் சொன்னாள்” இவ என் நாத்தனார். கல்யாணம் முடிஞ்ச மறு வருசம் சிலோன்காரன் துப்பாக்கிக்கு கணவனை பறிக்கொடுத்திட்டு நிக்கிறா. இன்னும் வருசம்



திரும்பல. ம்...எல்லாத்தையும்கடற்தேவன் ஒருத்தன்தான்பார்த்துக்கிட்டு இருக்கான்... “என்றபடி வானத்தையும் கடலையும் ஒருசேர ஏற இறங்கப் பார்த்தாள்.அவளுடைய கண்களில் கடல் நீர் உடைந்து கண்ணீராக வழிந்தன.

“நான் ஒரு கிறுக்கி. வந்த சோலி என்ன, யாரைப் பார்க்கணுமென எதையும் கேட்காம நான் மட்டும் பேசிக்கிட்டிருக்கேன். நீங்க யாரைங்கண்ணே பார்க்கணும்...?”

“ வேலப்பன்”

“ மறுபடியும் தலையும் இல்லாம ,வாலும் இல்லாம மொட்டையாக சொல்றீங்களே”

“தாடி வச்சிக்கிட்டு முன் தலையில் கொஞ்சம் வழுக்கை விழுந்துபோய் இருப்பாராமே”

“அப்ப எங்க வூட்டு ஆம்பளைத்தான் ” என்றவள் வீடு இருக்கும் பக்கம் பார்வையைச் செலுத்தினார். மகளின் உச்சந்தலையை தடவி “இவரை அழைச்சிக்கிட்டுபோய் அப்பாவைக்காட்டு” என்றாள். அவள் அப்படிச்சொன்னதும் அந்தச்சிறுமி சட்டென புன்னகைப் பூத்தாள். குதூகலத்தில் ஆட்கொண்டாள். நடையை தாவி எடுத்து வைத்து நடந்தாள். அவளுடைய பிஞ்சுப்பாதங்கள் மண்ணில் சிற்பமாக ஓடினாள்.

....

சிமெண்ட் சாலை நீண்டுக்கிடந்தது. அதன் இருபுறமும் அரசுக் கட்டிக்கொடுத்த காலனி வீடுகள் வரிசையாக இருந்தன. அது பார்க்க தொடர்வண்டி பெட்டியைப்போல இருந்தன. ஒவ்வொரு வீட்டின் சுவர்களிலும் சுனாமி அறைந்த சுவடுகள் தெரிந்தன.வீடுதோறும் ஒரு வேப்பமரமும் இரண்டு தென்னை மரங்களும் இருந்தன. வேப்பமரத்தில் மஞ்சள் துணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றப்பட்டிருந்தன. எட்டும் உயரத்தில் ஆணியடித்து அதில் கருகிய மல்லிகைப் பூமாலை தொங்கிக் கொண்டிருந்தன.

மீன் வலையை அள்ளி முதுகில் போர்த்தியபடி கடலை நோக்கி செல்லத் தயாராகிக்கொண்டிருந்தார் வேலப்பன். அழுக்குப் படிந்த சட்டை, செம்பட்டை படர்ந்த தலைமயிர், தொடை வரைக்குமாக தூக்கிக்கட்டிய கைலி, அரை வட்டமடிக்கும் கைகள்... என அவரைப் பார்க்கையில் மெரினா கடற்கரை உழைப்பாளர் சிலையில் உள்ள உழைப்பாளி ஒருவர் இயங்குவதைப்போல இருந்தது.

" அப்பா..." என்றபடி கூப்பாடு போட்டுக்கொண்டு அவர் பின் ஓடினாள் அந்த சிறுமி. போன வேகத்தில் அவரது கால்களைக் கட்டிப்பிடித்து அரை வட்டமடித்தாள். மகளை அள்ளித் தூக்கி நெற்றியில் ஒரு முத்தம் பதித்தார்." அப்பா .... இதோ இந்த மாமா உன்னை பார்க்கணுமாம்" பிஞ்சுமொழியில் சொல்லிக்கொண்டு என்னை நோக்கி கையை நீட்டினாள். அவள் என்னை திரும்பிப்பார்த்தார். நான் கையை உயரே தூக்கிக்காட்டியபடி புன்னகைத்தேன். பதிலுக்கு அவர் " வணக்கம் தம்பி " என்றார்.

"நீங்க யாரு ?" கரகரக்குரலில் அவர்.

" நீங்க வேலப்பன் தானுங்களே..." என்றபடி நான்.

அவர் முன் வழுக்கை விழுந்தபோய் ஏறிய நெற்றியுடன் இருந்தார். கன்னத்தில் கறுப்பும் வெள்ளையுமான தாடி அப்பிக்கிடந்தன. பற்கள் காரை விழுந்தப்போய் புளியங்கொட்டை வடிவத்திலும் நிறத்திலும் காட்சியளித்தன.

"ஆமாம். நீங்க...?"

" என் பேரு குமரேசன். புதுக்கோட்டை" என்றேன்.

என்னை ஒரு கனம் ஏற இறங்கப் பார்த்தார். நான் கட்டியிருந்த கட்சியை வேட்டியைப் பார்த்தார். பிறகு "ம். சொல்லுங்க ?" என்றார்.

" தங்கச்சிக்கு கல்யாணம். கட்சிப்பிரமுகர்கள் வாராங்க. பொறிக்கிற மாதிரி உயிர் மீன் வேணும்"

" எவ்வளவு ?"

" இருநூறு கிலோ"

" எப்ப வேணும் ?"

" வருகிற திங்கட்கிழமை விடியுறதுக்குள்ள வேணும்."

"நீங்கதான் வந்து எடுத்துக்கிறணும் . சரிங்களா...?"

"ம். உங்களுக்கு எந்தக் கஷ்டத்தையும் கொடுக்கமாட்டேன். நானே வந்து எடுத்துக்கிறேன்"

" இரநூறு கிலோ போதும்களா?"

" போதும்ங்க" என்றேன். எவ்வளவு எனக்கேட்டு அவர் கேட்டப் பணத்தில் பாக்கி வைக்காமல் முழுப் பணத்தையும் கொடுத்தேன். செல்லமாக அந்தக் குழந்தையின் கன்னத்தில் கிள்ளினேன். பதிலுக்கு அந்த குழந்தை என் கன்னத்தில் கிள்ள என்னை நோக்கித் தாவினாள். அந்தக்குழந்தையின் கையில் ஐம்பது ரூபாய் திணித்தேன். முதலில் வாங்க மறுத்தவள் பிறகு வாங்கிக்கொண்டு " தேங்க்ஸ் மாமா" என்றாள்.

...





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இந்திய தேசத்தை சூழ்ந்திருப்பது ஒரே கடல்தான். அதைததான் நாம் இந்தியமாக்கடல், அரபிக்கடல், வங்காள விரிகுடா என வெவ்வேறு பெயரிட்டு அழைத்துக்கொண்டிருக்கிறோம். ஒரே கடலைப்போலதான் நம் மக்களும். ஆனால் சாதியால், மதத்தால், நிறத்தால், மொழியால் உடைந்து அல்லவா கிடக்கிறார்கள்.**

அன்றைய தினம் திங்கட்கிழமை. மீன் வாங்குவதற்காக கடற்கரைக்குச் சென்றிருந்தேன். மீன்களை ஏற்றிச்செல்ல மினி லாரிகள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. கலங்கரை விளக்கம் வெளிச்சத்தை பீச்சி அடித்துக்கொண்டிருந்தது. வியாபாரிகள் படகுகளை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தார்கள். "படகுகள் கரை வந்து சேர எப்படியும் ஒரு மணிநேரமாகலாம்"என பேசிக்கொண்டார்கள் பெண்கள், குழந்தைகள் என பலரும் கரையில் குழுமிப்போயிருந்தார்கள். சிலர்மணற்பரப்பில் பெரிய துண்டை விரித்து அலைப்பேசியில் உள்ள வெளிச்சத்தைக் கொண்டு சீட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள்.

விடிக்காலப் பறவைகள் கீச்சிட்டுக்கொண்டிருந்தன. கிழக்கு வானம்மெல்ல விடிந்துக்கொண்டிருந்தது. அந்த மங்கிய வெளிச்சத்தில் தொலைவில் படகுகள் தெரிந்தன. அதைப் பார்த்து பலருடைய முகங்கள் பூப்பூவாய் மலர்ந்தன.

கரையின் விளிம்பில் வேலப்பனின் மனைவி நின்றுக்கொண்டிருந்தார். அவர் அருகினில் அவளுடைய மகள் வழக்கம்போல அழுதுக்கொண்டும், தேம்பிக்கொண்டும் நின்றுக்கொண்டிருந்தாள் "இந்தக் குழந்தைக்கு எந்த நேரமும் அழுகைத்தான் போலும் " என்றவாறு அவளைப் பார்த்தேன்.

இருபது படகுகள் ஒரு சேர கரையை நோக்கி வந்துக்கொண்டிருந்தன.பெண்கள் படகு ஒதுங்கப்போகும் இடத்தை நோக்கி ஓடினார்கள். பல பெண்கள் மார்பிலும் வயிற்றிலும் அடித்து அழுதார்கள்.அந்த இடம் ஒரே களேபரமாக இருந்தது. என் அருகினில் புகை புகைத்தபடி நின்றுக்கொண்டிருந்த ஒருவரிடம் "ஏன் அழுகிறார்கள்?" எனக்கேட்டேன்.

"மீன் பிடிக்க முடியாமல் வெறும் படகோடு திரும்பினால் இப்படித்தான் அழுவார்கள்" என்றார் அவர். அவர் அப்படிச் சொன்னதும் எனக்கு அழுகை வந்துவிட்டது. மார்பு கிடந்து அடித்துக்கொண்டது. என் தங்கையின் திருமண வைபோகம் நினைவில் நிழலாடியது. சமையல்காரர் நினைவில் வந்துப்போனார். கட்சித் தலைவர்கள், விருந்தினார்கள், உறவு முறைகள், சொந்தம், பந்தம் எல்லாரும் என் கண் முன்னே வந்து நின்றார்கள்.

சமையல்காரர் சொன்ன நேரத்திற்குள் மீனை கொடுத்தாக வேண்டும் என்றிருந்தார். இல்லையென்றால் நீங்க எதிர்ப்பார்க்கிற அளவுக்கு சாப்பாடு பிரமாதமாக இருக்காது என அவர் சொல்லிருந்தார். நான் என்ன செய்யப்போகிறேன்...? நான் ரொம்பவும் அவசரப்பட்டு விட்டேனோ. முழு பணத்தையும் வேறு கொடுத்துவிட்டேன். கொஞ்சம் பாக்கி வைத்து கொடுத்திருந்திருக்கலாம். இல்ல சந்தையில உயிர் மீனாக இல்லாமல் பழைய மீனையே வாங்கியிருந்திருக்கலாம்... "புகை மூட்டமாக நினைவோட்டம் என்னை அப்பின.

படகுத்துறைமுகம் ஒரே களேபரமாக இருந்தது. போகிறவர், வருகிறவர் எல்லோருடைய முகத்திலும் கானல்வரிக்கோடுகள் தெரிந்தன. மீனவப்பெண்கள்குறுக்கும் நெடுக்குமாக நடந்துக்கொண்டிருந்தார்கள்.

"யாருப்பா... வேலப்பன் கிட்ட உயிர் மீன் கேட்டது?" என்றவாறு ஓர் அழைப்பு என்னை நோக்கி வந்தது. மகிழ்ச்சியுடன் ஆழ்க்கடலுக்குள் சென்றேன். அழைப்பு வந்த திசையை நோக்கி ஓடினேன். பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்த ஒருவர் "எங்கே வண்டி? மீன் பெட்டியை எங்கே வைக்க ?" என்றவாறு கத்தினார். நான் அவருக்கு முன்பாக துள்ளிக்குதித்து ஓடினேன். வாகனத்தைக் காட்டினேன். பெட்டிகளை வாங்கி அடுக்கினேன். மீன்கள் உயிரோடு இருக்கிறதா? ஆவல் பொங்கப்பார்த்தேன். தண்ணீருக்குள் மீன்கள் நீந்திக்கொண்டிருந்தன. தண்ணீர்தான் கொஞ்சம் சிவப்பாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவருக்கு சோனியா, இவருக்கு ஆர்.எஸ்.எஸ்.,

"நமது நாடு ஜப்பானோடும் சீனாவோடும் போட்டி போட்டு முன்னேற வேண்டுமென்றால் நல்ல மாணவர்கள் உருவாக வேண்டும். நல்ல மாணவர்கள் உருவாக வேண்டுமென்றால் அதற்கு நல்ல ஆசிரியர்கள் வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்தியாவில் அத்தகைய நல்ல ஆசிரியர்களுக்கு கடுமையான பஞ்சம் இருக்கிறது" என்பதாக நமது பிரதமர் திரு மோடி அவர்கள் பேசியுள்ளதாக செய்தி ஊடகங்களின் வழி அறிய முடிகிறது.

மேம்போக்காகப் பார்த்தால் மிகுந்த அக்கறையோடும், தேசம் குறித்த கவலையோடும் பிரதமர் அவர்கள் பேசியுள்ளதாகத் தெரியும். ஆனால் அவரது இந்தப் பகுதியின் இறுதிப் பகுதி நமக்கு சில அய்யங்களைத் தருகிறது.


ஜப்பானோடும் சீனாவோடும் சகலத் துறைகளிலும் போட்டி போட்டு முன்னேற வேண்டும் என்பதிலோ, அதற்கு நல்ல மாணவர்களை நாம் உருவாக்க வேண்டும் என்பதிலோ, நல்ல மாணவர்களை உருவாக்க இந்த மண்ணை நேசிக்கிற, அர்ப்பணிப்புமிக்க ஆசிரியர்கள் அவசியம் என்பதிலோ எள்ளின் முனையளவும் நமக்கு கருத்து மாறுபாடில்லை. ஆனால் அப்படிப் பட்ட ஆசிரியர்களுக்கான பஞ்சம் இருப்பது போன்ற அவரது கூற்றின் தொனியில் கொஞ்சம் உள்நோக்கம் இருப்பதாகவே நமக்குப் படுகிறது.

முதலில் எதையும் எதிகொள்ளும் ஒரு பலம் மிக்க எதிர்கால சமூகம் அமைவதற்கு நல்ல ஆசிரியர்களே அவசியம் என்கிற உண்மையை உரக்கச் சொன்னமைக்காக அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

நல்ல ஆசிரியர் யார் என்பதைப் பார்க்கும் முன், நல்ல கல்வி என்பது எது என்பதைப் பார்த்துவிடுதல் அவசியம்.

"கல்" என்றால் "தோண்டு" என்று ஒரு பொருளாகிறது. தோண்டுதல் என்பதை தேவையில்லாததை தோண்டி எடுத்து அப்புறப் படுத்துவது என்று கொள்ள வேண்டும். மண்ணைப் பிசைந்து அதிலிருந்து தேவை இல்லாததை தோண்டி எடுத்து அப்புறப் படுத்தினால் அழகான தோண்டி கிடைக்கும்.

ஒரு மனிதனில் இருந்து குறிப்பாக மாணவனிலிருந்து தேவை இல்லாதவற்றை தோண்டி எடுத்து அப்புறப் படுத்துதலே கல்வியின் வேலையாகும். இப்பொழுது எவை தேவை இல்லாதவை என்று ஒரு கேள்வி வருகிறது. இந்த இடத்தில்தான் நமக்கு பிரதமரின் கருத்தில் அய்யம் எழுகிறது. அச்சம், பொறாமை, பொய் கூறுதல், புறம் பேசுதல், களவாடுதல், வஞ்சித்தல், ஏமாற்றுதல், நம்பிக்கை துரோகமிழைத்தல், பெண்மையை இழிவு செய்தல், பாகுபாடு பார்த்தல், காலை வாரிவிடுதல், மத வெறி, சாதி வெறி போன்ற இழிவான குணங்களை ஒரு மணவனிடத்தில் இருந்து தோண்டி எடுத்து தூரப் போடுதலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கல்" என்றால் "தோண்டு" என்று ஒரு பொருளாகிறது. தோண்டுதல் என்பதை தேவையில்லாததை தோண்டி எடுத்து அப்புறப் படுத்துவது என்று கொள்ள வேண்டும். மண்ணைப் பிசைந்து அதிலிருந்து தேவை இல்லாததை தோண்டி எடுத்து அப்புறப் படுத்தினால் அழகான தோண்டி கிடைக்கும்.**

கல்வியின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும்.

இத்தகைய இழி குணங்களோடு தன்னிடம் வரும் மாணவனிடத்தில் இருந்து மேற்சொன்ன குணங்களை தோண்டி எடுத்து தூரப் போடுபவன் ஆசிரியன் ஆகிறான்.

இவற்றைத் தோண்டி எடுத்ததால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை இவற்றிற்கு நேரெதிரான மேன்மையான குணங்களால் நிரப்ப முயல்பவன் நல்ல ஆசிரியன் ஆகிறான்.

மதவெறியற்ற, சாதியற்ற பெண்மையை மதிக்கிற, உழைப்பை மதிக்கிற ஒரு மனிதனை உருவாக்குதலே நல்ல கல்வியின் இன்றைய அடையாளங்களாக நாம் பார்க்கிறோம். இதை செய்பவனை நல்ல ஆசிரியனாகவும் நாம் அடையாளம் காண்கிறோம். விஞ் ஞானத்தின் துணை கொண்டே அதற்கு நேரெதிரான மேற்சொன்ன குணங்களை மாணவனுள் விதைக்கிற பிற்போக்குத்தனமே மத வாதிகளின் நல்ல கல்விக்கான அடையாளங்களாக நாம் பார்க்கிறோம்.

இதுமாதிரியான மோசமான காரியங்களைசெய்யக்கூடிய ஆசிரியர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகத்தான் பிரதமர் பார்க்கிறாரோ என்பதே நமது அய்யம்.

வரலாற்றை உள்ளது உள்ளபடி சொல்லித் தருவது கல்வியின் கடப்பாடு ஆகும். எனில் வரலாற்றை உள்ளது உள்ள படி சொல்லித் தருபவனே நல்ல ஆசிரியன் ஆகிறான். ஆனால் இன்றைய எதார்த்த நிலை என்னவென்றால் புத்தகத்தில் இருக்கிற கூடுதலான அல்லது குறைவானவற்றை போதித்தலே ஒரு ஆசிரியரின் வேலையாகிறது. இருப்பதையும் திரித்து மதச்சாயம் பூசப்பட்ட, உண்மைக்கு சற்றும் தொடர்பில்லாத இன்னும் சொல்லப் போனால் முற்றிலும் பொய்யானவற்றைப் போதிக்கும் ஆசிரியர்களுக்குத்தான் பஞ்சம் இருப்பதாக பிரதமர் பார்க்கிறாரோ என்றுதான் பார்க்கத் தோன்றுகிறது.

குஜராத் பள்ளிகளில் போதிக்கப் பட்டு வரும் வரலாறு குறித்து 17.06.2014 அன்றைய "மெயில் டுடே" பத்திரிக்கையில் வெளிவந்த செய்தியை மேற்கோள் காட்டி 18.06.2014 நாளிட்ட "தீக்கதிர்" வெளியிட்டுள்ள செய்திகள் நமது அய்யத்தை அதிகப் படுத்துகின்றன.

GCERT என்றழைக்கப் படுகிற குஜராத் கல்வி ஆராய்ச்சி மற்றும்பயிற்சி கவுன்சிலும் மற்றும் GSBST என்றழைக்கப்படுகிற பள்ளிப் பாடப் புத்தகங்களுக்கான குஜராத் மாநில வாரியமும் இணைந்து ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலுமான மாணவர்களுக்கு தயாரித்தளித்துள்ள பாடப் புத்தகங்களில் வரலாறு ஏகத்துக்கும் திரிக்கப் பட்டுள்ளதை நம்மால் பார்க்க முடிகிறது.


மகாத்மா காந்தி 1948 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் தேதியன்று சுட்டுக் கொல்லப் பட்டார் என்கிற பிழையான வரலாற்றைத்தான் குஜராத் பிள்ளைகள் படித்து வருகிறார்கள்.

இரண்டாம் உலகப் போர் என்றதுமே ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய ஜப்பான் நகரங்களை அமெரிக்கா கொஞ்சமும் மனிதாபிமானமே இல்லாமல் அணுகுண்டு வீசி அழித்ததைத்தான் எவரும் அறிவோம். ஆனால் குஜராத்தில் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பான் அமெரிக்காவின் மீது அணுகுண்டுகளை வீசியதாக வரலாறு சொல்லிக் கொடுக்கப் படுகிறது. அமெரிக்காவே இப்படி ஒரு பாடத்தை வைப்பதற்கு நிச்சயமாக வெட்கப் பட்டுத் தயங்கும் என்று நம்மால் நிச்சயம் நம்ப முடியும்.

உலகத்தில் உள்ள அனைத்து மாணவர்களும், இன்னும் சொல்லப் போனால் அமெரிக்க மாணவர்களேகூட அமெரிக்காதான் ஜப்பான் மீது அணு குண்டுகளை வீசியது என்கிற உண்மையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படிக்கும் போது குஜராத் மாணவர்கள் மட்டும் ஜப்பான்தான் அமெரிக்கா மீது அணு குண்டுகளை வீசியது என்கிற அப்பட்டமான ஒரு பொய்யை வரலாறு என்கிற பெயரில் படிக்கிறார்கள்.

இப்படிப் படிப்பதன் மூலம் உலக அளவில் குஜராத் மாணவன் தனித்து விடப் படும் ஆபத்து இருப்பது மட்டுமல்ல பாதிக்கப் பட்டவன் மீது கோவமும் பாதகத்தை செய்தவன் மீது அனுதாபமும் அவனுக்கு ஏற்படும்.

இதை இந்தியா முழுக்க கொண்டு செல்ல வேண்டும் என்றுதான் பிரதமர் விரும்புகிறாரோ என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. அதை கொண்டு செல்ல ஆசிரியர்களுக்கு பஞ்சம் இருப்பதாகத்தான் பிரதமர் பார்க்கிறார் போலும்.

இப்படி ஒரு பாடத்தை வைப்பதை இன்னும் கொஞ்சம் நீட்டினால் வருங்காலத்தில் காந்தியின் கொலையினைக் கூட இவர்கள் நியாயப் படுத்தக் கூடும். கோட்சேவினைக் கூட நல்லவனாக தங்களது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க முடியும்.

சுற்றிச் சுற்றி இது குறித்தே நாம் பேசுவதற்கு காரணங்கள் இருக்கின்றன.

ஒரு பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கார் பெயரை வைப்பதற்கே கடுமையான எதிர்ப்பை எதனினும் மூர்க்கமாகக் காட்டியவர்கள் பாரதிய ஜனதாக் கட்சியினர். ஆனால் தனது தேர்தல் பிரச்சாரத்தின்போது மோடி அவர்கள் வாஜ்பாய் அவர்களுக்கே மாரடைப்பை ஏற்படுத்தக் கூடிய அளவில் ஒரு செய்தியை சொன்னார். அம்பேத்கார் அவர்களுக்கு வாஜ்பாய் அவர்களது ஆட்சிதான் பாரதரத்னா வழங்கியது என்று சொன்னார். அம்பேத்கார் அவர்களுக்கு பாரதரத்னா வழங்கி கௌரவித்தது வி. பி. சிங் என்றுதான் தோன்றுகிறது. ஆனால் சத்தியமாக வாஜ்பாய் அவர்கள் அதை செய்யவில்லை. மோடி அவர்களைப் பார்க்கிலும் வாஜ்பாய் அவர்கள் பெருந்தன்மையானவர் என்பதில் நமக்கு கருத்து வேறுபாடு இல்லாமல் இருக்கலாம். ஆனால் அம்பேத்காருக்கு பாரத ரத்னா கொடுக்குமளவிற்கு அவரது பெருந்தன்மை இருப்பதாக அவரே ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

இதை எல்லாம் ஏன் செய்ய வேண்டும் இவர்கள்? எப்படியேனும் வரலாற்றை திரித்து மதமயப் படுத்திவிட வேண்டும். மேன்மைமிக்க பன்முகத் தன்மை கொண்ட இந்த மண்ணின் கலாச்சாரத்தை மதமயப் படுத்திவிட வேண்டும் என்பதுதான் அவர்களது நோக்கம்.

பன்முகத் தன்மை என்பது இந்தியாவின் மேன்மைமிக்க மாண்பு. உலகமே வியந்து பார்க்கும் ஒன்று. இத்தனை மொழிகள், இத்தனை கலாச்சாரங்கள், வேறு வேறான உணவு வகைகள், ஆனாலும் அவற்றின் ஊடாக ஏதோ ஒரு கண்ணுக்குத் தெரியாத சங்கிலிப் பிணைப்பு. சாத்தியமே இல்லாத ஒன்று எப்படி இந்தப் பூமியில் சாத்தியப் பட்டிருக்கிறது என்று இந்தியாவின் எதிரிகளே வியந்து பார்க்கும் உன்னதமான மாண்பு.

அதை சிதைப்பது என்பதில் இவர்கள் வெறிகொண்ட தீவிரமானவர்கள் என்பதை சமூக வலைத் தளங்களில் இந்தியை மூர்க்கமாக அவர்கள் திணிக்க முயல்வதிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

இன்னுமொரு மொழியைப் படிக்கக் கூடாதா என்று சிலர் கேட்கிறார்கள். ஒன்றல்ல ஒருவன் தன்னால் எத்தனை மொழிகளைப் படிக்க இயலுமோ அத்தனை மொழிகளையும் கற்றுக் கொள்ள வேண்டும்தான். பிரச்சினை என்பதே இந்தியைப் படித்தே ஆக வேண்டும் என்று கட்டாயப் படுத்துவதில்தான். இன்னும் சிலர் இந்தியை எதிர்த்ததால்தான் தாங்கள் இந்தியைப் படிக்க முடியாமல் போனதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருக்கால் அதைப் படித்திருந்தால் தங்களது வாழ்க்கை பிரகாசமாகியிருக்கும் என்றும் சொல்கிறார்கள். அவர்களது கருத்துப்படி இந்தியை எதிர்த்ததால்தான் தங்களது வாழ்க்கை கருகிப் போயிருப்பதாகச் சொல்கிறார்கள்.

மத்திய அமைச்சர் மாண்பமை ராதாக்கிருஷ்ணன் அவர்கள் கூட இந்தி திணிக்கப் படுவதை தாமும் எதிர்ப்பதாகவும் ஆனால் இந்தியை கற்றுக் கொள்வதை தடுப்பதை தாம் எதிரப்பதாகவும் சாரப்படும்படி பேசியிருக்கிறார்.

இந்தி கற்பதை யாரும் எப்போதும் எதிர்க்கவே இல்லை. தமிழ் மண்ணில் இந்தி பிரச்சார சபாக்கள் வளமையோடு தொடர்ந்து செயல் பட்டுக் கொண்டுதானிருக்கின்றன. போக எல்லா ஊர்களிலும் இந்தியை படிப்பதும் தேர்வெழுதுவதும், பி.ஏ, எம்.ஏ என்று இந்தியில் பட்டங்களை வாங்குவதும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது. அதை யாரும் எப்போதும் தடுத்ததே இல்லை.


இந்திக்காக இவ்வளவு கவலைப் படும் தமிழர்கள் பலர் தமிழ் மண்ணில் நமது பள்ளிகளில் தமிழை என்று கூட அல்ல தமிழ் அல்லது தாய்மொழியை ஒரு பாடமாகப் படிக்க வேண்டும் என்பதை எதிர்ப்பதில் உள்ள அரசியலைத்தான் உணர்ந்து கொள்ள இயலவில்லை.

இந்தி நம் மீது திணிக்கப் படுவதை மட்டுமல்ல, ஒருக்கால் பீஹாரி மீதோ, வங்காளி மீதோ அல்லது வேறு யார் மீதோ தமிழ் திணிக்கப் பட்டாலும் அதை நாம் எதிர்க்கவே வேண்டும். எதிர்க்கவே செய்வோம்.

ஒரு மொழி, ஒரு மதம், ஒற்றைக் கலாச்சாரம் என்கிற அவர்களது மறைமுக செயல்திட்டம் திரை கழன்று வெளி வரத் தொடங்கியிருப்பதையே இது காட்டுகிறது.

மன்மோஹனுக்கும் மோடிக்கும் இடையில் ஆறு வித்தியாசங்களை அல்ல அவர் பேச மாட்டார், இவர் பேசிக் கொண்டே இருப்பார், அவர் கடவுள் நம்பிக்கை கொண்டவர், இவர் மதவாதி என்பதைத் தவிர மூன்றாவது வித்தியாசமே சாத்தியமில்லாதது.

மன்மோஹன் அவர்களை சோனியா அவர்களின் கைப் பொம்மை என்றும், சுயமாக எதையும் முடிவெடுக்கத் தெரியாதவர்



என்றும் சொல்லப் பட்டதில் உண்மை இல்லாமல் இல்லை. அவரது இடுப்பில் கட்டப் பட்டிருந்த கயிறின் ஒரு முனை சோனியா அவர்களின் கைகளில்தான் இருந்தது. கயிறை எவ்வளவு நீளத்திற்கு சோனியா அவர்கள் அனுமதித்தாரோ அந்த நீளம் மட்டுமே மன்மோஹன் அவர்களால் பயணிக்க முடிந்தது.

மோடி அவர்களும் அப்படித்தான் என்பதையும், அங்கு சோனியா என்றால் இங்கு ஆர்.எஸ்.எஸ் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மோடியும் சுயமாக எதையும் செய்து விட இயலாது என்பதையும் அப்படித் தப்பித் தவறி ஆர்.எஸ்.எஸ் சொல்வதை மீறி அவர் ஏதேனும் செய்ய முற்சித்தால் அதே புள்ளியில் அவர் தூக்கி எறியப் படுவார் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த வெளிச்சத்தில் பார்த்தால்,

"நமது நாடு ஜப்பானோடும் சீனாவோடும் போட்டி போட்டு முன்னேற வேண்டுமென்றால் நல்ல மாணவர்கள் உருவாக வேண்டும். நல்ல மாணவர்கள் உருவாக வேண்டுமென்றால் அதற்கு நல்ல ஆசிரியர்கள் வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்தியாவில் அத்தகைய நல்ல ஆசிரியர்களுக்கு கடுமையான பஞ்சம் இருக்கிறது" என்ற அவரது கூற்றைக் கூட ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் கூற்றாகத்தான் பார்க்க வேண்டும். எதிர்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் தூதன்

தூரமாய் போய்க்கொண்டிருக்கிறது
நீயும் நானும் அவனும் ஒன்றெனும் கனவு
கிளிஞ்சல்களை முத்துக்களாக்கவும்
வேர்களை பூக்களாக்கவும்
அந்த மேதை நடந்த பாதை விலகிச்
செல்கிறது.


வணிகர்களின் கப்பல்களில் பயணிக்கின்றன
நாடுகள் பிறிதொரு நாட்டிற்கு
தாவரங்களை தின்று கொழுத்து
விம்மி எழுகின்றன எந்திரங்கள்
விசுவாசிகளின் கம்பளங்களில் அமர்கிறது
அவர்களுக்கான அரசாங்கம்.
எனவே சமப்படுதல் என்னும் கருத்துரு
தனித்து விடப்பட்டுள்ளது
இருண்மையின் அந்தகாரத்தில்

பாளைகளை கடித்துத் தின்னப் பழகிவிட்டோம்
ஒட்டக பை நீர்குடித்து விடாய் தீர்க்கிறோம்
மணல்வெளிகளை புல்வெளிகளாக
புனைந்து கொண்டிருக்கிறோம்
நம் கவிதைகளில்
இணைந்திருப்பது என்னும் அவன் கனவு
நெடுங்காட்டுள் உறங்குகிறது
மரவண்டைப்போல

அந்த யூதனுக்கு முன்பும் இருந்தனர் தூதர்கள்
இவன் தாம்புலத் தட்டில் வைத்து
தராதவன் தீர்வை
பண்டங்களின் கிண்ணத்தில் நம்
உபரிமதிப்பின் முகம் இருக்க வேண்டும் எனில்
உப்பியவன் வயிற்றைக் கிழித்து
உறிஞ்சப்பட்டவன் வெளிவர வேண்டும்
ஓர் நாள்
என்றவன் காட்டியதிசை வெகு தூரத்தில்

மீன்கள் அருந்தத் தயங்கினால்
திமிங்கலங்கள் அருந்தி முடித்துவிடலாம்
கடலை
தப்பிப்பதா? கடலை விழுங்கி கடலாவதா?
கூழாங்கற்களிலிருந்து அவன் கூவுகிறான்

செதிளை வாளாக்குங்கள்
பற்களை கற்களாக்குங்கள்
அவர்களை அழிக்கும் ஆயுதம்
அவர்களாலேயே
என்றவன் குரல் கேட்கிறது தூரத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முராய்து கண்டவ்ரு அலீ மனிக்ஃபான்

# இயற்கையே ஆசிரியனாய்...

அந்த கல் கட்டிடத்தின் வாயிலிற்கு ஓலை கிடுகினாலான கதவு. சன்னலின் இடத்தில் வட்ட வடிவிலான சிமிட்டி கிராதிகள்.

அந்த கிடுகு, கிராதி துளைகள் வழியாக அரூப மாயாவியான காற்றானது குடிலுக்குள் வருவதும் போவதுமாக இருந்தது. வீட்டின் உள்ளே வாழ்க்கையை அன்றாடம் நகர்த்தி செல்வதற்கு தேவையான மிக எளிய தளவாடங்களே இருந்தன.

அங்கொன்றும் இங்கொன்றுமாக மரங்கள் வளர்ந்து நின்றன. அந்த மரத்திலிருந்து பல அடிகள் தள்ளி நின்று நீரூற்றிக் கொண்டிருந்தார் ஒரு முதியவர்.

தலைப்பாகையும் கை பனியனும் லுங்கியும் அணிந்திருந்த அவர் எங்கள் நண்பர்கள் குழாமை பனங்கற்கண்டும் எலுமிச்சை சாறும் கலந்த பானகம் தந்து வரவேற்றார். அவர்தான் அலீ மனிக்ஃபான்.

ஒடிசலான குச்சி போன்ற உடல்வாகு. புன்னகையுடன் சன்னமான குரலில் மென்தமிழில் நிதானமாக உரையாடத் தொடங்கினார்.

குடிலுக்குள்ளிருந்த அவரது மனைவி அவருடன் கோபமாக ஏதோ பேச எங்களுக்கு புரியாத சில சொற்களில் அவரை கையமர்த்தினார் மனிக்ஃபான். மனைவியுடன் அவர் பேசிய மொழி திவேஹி என்பதை பின்னர் அறிந்து கொள்ள முடிந்தது. அந்த மொழியானது மாலத்தீவிலும் லட்சத்தீவிலும் நடைமுறையில் உள்ளது.

முராய்து கண்டவ்ரு அலீ மனிக்ஃபான் என்ற முழுப்பெயரைக்கொண்ட அலீ மனிக்ஃபான் பிறந்து வளர்ந்த இடம் மினிக்காய் தீவாகும்.

இவரது முன்னோர்கள் மாலத்தீவிலிருந்து லட்சத்தீவில் குடியேறிவர்கள். இவரது தந்தை லட்சத்தீவின் தலைமை நிர்வாகியாக (அமீன்) இருந்துள்ளார்.

வள்ளியூரிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில் சில கிலோமீட்டர் தொலைவில் உள்ளது கிழவனேரி கிராமம். தார் சாலையிலிருந்து விலகி கொஞ்சதூரம் உள்ளே சென்றால் வறண்டு பரந்த நிலத்தின் நடுவே நிற்கின்றது அலீ மனிக்ஃபானின் குடில்.

வீட்டை கட்டி அருகே உள்ள கிணற்றை தோண்டியது அவரும் மனைவியும்தான். எந்த வித வேலையாளின் உதவியும் இல்லாமலேயே இதை செய்து முடித்துள்ளனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள நடுவணரசின் கடல்சார் மீன்வள ஆய்வு கழகத்தில் (CMFRI) 20 ஆண்டுகள் அருங்காட்சியக உதவியாளராக பணியாற்றியுள்ளார் அலீ மனிக்ஃபான்.

இங்கு பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே இயற்கை வேளாண்மை குறித்த தனது கனவுகளை நனவாக்க நினைத்தார். அதற்காக வேதாளை என்ற ஊரில் நிலம் வாங்கினார்.

அருகாமையில் கிடைக்கும் பொருட்களை வைத்து உள்ளூரின் தட்ப வெப்ப நிலைக்கேற்றவாறுதான் வீடு கட்ட வேண்டும் என கூறும் அலீ மனிக்ஃபான் அதற்கேற்ப குடிசையமைத்து குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்.


தனது இருப்பிடத்திற்கான மின் இணைப்பிற்கு அரசிடம் விண்ணப்பித்து சலித்து போய் தானாகவே மின் உற்பத்தியிலும் ஈடுபட்டார்.

புதுமைக்கும் தேடலுக்கும் கடல்சார் மீன் வள ஆய்வு கழக பணியில் இனிமேலும் வாய்ப்பில்லை என்றான பிறகு அதிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றார்.

அதன் பிறகு வேதாளையிலிருந்து புறப்பட்டு வள்ளியூர் அருகே 15 ஏக்கர் நிலத்தை வாங்கி DO NOTHING FARM என்ற இயற்கை வேளாண் பண்ணையை அமைத்தார்.

மனிதனின் இடையூறு இல்லாமல் மரங்களும் செடி கொடிகளும் எப்படி வளர்கின்றன என்பதை சோதித்து அறிவதற்காகவே இந்த பண்ணையை அமைத்ததாக மனிக்ஃபான் கூறுகின்றார்.

அத்துடன் மொட்டைப்பனையில் காற்றாடிகளை பிணைத்து கார் பேட்டரி வாயிலாக தனது வீட்டிற்கு தேவையான மின்சாரத்தை வெட்ட வெளியிலிருந்து கறந்து கொண்டிருந்தார்.



அணு உலைகள் உயிரினத்திற்கு ஆபத்தானவை. அவை சூழலுக்கும் கேடு பயப்பவை. அணு உலையிலிருந்து மின்சாரம் கிடைக்கும்தான் ஆனால் உலை வெடித்தால் ஊர் இருக்காது என அழுத்தம் திருத்தமாக கூறுகின்றார்.

பல அடி தள்ளி நின்று மரங்களுக்கு நீர் ஊற்றுவது ஏன் என வினவினோம்.

மரங்களின் வேர்கள் இயல்பாகவே நீர் தேடி பயணிக்கக்கூடியவை. சற்று தொலைவில் நீரூற்றும்போது அதை தேடி அந்த வேர்கள் பரவும். அதனால் மரம் வலிமையாக நிலையாக கொள்ளும். ஆனால் நாம் மரத்தின் அடியிலேயே நீரை ஊற்றி அதன் தற்சார்புத்தன்மையை பலவீனப்படுத்துகின்றோம் என்றார்.

அரசு பணியிலிருந்து விலகிய பிறகு தற்சார்பு வாழ்வியலை தனது வாழ் நாள் பணித் திட்டமாக கொண்டு இயங்கும் அலீ மனிக்ஃபானின் செயல் களமாக விளங்குவது அவரது சொந்த உடலும் குடும்பமும்தான்.

அன்று காந்தியடிகள் வெள்ளை வல்லாதிக்கத்திற்கு எதிராக தனது உடலையும் ஆன்மாவையும் ஆன்மீகத்தையும் ஆயுதமாகவும் கேடயமாகவும் தாங்கினார். அதிலிருந்துதான் இந்தியாவிற்கான வாழ்வியலையும் உருவாக்கி முன்வைத்தார்.

இன்று வங்கொள்ளைக்கார மருந்து, விதை, உரம், பூச்சிக்கொல்லி உற்பத்தி நிறுவனங்கள் தங்களது பொருட்களை இந்தியா உட்பட மூன்றாம் உலக நாடுகளில் உள்ள மண்ணின் மீதும் மக்களின் மீதும் நச்சு சோதனை நடத்திப்பார்க்கும் காலம்.

ஒரு மனித கூட்டத்தின் மீது நுகர்வு, லாப வெறியானது தொற்று நோய் போல ஆக்கிரமிப்பு நடத்தும்போது அந்த மண்ணானது இயல்பாகவே காந்தியடிகள் , நம்மாழ்வார் போன்ற நச்சு முறிக்கக்கூடிய உயிர் காக்கும் அமுத கலயங்களை உண்டு பண்ணும் போலும்.

இன்று அந்த அமுத கலய அடுக்கில் மற்றொரு காந்தியாழ்வாராக அலீ மனிக்ஃபான் அடையாளம் காணப்பட்டிருக்கின்றார்.

ஆடு தின்னும் அனைத்து வகை இலை தழைகளையும் மனிதன் சாப்பிடலாம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொட்டைப்பனையில் காற்றாடிகளை பிணைத்து கார் பேட்டரி வாயிலாக தனது வீட்டிற்கு தேவையான மின்சாரத்தை வெட்ட வெளியிலிருந்து கறந்து கொண்டிருந்தார். அணு உலைகள் உயிரினத்திற்கு ஆபத்தானவை. அவை சூழலுக்கும் கேடு பயப்பவை.**

அடித்துக் கூறும் அவர் தனது வீட்டில் சமைப்பதே இல்லை. இலை தழைகள்தான் அவரின் அன்றாட உணவு.

நோய்வாய்ப்பாட்டால் மருந்துகள் எதுவும் உட்கொள்வதில்லை. மாறாக நோன்பு பிடிப்பதன் மூலமாக தானாகவே நோய் தீர்க்கும் உடலின் ஆற்றல் செயல்பட தொடங்குவதாக கூறினார்.

பெரும்பாலான நேரங்களில் உணவை அசை போட்டுக் கொண்டே இருக்கும் கால் நடைகளுக்கு ஏதேனும் நோய் வந்தால் அவை உணவை உண்ண மறுக்கின்றன . நோய் சரியான பிறகே அவை மீண்டும் இரை எடுக்க தொடங்குகின்றன என விளக்கினார்.

எல்லோரையும் போல இளம் வயதில் கேரள மாநிலம் கண்ணூரில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு அனுப்பபப்பட்டார் அலீ மனிக்ஃபான். அவரின் அறிவுத்தேடலானது வகுப்பறைகளின் சுவர்களுக்குள் அடங்கி இருக்க மறுத்தது. மாணவன் அலீமனிக்ஃபானின் கூர்மையான கேள்விகளுக்கு விடையளிக்க திணறினர் ஆசிரியர்கள்.

இதன் விளைவாக எட்டாம் வகுப்போடு அவரது நவீன முறை சார்ந்த கல்வி முடிவிற்கு வந்தது. அதன் பிறகு அன்றாடம் பல வண்ணக் கோலம் கொள்ளும் இயற்கையிலிருந்துதான் அவர் தனக்கான கல்வியை திரட்டிக் கொண்டார். கடல் ,மலை, ஆறு, குளம், குட்டைகள் அவரின் ஆசான்களாக மாறி போதித்தன.

அவர் தனது பிள்ளைகளையும் அவர்களின் இளம் பருவத்தில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேயில்லை. அவர்களை தனது மடியில் அமர்த்தி தம் அன்றாட வாழ்வின் பரப்பிலிருந்து எழும் கூறுகளிலிருந்து தமக்கான பட்டறிவை உருவாக்கிக் கொள்ளும் நுட்பத்தை மட்டுமே அடையாளங்காட்டினார். பின்னர் அவர்களில் சிலர் பத்தாம் வகுப்பிற்குத்தான் முறை சார்ந்த கல்வி நிறுவனங்களுக்கு சென்றனர்.

குழந்தைகளை நீங்கள் வளர்க்க தேவையில்லை. உங்களின் கண்காணிப்பில் அவர்களை வளர அனுமதித்தால் மட்டும் போதும். மரங்களை எப்படி இறைவன் வளர்க்கின்றானோ அதே போல பிள்ளைகளையும் வளர்ப்பான் என கூறும் மனிக்ஃபான் அதை தன் வீட்டில் நிரூபித்தும் காட்டியுள்ளார்.

முறையாக பள்ளிக்கூடமும் செல்லாமல் கடலியல் கழகத்திலும் பயிலாமல் அலீமனிக்ஃபானிடமிருந்து பெற்ற தலைமுறை கல்வியின் விளைவாக அவரது மகன் மூஸா மனிக்ஃபான் வணிக கப்பல் துறை (*MERCHANT NAVY*) யில் நல்ல நிலையில் பணியாற்றி வருகின்றார்.

இன்றைய கல்வி முறையைப் பற்றி அலீ மனிக்ஃபான் கூறுகையில், "பாடசாலை கல்வியானது செயற்கையாக இருக்கின்றது. மாணவர்களுக்கு வாழ்க்கை பற்றிய தன்னம்பிக்கையை இக்கல்வி வழங்குவதில்லை. அத்துடன் அவர்களின் குண நடத்தைகளிலும் நல்ல விளைவுகளை உருவாக்குவதில்லை. இளம் மாணவர்களின் படைப்பூக்கத்தை அது இல்லாமல் ஆக்குவதோடு மட்டுமில்லாமல் அவர்களின் வளர்ச்சியையும் மட்டுப்படுத்துகின்றது" என குற்றம் சாட்டினார்.

கேரள மாநிலம் திருஸ்ஸூர் மாவட்டம் சாவக்காட்டில் உள்ள பாவரட்டியில் அலீ மனிக்ஃபானின் இளைய மகள் ஆமினா *NATURAL SCHOOL* என்ற பெயரில் இயற்கை பாடசாலையை 2002 ஆம் ஆண்டு வரை நடத்தி வந்துள்ளார். மற்ற இரு மகள்களும் வெவ்வெறு பாடசாலைகளில் ஆசிரியைகளாக பணி புரிகின்றனர்.

## நவீன கடலோடி

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சிந்துபாத் என்ற கடலோடி கதை மாந்தன் பயணித்த கற்பனை தடங்களுக்கு உயிர் கொடுக்க எண்ணினார் அயர்லாந்தை சார்ந்த கள ஆய்வாளாரும் எழுத்தாளருமான டிம் செவரின் (*TIM SEVERIN*).

சிந்துபாத் பயணித்த மஸ்கட்டிலிருந்து சீனத்தின் கேன்டன் (*CANTON*) துறைமுகம் வரையிலான *9655* கிலோமீட்டர் கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றைய கல்வி முறையைப் பற்றி அலீ மனிக்ஃபான் கூறுகையில், "பாடசாலை கல்வியானது செயற்கையாக இருக்கின்றது. மாணவர்களுக்கு வாழ்க்கை பற்றிய தன்னம்பிக்கையை இக்கல்வி வழங்குவதில்லை. அத்துடன் அவர்களின் குண நடத்தைகளிலும் நல்ல விளைவுகளை உருவாக்குவதில்லை.**

பாதையில் தன் குழுவினருடன் டிம் செவரின் பயணித்துள்ளார்.

இந்த பயண பட்டறிவை THE SINDBAD VOYAGE என்ற பயண குறிப்பு நூலாகவும் எழுதி வெளியிட்டுள்ளார்.

அந்த கடல் பயணத்திற்கான "சோஹர்" (SOHAR) என்ற பெயருடைய 27 மீட்டர் நீளமுள்ள மரக்கலத்தை 11 மாத கால உழைப்பில். தென்னை மட்டை, கயிறு , அயினி மரம் என்ற இயற்கை மூலப் பொருட்களைப் பயன்படுத்தி வடிவமைத்து உருவாக்கியது அலீ மனிக்ஃபான் தலைமையிலான குழுவாகும்.

இந்த மரக்கலமானது 16 ஆம் நூற்றாண்டின் போர்த்துக்கீசிய ஆவணத்தில் காண கிடைக்கும் வடிவமைப்பின் அடிப்படையில் பண்டைய திவேஹி தொழில் நுட்பத்தின்படி உருவாக்கப்பட்டுள்ளது

கப்பல் கட்டுதல் என்பது அலீ மனிக்ஃபானின் குடும்பத்தில் வாழையடி வாழையாக பின்பற்றப்பட்டு வரும் தொழிலாகும். இந்த சோஹர் மரக்கலம் தற்சமயம் மஸ்கட்டில் உள்ள கடல்சார் அரும்பொருள் காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

கடல், மரக்கலம் என வரும்போது மனிக்ஃபான் கடலில் விழுந்த கதையையும் சொல்லத்தான் வேண்டும்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் நடந்த நிகழ்வு. அப்போது அவருக்கு வயது 72.

கவரட்டியில் உள்ள மீன்பிடி படகு துறையிலிருந்து கால் தவறி கடலில் விழுந்து விட்டார். அவர் விழுந்த இடத்தில் கடலின் ஆழம் 18 அடிகளாகும். விழுந்த வேகத்தில் காலின் கணு விலகி விட்டது. உடனே சுதாரித்துக் கொண்டு ஒரு கையில் செல் பேசியை பற்றிக்கொண்டே நீந்திக் கரையேறி உள்ளார். மருத்துவ பரிகாரம் எதுவும் எடுக்காமல் ஒன்றரை மாதம் வரை படுக்கை ஓய்வில் இருந்தவருக்கு விலகிய கால் கணு தானாகவே பொருந்தி விட்டது.

கடலின் மகனான அலீ மனிக்ஃபான் பல அரிய வகை மீன் இனங்களை சேகரித்துள்ளார். அவற்றின் உள்ளூர் பெயர்களையும் அடையாளங்காணும் பணியில் மண்டபத்தில் உள்ள CMFRI யின் அன்றைய இயக்குநரான டாக்டர்எஸ். ஜோன்ஸுக்கு உதவியுள்ளார்.

இளைஞனான அலீ மனிக்ஃபானின் திறமையை கண்டு வியந்த டாக்டர். எஸ்.ஜோன்ஸ் அலீ மனிக்ஃபான் கண்டு பிடித்த புதிய வகை மீன் ஒன்றிற்கு அவரின் நினைவாக *abu def def manikfani* என்ற பெயரை சூட்டியுள்ளார். அத்துடன் அலீ மனிக்ஃபானை மண்டபம் கடல் சார் ஆய்வு நிலையத்தில் அருங்காட்சியக உதவியாளராகவும் பணியில் சேர்த்துக் கொண்டார்.

தனக்கு விருப்பமான கடலையும் மீனையும் போல தனது தேடலை அவர் பரந்து விரிந்ததாக ஆக்கிக் கொண்டார். இதன் விளைவாக அலீ மனிக்ஃபான் கடல் சார்ந்த விஷயங்களோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை என்பதற்கு அவரின் மொத்த சாதனைகளும் சான்றாக விளங்குகின்றன. தான் கண்டு பிடித்த உருளை மின்னோடியினால் இயங்கும் மிதிவண்டியில் தனது மகனுடன் புது தில்லி வரை அலீ மனிக்ஃபான் பயணித்துள்ளார்.

இயற்கையின் எல்லா வெளிப்பாடுகளிலும் மனித வாழ்வை பிணைத்திடும் முனைப்போடு உள்ள அலீ மனிக்ஃபானுக்கு அவரது தாய்மொழியுடன் மேலதிகமாக ஆங்கிலம், மலையாளம், தமிழ், உர்தூ, ஹிந்தி என்பன சரளமாக தெரியும். இதல்லாமல் 08 மொழிகளிலும் அவருக்கு பழக்கம் உண்டு.

சமஸ்கிருதம், அரபி, இலத்தீன் என்று தலையாய மொழிகளை கற்றால் இந்திய துணைக்கண்டம், மத்திய கிழக்கு, அய்ரோப்பா பகுதிகளில் புழக்கத்தில் உள்ள பெரும்பாலான மொழிகளுடன் பழகுவது எளிது என்கின்றார் அலீ மனிக்ஃபான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையை மனிதன் சூறையாடும்போது பேரழிவுகளின் வடிவத்தில் அவனை அது முழுமையாக திருப்பி தாக்குவது உறுதி. அதே போல இயற்கையை உறவாடுபவர்களுக்கு அது பன்மடங்காக திரும்ப கையளிக்கும் வள்ளல் தன்மை வாய்ந்தது என்பதற்கு அலீ மனிக்ஃபானின் வாழ்வே ஒரு சாட்சி.

எட்டாம் வகுப்பை தாண்டாத அலீ மனிக்ஃபானுக்கு கப்பல் கட்டும் கலை, தற்சார்பு வாழ்வியல், கட்டிடக்கலை, மொழியியல், கல்வி, பொறியியல் தொழில் நுட்பம், கடல் உயிரியல், கடல்சார் ஆய்வு, புவிபரப்பியல், வானியல், வேளாண்மை, சூழலியல் போன்றவற்றில் அறிமுகமும் ஆழமும் கிடைத்ததென்றால் அது இயற்கை அளித்த கொடை என்பதை தவிர வேறு என்னவென்று சொல்ல முடியும் ?

அலீ மனிக்ஃபானின் வாழ்க்கையை ஆங்கிலத்தில் *THE MAN IN MILLION* என்ற பெயரில் கேரளாவைச் சார்ந்த இயக்குநர் மாஜித் அழிகோடு ஆவணப்படமாக இயக்கியுள்ளார். இது மலையாளத்தில் "கண்டுபிடித்தங்களுடே கப்பித்தான்" என்ற பெயரிலும் வெளிவந்துள்ளது. இதன் உர்தூ. ஹிந்தி, அரபி மொழியாக்கமும் விரைவில் வெளியாக உள்ளது.

நானும் நண்பர்களும் வள்ளியூரில் உள்ள அவரது இயற்கை பண்ணையில் கண்ட காட்சிகள் எல்லாம் 1993 ஆம் ஆண்டு காலப்பகுதியை சேர்ந்தது.

இன்று அவர் கட்டிய வீடும் இல்லை. கிணறும் இல்லை. அந்த இயற்கை பண்ணை அமைந்துள்ள வள்ளியூரின் பொட்டல் காட்டில் ஏராளமான வீடுகள் வந்து விட்டன. அந்த 15 ஏக்கர் இயற்கை பண்ணையானது சொந்த தேவையை ஒட்டி அவரது குடும்பத்தினரிடையே பங்கிடப்பட்டு விட்டது.

அலீ மனிக்ஃபான் கேரளத்திற்கு சென்று விட்டார். அவரது குடும்பத்தினரும் இன்னும் சில மாதங்களில் வள்ளியூர் நிலத்தை விற்று விட்டு தங்களது தாய் மண்ணான மினிக்காய் தீவில் போய் குடியேறப்போவதாக கூறினார்கள். இந்த செய்தியை கேட்கவே பிடிக்கவில்லை.

தற் சமயம் உலக சந்திர நாட்காட்டிக்கான முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் 76 வயதாகும் அலீ மனிக்ஃபானிடம், "நீங்கள் நடந்து வந்த



பாதையில் ஏன் பிறரை பயிற்றுவிக்கவில்லை?" என கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னார், "நான் செய்து கொண்டிருக்கும் விஷயங்களை யாரையும் ஏற்கும்படி செய்ய விரும்பவில்லை. இது ஒரு பரிசோதனை மட்டுமே" உலக செயல்களத்தின் ஊடாக பயணித்த ஆன்மீக கீற்றின் லௌகீக உள்ளொளிப்பயணமாகத்தான் அலீ மனிக்ஃபானின் வாழ்வை புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

காந்தியடிகள், மசானபு ஃபுக்கோகா, நம்மாழ்வார், அலீ மனிக்ஃபான் போன்றோர் பேரண்ட ஆற்றலின் தூதுவர்கள். நாம் வாழும் உலகிற்கு பேராசான்கள்.

தன் தேவைகளுக்காக முற்றிலும் இறைவனை சார்ந்திருத்தல் என்ற சித்தர், ஸூஃபி ஞான முனிவர்களுடைய தத்துவ மரபின் சம கால செயல் நீட்சிதான் இந்த ஆளுமைகள்.

இயற்கையையும் அதன் வளங்களையும் பணத்தாள்களில் அளவிடும் நமது மதிப்பீட்டு முறைக்குள் அடங்க மறுப்பவர்கள் அன்றாடம் விரியும் மலரைப்போல காலை கதிரவனைப்போல ஒவ்வொரு நாளும் வாழ்க்கையானது நிறைந்த அழகுடனும் நம்பிக்கைகளுடனும் மலர்கின்றது.

அனைத்தையும் ஒரே மூட்டையில் அள்ளி முடிந்திட வேண்டும் என்ற நுகர்வு வெறியும் அது சார்ந்த நமது வாழ்க்கை ஓட்டமும் அந்த நம்பிக்கை புலரியை காண முடியாமல் செய்யும் கருந்திரையாக தொங்கிக் கொண்டிருக்கின்றன.

அலீ மனிக்ஃபானின் பரிசோதனையின் பாதை நிறையும் இடத்தில் அந்த கருந்திரைகள் கிழித்து எறியப்பட்டு கிடக்கின்றன .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்த குரங்கு வரத்தான் செய்யும்

விவசாயத்தை நம்பியிருக்கும் ஊர் அந்த சிறு கிராமம். பகலில் பலரது நடமாட்டமும் கத்தரிவெருளிகளும் இருப்பதால் பறவையினங்களினால் அதிக அழிவு ஏற்படுபதில்லை. ஆனால் இரவுகள், அழிவுகளின் அலங்கோலங்களாகி அந்த ஊர் விவசாயிகளை பெரும் அவலத்துக்குள்ளாகியனவாகவே கழியும். குரங்குப் பட்டாளம் நாசம் செய்வதால் இதனைத் தடுக்க பெருமளவில் இரவுகளில் காவல் இருக்கும் நிலையில் இருந்தார்கள் கிராமவாசிகள். பரண் கட்டியும் ஆங்காங்கே தீப்பந்தம் வைத்தும் சுழற்சி முறையில் கிராமவாசிகளால் காவல் காக்கப்பட்டு வந்தது.

கல்யாண விடயமாக வந்து தங்கியிருந்த அயலூர்க்காரர், இவர்கள் படும் அவலத்தைப் பார்த்து "குரங்குக்காக இவ்வளவு சிரமப்பட வேண்டுமா? நம்ம ஊர்ப் பூசாரியை வரவழைத்து உரிய பூசையைச் செய்துவிட்டால் இந்தக் குரங்குக் கூட்டம் இங்கே தலைவைச்சுப் படுக்காது" என்றார். இதனைக் கேட்ட கிராமவாசிகள் தங்களுக்குள் பேசினார்கள்.

'பூசை வைச்சால் குரங்குகள் இவ்விடம் வராதா? இது தேவையில்லாத முயற்சி!!' என சில இளந்தாரிகள் பரிகசித்தார்கள். ஆனாலும் கூடியிருந்த ஊர்ப் பெரிசுகள் 'பூசாரியை வரவழைத்துச் செய்துதான் பார்ப்போமே!' என்ற முடிவுக்கே வந்தடைந்தார்கள்.

முறைப்படியாக பூசாரிக்கான அழைப்பு கிராமப் பெரிசுகளால் மேற்கொள்ளப்பட்டது. பூசாரியும் இவர்களின் நிலையை நன்கு கேட்டறிந்துவிட்டு அடுத்த வெள்ளி இரவு பூசை நடாத்த நாள் குறித்தார். இதற்காக 101 வெற்றிலை, 101 பாக்கு, 101 தேங்காய், 101 தேசிக்காய், 101 மாம்பழம், 101 செவ்வரத்தம் இளம்பூ மொட்டு (அதிகாலையில் மலரக்கூடியது), 101 பந்தம், 101 சேவல், 101 முட்டி கள்ளு, 101 ரூபா காசு, தீ மூட்ட அடுப்பு இதற்கானவை எனவாகக் கோரிக்கை இருந்ததால் ஊரே பரபரப்பாகியது. பூசை முடிந்ததும் ஊர் மக்கள் அனைவருக்கும் பொது உணவென முடிவாகியிருந்ததால் ஊர் கூடியெடுத்த பெருமெடுப்பிலான பூசையாக மேளதாள ஒலிகளுடன் அந்த வெள்ளி இரவு அமைந்தது.

என்ன ஆச்சரியம்!! காவலில்லாதிருந்த அன்றிரவு ஒரு குரங்குதானும் வரவேயில்லை. இதனால் பூசையையும், பூசாரியையும் மதிப்பாகச் சிலாகித்தனர் கிராமவாசிகள். 'கிராமத்தின் எல்லைகளில் மூட்டப்பட்ட தீயை அணைக்ககூடாது' எனவாக பூசாரி கட்டளையிட்டிருந்ததால் அவை ஆங்காங்கே புகைந்த வண்ணம் இருந்தன.

சனியன்று இரவும் குரங்கள் வரவில்லை. ஆனால் வழமைபோல் காவலில் இருந்தார்கள். அடுத்த நாள் காவலில் இருப்பதில்லை என முடிவாகி எல்லோரும்

என்ன ஆச்சரியம்!! காவலில்லாதிருந்த அன்றிரவு ஒரு குரங்குதானும் வரவேயில்லை. இதனால் பூசையையும், பூசாரியையும் மதிப்பாகச் சிலாகித்தனர் கிராமவாசிகள். 'கிராமத்தின் எல்லைகளில் மூட்டப்பட்ட தீயை அணைக்கக்கூடாது' எனவாக பூசாரி கட்டளையிட்டிருந்ததால் அவை ஆங்காங்கே புகைந்த வண்ணம் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படுத்து விட்டார்கள். ஆனாலும் குரங்குகள் ஞாயிறன்றும் வரவில்லை. இரவுகளில், காவல்காக்கும் வேலை இனியில்லையென ஊராருக்குப் பெரும் மகிழ்ச்சி.

அந்தோ பரிதாபம்!!, செவ்வாய் அதிகாலை சோகமென விடிந்தது. பெரியதொரு குரங்குக் கூட்டம் அக்கிராமத் தோட்டத்தினுள் புகுந்து அட்டகாசம் பண்ணிவிட்டிருந்தது.

அழிவின் அலங்கோலங்களைக் கண்ட, ஊராக்களுக்குக் கடுமையான கோவம். அத்தனை கோவத்துக்கும் உரியவரானார் பூசாரி. ஆங்காங்கே கூடிக் கதைப்பவர்களால் ஊர் அல்லோக கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது.

கிராமமே திரண்டெழுந்து நியாயம் கேட்க பூசாரியிடம் செல்வதாக முடிவாயிற்று. அயலூர் என்பதால் அனைவரும் செல்ல முடியாதிருந்தது. இதனால் ஊர்ப் பெரிசுகளும், இளைஞர்களும் செல்வதெனவாக முடிவானது. இளைஞர்கள் பொல்லுத் தடிகளுடன் பூசாரியை இரண்டிலொன்று பார்த்துவிடுவதெனவாகவே இருந்தனர்.

ஊரே திரண்டுவரும் காட்சி கண்டு மலைப்புறாமல் அவரது திண்ணையில் அமர்ந்திருந்தவாறு பூசாரி சிரித்துக் கொண்டிருந்தார். இவரது இந்த அசாத்திய நிலையால் கூட்டம் கொஞ்சம் நிதானிக்கவே செய்தது. ஊர்ச்சனங்கள் தங்களுக்கேற்பட்ட அழிவை கலங்கியவாறு கோவத்துடன் விவரித்தார்கள்.

எல்லாவற்றையும் கேட்ட பூசாரி, "அன்று நான் சொன்ன மந்திரங்களை நீங்கள் யாரும் கேட்டிருந்திருந்தீர்களா? அப்படி நடந்திருந்தால் இந்நிலை வந்திருக்காதே!!" என்றார் நிதானமாக.

"நீங்கள் யாரும் கேட்கும் நிலையிலா இருந்தீர்கள்! ஆடிப் பாடிக் கும்மாளமிட்டுக் கொண்டுதானே இருந்தீர்கள்!!" எனவாக எல்லோரது முகத்தையும் பார்த்துச் சொன்னார்.

சும்மா சொல்லக் கூடாது கூட்டம் மூச்சுவிடும் சத்தத்தையும் வெளிப்படுத்தவில்லை. ஆனாலும், "சரி பூசாரியாரே! அப்படியென்னதான் சொன்னீர்கள் மந்திரமாக?" எனவாக ஒரு குரல் ஒலிக்கத்தான் செய்தது.

"அப்படிக் கேளுங்கள்!!" எனச் சொன்ன பூசாரி, தனது தொண்டையைக் கனைத்து சரிசெய்துவிட்டுத் தொர்ந்தார்....

"வந்த குரங்கு வரத்தான் செய்யும்!

வராத குரங்கு வராது!!

செத்த குரங்கு சென்மத்திலும் வரவே வராது!!"

கூட்டம் விக்கித்துப் போனது.

**(நான் வாழ்ந்த கரம்பன் கிராமத்தில் எனது பதின்ம வயது காலத்தில் என் தந்தையார் சொன்ன கதை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்களும் சினிமாவும்

சமீபத்தில் புதுக்கோட்டையில் "மதங்களும் சினிமாவும்" என்ற தலைப்பில் மூன்று திரைப்படங்கள் திரையிடப்பட்டன. அத்திரைப்படங்கள் பற்றிய ஓர் அலசல்தான் இந்தக்கட்டுரை.

இந்திய சினிமா தோன்றிய போதும், பின்னர் தமிழ் சினிமா தோன்றிய போதும் துவக்க காலங்களில் இந்து மதம் சார்ந்த புராண, இதிகாசக் கதைகளே திரைப்படமாகின. இந்துக்களை பெரும்பான்மையாகக் கொண்ட இந்தியாவில் இந்தப் படங்களுக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது. வசூலும் ஆனது. தொலைக்காட்சி வந்தபோதும் துவக்க காலத்தில் குடும்ப, சமூக கதைகளுக்கு முன், ராமாயண மகாபாரதக் கதைகளே நெடுந் தொடர்களாக எடுக்கப்பட்டு வருடக்கணக்கில் ஒளி பரப்பப்பட்டன.

மத நம்பிக்கைகளுக்கும், மூடத் தனங்களுக்கும் இரையாகிக் கிடக்கிற இந்திய சமூகத்தை, பல பத்தாண்டுகளாக திரைப்படங்களும் தொலைக்காட்சிகளும் மதம் சார்ந்த சிந்தனைகளிலிருந்து வெளிவர விடாமல் பார்த்துக் கொண்டன; கொண்டிருக்கின்றன. இராம நாராயணன் புண்ணியத்தில் ஆத்தாக்கள் போற்றுகிற படங்கள் வெளிவந்து தியேட்டரிலேயே பல பெண்கள் சாமி ஆடிய செய்திகளை அறிவோம்.

தமிழில் மதங்களுக்கு எதிரான சினிமா ஆபூர்வம். கலைஞர் வசனத்தில் பராசக்தி படத்தில் கடவுள் மற்றும் கோயில் சார்ந்த ஆதிக்க சக்திகளை விமர்சித்து வலிமையான காட்சிகள் இருந்தன. இப்படி ஒன்றிரண்டு காட்சிகளோடு சரி. ஒரு முழுத்திரைப்படம் என்பது கிட்டத்தட்ட இல்லை. சமீபத்தில் சுசீந்திரனின் அழகர்சாமியின் குதிரை ஒரு இனிய வரவு.

பகுத்தறிவுவாதம் தமிழ் வெகுஜன சினிமாவுக்கும், டிவிக்கும் ஒவ்வாத ஒன்று. எனவே நம் தமிழ்ச் சமூகத்தில்மத நம்பிக்கைகள் ஆழ வேர்விட்டுச் செழித்திருக்கின்றன. அதனை யாராவது இலேசாக அசைக்க முனைந்தால் கலகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள் மதவாதிகள். மத உணர்வுகளைப் புண்படுத்துவதாக இலக்கியவாதிகளை, கலைஞர்களை இந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கிறார்கள். மத நம்பிக்கைக்கு எதிரான கருத்தரங்குகளை நடத்தவிடாமல் ஆட்சேபிக்கிறார்கள். தடை செய்கிறார்கள்.

எனவே மதங்களுக்கு எதிரான சினிமா என்பது இந்தியாவில் தமிழ்நாட்டில் எப்போதாவது அபூர்வமாக நிகழ்கிறது. ஆனால் இந்தியாவுக்கு வெளியே அப்படியில்லை என்றுதான் தோன்றுகிறது. மத மோதல்களைக் கண்டிக்கிற, மதத் தலைவர்களின் ஏமாற்றுத்தனத்தை அம்பலப்படுத்துகிற, நையாண்டி செய்கிற சினிமாக்களைப் பார்க்க முடிகிறது. இஸ்லாமிய நாடுகளிலிருந்து வரும் சினிமாக்கள் கூட முற்போக்கான மத எதிர்ப்புக் கருத்துகளைக் கொண்டிருக்கின்றன. தமிழில் இத்தகைய சினிமாக்களை எப்போது பார்க்கப் போகிறோம் என்று நம்மை ஏங்க வைக்கின்றன. அப்படிச் சமீபத்தில் நாம் பார்க்கக் கிடைத்த மூன்று திரைப்படங்கள் இதோ.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத நம்பிக்கைகளுக்கும், மூடத் தனங்களுக்கும் இரையாகிக் கிடக்கிற இந்திய சமூகத்தை, பல பத்தாண்டுகளாக திரைப்படங்களும் தொலைக்காட்சிகளும் மதம் சார்ந்த சிந்தனைகளிலிருந்து வெளிவர விடாமல் பார்த்துக் கொண்டன; கொண்டிருக்கின்றன.**

## 1

**இந்திய ஆவணப்படம் : ஃபைனல் சொல்யூசன்**
**இயக்கம் : ராகேஷ் சர்மா**
**மொழி : இந்தி**
**வெளிவந்த ஆண்டு : 2003**

*2002* ஆம் ஆண்டு குஜராத்தில் நடந்த கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தைக் தொடர்ந்து நடைபெற்ற இஸ்லாமியர்கள் மீதான தாக்குதலை மையப்படுத்தி இந்த ஆவணப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. நாயகன் படத்தில் கமலைப் பார்த்து ஒரு குழந்தை கேட்குமே "நீங்கள் நல்லவரா கெட்டவரா" என்று. அப்படி நம் நாட்டில் இருக்கும் ஒவ்வொருவரும் இவர் நல்லவரா? கெட்டவரா? என்று கேள்வி கேட்கும் தருணம் இது. யார் அவர்? நரேந்திர மோடிதான்.

நரேந்திர மோடி எவ்வளவு கெட்டவர், அவருக்குப் பின்னாலிருக்கிற இந்து மதவெறி அமைப்புகள் எவ்வளவு பயங்கரமானவை என்று இந்த ஆவணப்படம் விரிவாகப் படம் பிடித்திருக்கிறது.

கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவத்துக்கு பழி வாங்கும் விதமாக இந்து மத வெறியர்கள் முஸ்லீம்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் புகுந்து, வீடு வீடாக நுழைந்து பெண்களைக் கற்பழித்தும் குழந்தைகளையும் ஆண்களையும் வாளால் வெட்டியும் நெருப்பிலிட்ட கதையைப் பாதிக்கப்பட்டவர்கள் கண்ணீல் மல்க விவரிக்கும் போது நமக்கு நெஞ்சு கனத்துப் போகிறது.

கலவரமும் தாக்குதலும் எவ்வளவு திட்டமிடப்பட்டவை என்று நமக்குப் புரியும் போது அதிர்ச்சி ஏற்படுகிறது. மோடியின் காவல்துறை கைகட்டி நின்றதோடு பல இடங்களில் தாக்குதலுக்கு துணை போயிருக்கின்றது. சொல்லப் போனால் அரசு நிர்வாகமே இந்தப் படுகொலைக்கு ஆதரவாக இருந்திருக்கிறது என்பதை நடந்த சம்பவங்களால் ஆவணப்படுத்தியிருக்கிறது இப்படம்.

*2000* மற்றும் *2001* ஆம் ஆண்டுகளில் ஒட்டு மொத்தமாக குஜராத்தில் நிலவி வந்த அரசியல் சூழலை எடுத்துரைக்கிறது. *2002* ஆண்டு துவக்கத்தில் அரசியல் காட்சிகள் எப்படியெல்லாம் விறுவிறுப்பாக நகர்ந்தன என்றும், பிஜேபி கட்சிக்கு ஆதரவாக ஒரு இந்துத்துவா அலையை உருவாக்கும் பொருட்டு மத வெறி எப்படியெல்லாம் தூண்டிவிடப்பட்டது என்பதையும் அருமையாகச் சொல்கிறது இந்த ஆவணப்படம். இரண்டரை லட்சம் முஸ்லீம் மக்கள் உடமை இழந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்ட உண்மையை, எண்ணற்ற பெண்களின் கற்பழிப்பை, படுகொலைகளை மறைத்து முதலமைச்சராய் வலம் வந்த மோடியின் பாசிச முகமூடியை பச்சையாய்க் காட்டுகிறது இந்த ஆவணப்படம். இந்து மதச் சாமியார்கள் எல்லாம் மோடிக்கு ஓட்டுக் கேட்டு குஜராத்தின் கிராமம் கிராமமகச் சென்று ராமர் பெயரைச் சொல்லி, சோனியா கிறிஸ்தவர் என்றும் காங்கிரஸ்க்கு ஓட்டுப் போடுவது பாகிஸ்தானுக்கு ஓட்டுப் போடுவது என்றும் பேசி மக்களை திசை திருப்பி, அச்சமூட்டி, வாக்குகளைப் பெற்றதை அப்படியே பதிவு செய்திருக்கிறது.

மொதத்தில் *2002* சம்பவங்கள் குஜராத்தை மதரீதியாகப் பிளவுபடுத்தியதோடு குழந்தைகளின் மனங்களில் கூட காயங்களையும் நீங்காத வடுக்களையும் பழிவாங்கும் உணர்வையும் ஏற்படுத்தி உள்ளதை கவலையோடு பகிர்ந்து கொள்கிறது. மக்கள் ஒற்றுமைக்கு என்னதான் இறுதி தீர்வு? என்று அக்கறையோடு கேட்கிறது இந்த ஆவணப்படம்.

## 2

**இத்தாலிய கதைப்படம் : பிரதர் சன் சிஸ்டர் மூன்**
**இயக்கம் : பிராங்கோ ஜெஃபரலி**
**வெளிவந்த ஆண்டு : 1972**

வாடிகனில் பிரமாண்ட சபையில் அமர்ந்திருக்கும் போப்பைப் பார்த்துக் கேட்கிறான் ஒரு இளைஞன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"உங்கள் ஆயுளில் ஒரு வினாடியையோ உங்கள் உயரத்தில் ஒரு அங்குலத்தையோ உங்களால் கூட்ட இயலுமா? பறவைகளைப் பாருங்கள். அடுத்த வேளைக்கான உணவை அவைகள் சேர்த்து வைப்பதில்லை! இறைவனால் படைக்கப்பட்ட நீங்கள் மட்டும் ஏன் இப்படி பொருளாசைகொண்டவர்களாக இருக்கிறீர்கள்? இங்கே அமர்ந்திருப்பவர்கள் மன்னன் சாலமன் உடுத்துவதை விட ஆடம்பர உடை உடுத்தியிருக்கிறார்கள். உங்களின் இறை நம்பிக்கை அற்பமானது. இன்று என்ன சாப்பிடுவது? என்ன அருந்துவது? எதை உடுத்துவது? என்ற பொருளிய ஆசைகளுக்குப் பின்னாலேயே ஓடுகிறீர்கள். மற்றவைகளுக்கு முன்னால், உங்கள் மனதை இறைவனிடம் மட்டுமே ஈடுபடுத்துங்கள். உங்கள் செல்வத்தை இந்தப் பூமியில் சேர்த்து வைப்பதால் உங்கள் இதயமும் இந்தப் பூமியிலேயே இருக்கிறது! அது இறைவனின் ராஜ்யத்தில் இல்லை. கடவுள் நம்பிக்கை உள்ள ஒருவனால் பொருளை நேசிக்க முடியாது. பொருளை நேசிக்கிற ஒருவனால் கடவுளை நேசிக்க முடியாது. ஒரு நேரத்தில் ஒன்றுக்கு மட்டுமே ஒருவன் சேவையாற்ற முடியும். ஒரு குருவியைப் பாருங்கள். கொஞ்சம் பெர்ரி, சிறிதளவு நீர். அவ்வளவே. அது எப்படி எளிமையாய் வாழ்கிறது!"

பலரும் அதிர்ந்துபோய் நிற்க,"அவனைக் கைது செய்து சிறையில் அடையுங்கள்" என்று ஒரு பிஷப் மட்டும் கத்துகிறார்.

போப் ஓர் உயர்ந்த மேடையில் அரியாசனத்தில் அமர்ந்திருக்கிறார். எழுந்து மேடையை விட்டு இறங்கி வருகிறார். தொலை தூரத்திலிருந்து வந்ததால் களைப்படைந்து, எளிய ஆடைகளோடு செருப்புக் கூட அணியாமல், கன்றி காயப்பட்டுப் போன கால் பாதங்களோடு கண்ணீர் மல்க நின்றிருக்கும் அந்த இளைஞனின் கால்களை முத்தமிட்டுச் சொல்கிறார் "இந்த உண்மைகளை உலகுக்கு உரத்துச் சொல். உன் பின்னால் ஆயிரக்கணக்கில் மக்கள் அணி திரளட்டும். இறைவனின் ஆசி உனக்கு என்றென்றும் உண்டு."

அந்த இளைஞன் புனித பிரான்சிஸ். இத்தாலியில் அஸிஸி என்ற இடத்தில் பிறந்தவர். கத்தோலிக்ககர்களிடையே தன்னைப் பின்பற்றும் ஒரு பிரிவைத் தோற்றுவித்தவர். பதினோராம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தவர். கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு போருக்கு அனுப்பட்டவர். ஆனால் கனவில், கடவுள் தோன்றி அருள் பாலிக்க கடவுளின் விருப்பப்படி பொருளியல் வாழ்க்கை துறந்தவர். ஏழைகளைப் புறக்கணிக்கும் தேவாலயங்களைப் புறக்கணிப்போம் என்று துணிந்து பிரகடனம் செய்தவர். தொழிலாளர் உழைப்பைச் சுரண்டி தந்தை தனக்காகச் சேர்த்து வைத்த சொத்துக்களை எல்லாம் ஏழைகளுக்கு வாரி இறைத்தவர். எளிய வாழ்க்கையை கடவுளின் விருப்பம் என்று மக்களிடையே விழிப்புணர்வு ஊட்டியவர். உழைத்து எளிய வாழ்க்கை வாழ்ந்தவர். பணக்காரர்கள் மற்றும் மதத் தலைவர்களின் கோபத்தைச் சம்பாதித்தவர். சுருக்கமாகச் சொன்னால் மதவாதிகள் தம் வசதிக்கென உருவாக்கிய மதக் கோட்பாடுகளை எதிர்த்துது கலகம் செய்த புரட்சியாளர்.

புனித பிரான்சிஸ்ஸின் வரலாறு மிக அருமையாகப் படமாகியுள்ளது. மதவாதிகளின் போலித் தனத்தை தோலுரித்துக் காட்டுகிறது இப்படம்.

**2002ஆம் ஆண்டு துவக்கத்தில் அரசியல் காட்சிகள் எப்படியெல்லாம் விறுவிறுப்பாக நகர்ந்தன என்றும், பிஜேபி கட்சிக்கு ஆதரவாக ஒரு இந்துத்துவா அலையை உருவாக்கும் பொருட்டு மத வெறி எப்படியெல்லாம் தூண்டிவிடப்பட்டது என்பதையும் அருமையாகச் சொல்கிறது இந்த ஆவணப்படம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**3**

**துருக்கி கதைப்படம் : தக்வா**
**இயக்கம் : ஓஸர் கிஸில்தான்**
**வெளிவந்த ஆண்டு : 2006**

இஸ்தான்புல் நகரத்தில் சுபி பிரிவுக்குச் சொத்தமான ஒரு மடம் இருக்கிறது. அங்கு பிரார்த்தனைகள் நடக்கின்றன. தவிர ஏழை மாணவர்களுக்கு உணவளித்து தங்க இடம் தந்து குர்ஆன் கற்றுத்தருகிற பள்ளியும் இருக்கிறது. அதனை நிர்வகித்து வருபவர் அப்பிரிவின்ன தலைமை குரு ஷேக்.

அம் மடத்திற்குச் சொந்தமாக வீடுகள், கடைகள், காலி மனைகள் என்று ஏராளமானன சொத்துக்கள் இருக்கின்றன. அதிலிருந்து லட்சக்கணக்கில் வாடகைப் பணம் வருகிறது.

நகரில் ஒரு பழைய சாக்கு விற்கும் கடை ஒன்றில் வேலை பார்க்கிறான் மொஹரம். அதன் முதரலாளி அலி என்பவர். மொஹரத்தின் தந்தை அலியின் தந்தையிடம் வேலை பார்த்தவர். மொஹரம் குறைந்த சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு உண்மையோடு வேலை பார்க்கிறான். இறைவனுக்கு மிகவும் பயந்தவன் மொஹரம். பிரம்மச்சாரியான அவன் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவன். பிரார்த்தனையின் போது கடைசி வரிசையில் அமர்ந்து மனம் உருகி கடவுளை வணங்குவான்.

மொஹரத்தை தலைமை குரு ஷேக்கிற்கு மிகவும் பிடித்துப் போகிறது. ஒரு திட்டத்தோடு அவனை தன்னிடம் வேலைக்கு அழைத்துதுக் கொள்கிறார். மொஹரத்தின் நிலை ஒரே நாளில் உயர்ந்து விடுகிறது. மடத்தில் உள்ள அனைவரும் அவனுக்கு மிகுந்த மரியாதை கொடுக்கிறார்கள். மடத்துக்குச் சொந்தமான கட்டிடங்களின் வாடகையை வசூலித்து வர வேண்டியது மொஹரத்தின் வேலை. வீடு, வேலை, பிரார்த்தனை என்று இறை பக்தியோடு வாழ்ந்து வந்த மொஹரத்திற்கு வெளி உலககம் ஆச்சர்யமாகவும் அச்சமாகவும் இருக்கிறது. வசூல், பணம், கணக்கு, வங்கி என்று அவன் உலகமே மாறிவிடுகிறது.

வாடகை வசூல் கறாராக நடக்க வேண்டும் என்று ஷேக் கட்டளையிடுகிறார். அவரை மத குருவாகப் பார்த்தவன் இப்போது நிர்வாகியாகப் பார்க்கிறான். வாடகை தர முடியாத ஒரு குடும்பத்தின் நிலையை ஷேக்கிடம் கூறுகிறான். காலி பண்ணச் சொல் என்று ஷேக் கண்டிப்புடன் கூறுவதைப் பார்த்து அதிர்ச்சியுறுகிறான். பணவீக்கம் மற்றும் விலை உயர்வு காரணமாக வாடகையை உயர்த்த வேண்டும் என்று ஷேக்கின் உதவியாளர் வற்புறுத்துகிறார். முற்றிலும் மாறிப்போன தன் பொருளியில் வாழ்க்கை மொஹரத்தைக் துண்புறுத்துகிறார். மத குருவான ஷேக்கிற்கு மனைவியும் மகள்களும் இருப்பதை அறிந்து இன்னும் அதிர்ச்சியுறுகிறான் மொஹரம். அம் மகளை மணந்து கொள்ளச் சொல்லி ஷேக்கிடம் இருந்து அவனுக்கு தூது வருகிறது.

இறைவனுக்குப் பயந்து ஒரு எளிய ஆனால் தீவிரமான ஆன்மிக வாழ்க்கை வாழ்ந்து வந்த மொஹரத்திற்கு இது பெரும் மன உளைச்சலையும் துன்பத்தையும் கொடுக்கிறது.

மொஹரம் போன்றவர்கள் மிகுந்த இறை பத்தியோடு எப்படி எளிய வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆனால் மதத் தலைவர்கள் எப்படியெல்லாம் பொருளியல் சார்ந்த வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள் என்பதை அப்பட்டமாகப் போட்டு உடைக்கிறது இப்படம்.

மதம் எளியவர்கள் கைகளில் இல்லை. அது மதவாதிகளின் கைகளில் இருக்கிறது. மனித நேயத்தை வளர்ப்பதற்குப் பதிலாக, இறைத்தன்மையை போற்றுவதற்குப் பதிலாக, பொது மக்களை மேலாதிக்கம் செய்யவும், மூட நம்பிக்கைகளுக்குள் ஆழ்த்தவும், செல்வம் சேர்க்கவும், தேவையற்ற மோதல்களுக்கு இட்டுச் செல்லவுமே அது பயன்படுகிறது என்கிற கருத்தை இந்த மூன்று திரைப்படங்களும் அழுத்தமாக எடுத்து வைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளங்களைத் தேடுகிறவர்கள்

பணிவாய் ஒடுங்கிய என்னய்யாவை
என்னில் எதிர்பார்த்து
ஏமாந்தவன்
முகம் விரிகிறான் அவமானப்பட்டு

நானும் அவனைப்போலவே
விறைப்பாக நின்றிருந்தேன்
அனல்காற்றை
அலட்சியம் செய்து கொண்டு

சனங்களின் நெரிசல் மிகுந்த
கடைத்தெரு விளிம்பில்
எதையோ இழந்துவிட்டிருந்ததைக்
கண்டெடுத்துத்தர ஏவுவதைப்போல
என்னைப் பார்த்து நிறுத்தினான்
அடையாளம் கண்டு

மீண்டும் தேடினான்
அவனின் இழப்பை என்னிடம்

மரணயித்து பல வருடங்களைக்
கடந்திருந்த என்னய்யாவுக்கு
நான் மகனென்னும் நியாபகத்தை
நிறுத்தி வைத்திருந்தான் தன்மனக்கிடங்கில்
இப்போதுவரை உயிரோடு

அவனின் ஏவலுக்கு அடிபணிந்த
காலியாக
அய்யாவின் கடந்தகாலம்
அவனால் செலவிடப்பட்டிருந்தது.

இப்போதென் சுயமான உழைப்பும்
அடிபணியாத வாழ்க்கையும்
தடுத்திருந்தன அவனின் அதிகாரத்தை
என்மேல் பாய்ச்சவிடாமல்

நமுத்துப்போன பட்டாசுகளாய்
அவனிடமிருந்து பீறிட்டெழுகிறது
மவுனமாய் ஆத்திரம்
ஆதிகால வன்முறையைச் சுமந்துகொண்டு

'அவனோட மொவனாடே நீ'யென்ற
பரிகசிப்புடன்
என்னய்யாவைப் பெருமைப்படுத்தும்
வஞ்சக வார்த்தைகளில்
என்னைத் தாழ்த்திவிட்டதாக நினைக்கிறான்

நான் நடக்கிறேன்
அவன் சேமித்து வைத்திருந்த எண்ணத்தை
என் பாதங்களுக்குக் கீழ்
புழுதியாகப் படர்த்திக்கொண்டு

விரைந்தோடும் வாகனங்களுக்குப்
பயந்து பயந்து நின்று
சாலையைக் கடக்குமவன்
அசடுவழிய என்னைப் பார்த்துக் கொள்கிறான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்சப்ரியா கவிதைகள்

நடை பாதையில்
கூர்கற்களைப் பரப்பி
காயப்படுத்தவில்லை
மலையுச்சியிலிருந்து
வேடிக்கை காட்டுவது போல
தள்ளிவிடவும் இல்லை
விழிகளுக்குள் காட்சிகளைப் புகுத்தி
புண்படுத்தவுமில்லை
முளைக்கும் முன்
வேரோடு பிடுங்கி
கைகொட்டிச் சிரிக்கவுமில்லை
போகிற போக்கில்
கால் இடறி
குப்புறக் கவுக்கவும் இல்லை
ஆனாலும்
இவை எல்லாவற்றையும்
ஆக மிகச்சிறப்பாய்
செய்தன உங்கள் செயல்கள்!

அரிய விதையென்றும்
ஏழேழு தேசத்திலும்
கிடைக்காதது இதுவென்றும்
கொடுத்த விதையை பதியனிட்டேன்
ஓர் இலை கடலைக் கொண்டு வந்தது
இன்னொரு இலை வானத்தை
ஏந்தி வந்தது.

பல்கிப் பெருகிய இலைகளால்
உருவான கிளைகளில்
ஆசைகள் அமர்ந்து இறைஞ்சுகின்றன
ஒரு பறவையும் இதுவரைக் காணோம்
ஒரு கொத்துப் பூக்களையும்
இதுவரை தரிசிக்கவில்லை
உன் தயவினால் உருவான
தோட்டத்தில் வாழ்வதாக
சொல்லித் தொலைக்க வேண்டியதாயிருந்தது
விதிவசமென!

நள்ளிரவை
என் விருப்பம்போல்
ஒரு திரியாக்கினேன்
கனவுகளை உருக்கி
எண்ணெயாக்கினேன்
என்னை உரசி பற்ற வைத்தேன்
வெளிச்சச் சுடரில்
நான் தொலைந்து
சுடர்விட்டேன்
உனக்கும் வெளிச்சமாவேன் வா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது நீண்ட வரலாறு

அப்பா நிமிர்ந்து
பார்த்ததே இல்லை
அம்மாவை.
அலட்சியம்
ஆண்டுகளாய்ச் சுமக்கும்
தலைக் கிரீடப் பளபளப்பு -

ஆனால் நாங்கள்
ஆணும் பெண்ணுமாய் ஏழு.

தெருவுக்கு ஒன்று
இன்னும் நாலு திசையிலும்

நகரத்தில்கூட ஒன்றுண்டு என
ஊர்மெச்சும் பெருமை.

உப்பு குறைவு புளி தூக்கல்
என
ஓரிரு சொற்களோடு
பேச்சற்றுத்தான்
கழிந்தது வாழ்க்கை -
அம்மா யோகி போலிருப்பாள்
முகக் குறிப்பேதுமின்றி.

அப்பா
லேசான காய்ச்சலில்
படுத்தபோது
இரண்டுநாள் விரதம்.
வேண்டாத சாமியில்லை
மாங்கல்யப் பிச்சை கேட்டு
புராணம் படித்து
இறையிடம் கெஞ்சிய
கெஞ்சலில் குரலே போயிற்று.

இது குறித்து
ஊரே மெச்சும்
ஊர்வலச் சாமி வந்தபோது
தெருவுக்கு வந்து
ஒரு லேசான புன்னகை
உதிர்த்ததற்காய்
அப்பாவிட்ட அறையில்
அம்மாவின் சொற்கள்
ஓய்ந்தே போயின ஒருமாதம்

இன்று ஒருநாளாவது
சுத்தமாயிரு என
இன்று
அம்மா விரட்டுவது விந்தைதான்.

சட்டமிட்ட படத்தில்
சிரிக்கும் அப்பா படத்திற்கு
மாலையிட்டு விழுந்து
சேவிப்பதில் முட்டி தேயும்.


பிண்டம் வைக்கக்
கூப்பிடும் சத்தத்தில்
ஊர்க் காக்கைகள்
மொத்தமும் வந்துவிடும்.

எது அப்பாவெனத்
தெரியாவிடினும்
பவ்யமாய்ப் பிரார்த்திப்பாள்-
இது நீண்ட வரலாறு
எனத் தெரியாமலே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆ.ஆனந்த குமார்


## ஐந்தாம் ஆண்டு மலரஞ்சலி

**28-07-2014**

பூவுலக உலா

**தொடக்கம்**
19-09-1982

**நிறைவு**
28-07-2009



*என்றென்றும் உன்நினைவில் வாழும்*

சி.ஆரோக்யசாமி ஆ.பரிமளம்

ஆ.மலர்விழி சம்பத்குமார்

ச. ஸ்ரீவிகாசினி

17.விசுவநாதன் லே அவுட்

இலட்சுமிபுரம் / பீளமேடு

கோவை 641004

0422.2574202
9994612789
adhidhee@gmail.com

எங்கள் அன்பு ஆனந்தா
அருளிரக்க மானிடனே, நீ கார்பரேட்
மருத்துவ பயங்கரவாதத்திற்கு பலியானபின்
ஐந்தாண்டுகளைக் கழித்துவிட்டோம்.

உலகமயம், தாராளமயம்,
நுகர்வு மயமென மாற்றங்கள்,
ஏடறிந்த வரலாறு நெடுக
மானுடம் வளர வளரக் கண்டடைந்த
சமயங்கள், தத்துவங்கள், சித்தாந்தங்கள்
வேதங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள்
மானுட உறவுகள், பண்பாடுகள்
மகான்கள்- அருளாளர்கள் மொழிகள் வாழ்வு
எல்லாமே பொருளிழந்து போகின்றன

பணம், பிணமாகும் வரை பணம்,
பணம் சேர்க்கும் எந்திரமாய் உழல்வதும்
வாரிசுகளை அதற்கெனவே தயாரிப்பதும்
வாழ்வின் இலக்காகிப் போனது.

மத நிறுவனங்கள், அரசியல் கட்சிகள்
அரம்பக் கும்பல்கள்
தம் இருப்பை இருக்கிக் கொள்ள
நாளும் நடத்தும் வன்முறைகள்
இதில் பலியாகும் அப்பாவிகள்
ஏதிலியராகும் பிள்ளைகள், பெற்றவர்கள்
துயரம், துயரம், துயரம்.

உலகின் வளங்கள்-சூழல்கள்,
அனைத்து மக்களதுமான வாழ்வுரிமைகள்,
பாரம்பரியங்கள், பண்பாடுகள்,
பன்மைத்தண்மைகள்
பாதுகாக்கப்பட வேண்டுமென்பது
உலகளாவிய கார்பரேட் சுரண்டலுக்கு
எதிரானதால் பயங்கரவாத மாக்கப்பட்டது.

இப்பயங்கரவாதத்தை அழித்திட
சர்வதேச பயங்கரவாத அரசுகள்
நேரடியாய், மறைமுகமாய், கள்ளத்தனமாய்
நடத்துகின்ற போர்களில் சிதைந்து
மடிகின்ற மானுடம் நூறாய் ஆயிரமாய்
பல்லாயிரமாய் இலட்சமாய் பெருகுகிறது.

இத்துயர் துடைக்க
உலகிலொரு மானுட அரசு இல்லை.
உலகோர் வழிபடும் இறைவர்களும்
இருந்தது இருந்தவாரே உள்ளனர்.
புதிதாய் ஒருவரோ பலரோ
ஆங்காங்கு உருவாகி வருவரோ?

நிற்க. மற்றவை பின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்சு மொழியில் புலம்பெயர் ஈழத் தமிழ்க் கவிதைகள்

**கி.பி.அரவிந்தனுக்கு மாத்திரம் நல்ல ஒரு மொழிபெயர்ப்பாளர் கிடைப்பாரேயானால் அவருடைய வாசகர் வட்டம் நிச்சயம் விரியும். ஒரு நாட்டில் வாழுகின்ற ஒரு இனத்திலுள்ள ஒரு அகதியின் அவலத்தை இனத்தின் அவலமாக, நாட்டின் அவலமாக, உலகின் அவலமாகக் காட்டுகின்ற திறமை அரவிந்தனுக்குக் கைவந்துள்ளதென்றே கருதுகின்றேன்.**

**- கி.பி.அரவிந்தனின் 'கனவின் மீதி' கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் பேராசான் கா.சிவத்தம்பி**

ஈழத்தமிழ்க் கவிதைகளின் பிரெஞ்சு மொழியிலான 'Le messager de l'hiver' - ஓர் உறைபனிக்காலக் கட்டியக்காரன்' மொழிபெயர்ப்பு தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு *03.06.2014* செய்வாய் அன்று பாரீசு மையத்திலமைந்த La Route des Indes, 7 rue d'Argenteuil 75001 Paris சிற்றரங்கில் எளிமையுடன் அரங்கு நிறைந்த வாசகர்களின் முன்னே டிடியே சான்ட்மான் (Didier Sandman) தலைமைதாங்க, கவிஞர் கி.பி. அரவிந்தன் மற்றும் மொழிபெயர்ப்பாளர் அ.முருகையன் பங்கேற்க நிகழ்வு களை கட்டியது.

தமிழ்பிரெஞ்சுஎனஇரண்டுமொழிகளில் அமைந்துள்ள இந்நூலில், புலம்பெயர்ந்து பிரான்சில் வாழும் கி.பி.அரவிந்தனின் ஏற்கனவே தமிழில் பிரசுரமானவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட முப்பது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகளை மொழியியலாரும், பிரெஞ்சு உயர் கல்வி ஆய்வு நிறுவன ஆய்வாளரும், கல்வெட்டியலில் சிறப்புத் தகமை பெற்றவருமான அப்பாசாமி முருகையன் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலை 'றிவநெவ்' [RIVENEUVE] என்ற பிரஞ்சு வெளியீட்டு நிறுவனம் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

*1980*களின் பின் இலங்கையின் இனவொடுக்கல் துயரத்தின் சாட்சிகளாக சிதறுண்டு, புலம்பெயர் ஈழத் தமிழர்களாகி, பல்வேறு நாடுகளில் குடியேறியவர்களின் முதற் தலைமுறையினரது படைப்புகள் ஆங்கிலமல்லாது உலகளாவிய மொழிகளில் அவர்களது காலகட்டத்திலேயே மொழிபெயர்ப்பாவது சிறப்பானதொரு தடமிடுதலாகவே கவனம் பெறுகிறது. இந்த நூலின் அட்டைப்படத்தை தமிழ்நாட்டின் தனித்துவமிக்க ஓவியர்களுடன் ஒருவரான 'டிராட்ஸ்கி மருது' வரைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

பாரீசில் நாம் புலம்பெயர்ந்த *90*களின் ஆரம்பத்தில் வெளியிட்ட 'மௌனம்' இதழ் வாயிலாகக் கிட்டிய அருமையான நண்பரும், மனிய நேயமிக்க தமிழ் ஆர்வலரும், *2000*களின் பின்னர் பாரீசில் தமிழர்களது தனித்துவமான ஒன்றுகூடல் நிகழ்வாக அமையும் 'பொங்கல் புலம்பெயர் தமிழர் திருநாள்' நிகழ்வரங்கின் மையக் கருத்துரு மாலையைக் கோர்க்கப் பணியாற்றிவருபவரும், இந்நூலின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பாளருமான அப்பாசாமி முருகையன் அவர்களுடன் உரையாடிய தொகுப்பை 'காக்கைச் சிறகினிலே' இதழ் வாசகர்களுக்கு மகிழ்வுடன் பகிர்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்படியான ஒரு மொழிபெயர்ப்பைச் செய்ய உந்திய காரணிகள் என்ன?

இதற்கு பல காரணங்கள் உள்ளன. கடந்த முப்பது ஆண்டுகளாக பாரிஸ் பல்கலைக்கழகம் 8 இல், தமிழ் மொழி, பண்பாடு, இலக்கியம் பற்றிய இளநிலை முதுநிலை மாணவர்களுக்கான ஓர் அறிமுக பாடத்தை நடத்தி வருகின்றேன். இப்பாடத்திட்டத்தில் இரண்டு சிறப்புக் கூறுகள் :

முதலாவதாக, தமிழ் இலக்கியத் தரவுகளை மையமாக / கருப்பொருளாகக் கொண்டு மொழி, பண்பாட்டை படிப்பித்தல்.

இரண்டவதாக, புலம்பெயர் தமிழரின் மொழி, பண்பாடு மற்றும் இலக்கியம் பற்றிய ஆய்விற்கு வழிவகுத்தல்.

இலக்கியத் தரவுகள் மூலம் மொழியையும் பண்பாட்டையும் பயிற்றுவித்தலில் மொழிபெயர்ப்பு (Pedagogical translaltion) அத்தியாவசியமான கருவியாகும். மேலும் புலம்பெயர் இலக்கியத் தரவுகள் இல்லாமல் புலம்பெயர் தமிழர் பற்றிய ஆய்வு மேற்கொள்ளமுடியாது. இந்த இரண்டு அடிப்படைக் காரணங்களும், பல தமிழ் ஃபிரஞ்சு மொழிபெயர்ப்புப் பட்டறைகளை திட்டமிட்டு நடத்த வழிவகுத்தன. இப்பட்டறைகளில் கலந்து கொண்டோரில் 95 விழுக்காடு இலங்கைத் தமிழ் மக்கள் என்பது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய தகவலாகும்.

இக்காலகட்டத்தில் 19802000 களில் பாரிசில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் இலக்கியப் பணி உச்ச கட்டத்தில் இருந்தது. இச்சூழ்நிலையில் என்னுடைய ஆராய்ச்சிப் பணியினூடாக கி.பி.அரவிந்தன் போன்ற சில எழுத்தாளர்களின் தொடர்பு ஏற்பட்டது. கி. பி. அரவிந்தனின் கவிதைகள் பலவற்றை இந்த பட்டறைகளிலும் மேலும் என்னுடைய பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலும் மொழி, பண்பாடு பற்றிய ஆய்வு விளக்கங்களுக்காகவும் மொழிபெயர்ப்புப் பயிற்சிக்காகவும் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டது. இச்சூழல்களே கி.பி.அரவிந்தனின் கவிதைகளை மொழிபெயர்க்க வித்திட்டன.

புலம்பெயர்ச்சூழலில் மொழிபெயர்ப்பின் முக்கியத்துவம் என்ன?

புலம்பெயர்ச்சூழலில், மூன்றாவது தலைமுறைக்குப் பின், முன்னோர் மொழியை தக்கவைத்துக் கொள்வது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1960–70 களில் மலேசியத் தமிழரிடையே தமிழ் மொழிப்பண்பாட்டு மறுமலர்ச்சி ஏற்படுவதற்கும் மொழி உணர்வு ஏற்படுவதற்கும் தமிழ் ஆங்கில மொழியில் தேர்ச்சியும் மொழிபெயர்ப்பு முயற்சிகளும் வித்திட்ட நிகழ்வை சிறந்த முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும்.**

என்பது படிப்படியாக குறைந்து ஒரு காலகட்டத்தில் மறைந்து விடும் என்பது ஒரு கண்கூடாய் கண்டறிந்த கருத்து. இவ்வாறான மொழி, பண்பாட்டு இழப்பு ஏற்படாமல் தவிர்ப்பதற்காக புலம்பெயர்ச் சமுதாயங்கள் பல யுக்திகளை கையாளுகின்றன. அவற்றுள் முக்கியமான ஒன்றுதான் மொழிபெயர்ப்பு முயற்சியும். ஆனால் மற்ற முயற்சிகளோடு ஒப்பிடும்போது மொழிபெயர்ப்பு சிறிது சிக்கலானது. இருமொழிப் பண்பாட்டினை உள்வாங்கி செயல்படவேண்டியுள்ளதால், பல புலம்பெயர்ச் சூழல்களுள் இருமொழித்தேர்ச்சி பெறும் முன்பே மூதாதையர் மொழிப் பண்பாட்டு இழப்பு காலூன்றிவிடுகின்றது. தமிழ் மொழி இலக்கியங்களை ஃபிரஞ்சு, ஆங்கிலம் போன்ற தாங்கள் வாழுகின்ற பகுதியின் முக்கியமான மொழிகளில் மொழிபெயர்ப்பது பின் வரும் தலைமுறையினருக்கு ஊக்கம் அளிப்பதாகவும் மிகவும் பயன் உள்ளதாகவும் கருத்தில் கொள்ளவேண்டும். 1960–70 களில் மலேசியத் தமிழரிடையே தமிழ் மொழிப்பண்பாட்டு மறுமலர்ச்சி ஏற்படுவதற்கும் மற்றும் மொழி உணர்வு ஏற்படுவதற்கும் தமிழ் ஆங்கில இருமொழியில் தேர்ச்சியும் மொழிபெயர்ப்பு முயற்சிகளும் வித்திட்ட நிகழ்வை சிறந்த முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும்.

**இந்த மொழிபெயர்ப்பின் போது தாங்கள் எதிர்கொண்ட சவால்களை கூறுவீர்களா?**

முதலில், இம்மொழிபெயர்ப்பு ஒரு கூட்டுப்பணி, பலருடைய ஒத்துழைப்பின் பலனாகத்தான் செயற்படுத்தி முடிக்க முடிந்தது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். தமிழிலிருந்து பிரெஞ்சுக்கு பல மொழிபெயர்ப்பு முயற்சிகள் முன்பே நடந்தேறியுள்ளன. எங்களுடைய முயற்சி புதிதல்ல. ஆனால், நோக்கம்தான் சிறிது வேறுபட்டுள்ளது. இம்மொழிபெயர்ப்பு தமிழ் இளைய தலைமுறையினருக்கும் ஃபிரஞ்சு மக்களுக்கும் ஏற்புடையதாக






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டு நிகழ்வில் பங்கெடுத்து மனந்திறந்த பல்லின உரையாடல்களும் அதன்பின்னரான தெறிப்புகளுமான கருத்து மஞ்சரி

தமிழ் மொழியின் வரிவடிவத்தைக் கண்டு வட்டெழுத்து அழகை இரசித்திருக்கிறேன். ஆனால் இன்று கவிதை வாசிப்பில் அம்மொழி எனது செவிகளில் இனிமையான உணர்வைத் தந்ததை மனந்திறந்து மகிழ்கிறேன்.

– இந்நிகழ்வைத் தலைமையேற்று நிகழ்த்தியவரும் பிரஞ்சுக் கவிதைகளை வாசித்தவரும் La Route des Indes இந்தியாவுக்கான ஒரு வழிப் பாதை நிறுவனப் பொறுப்பாளருமான டிடியே சான்ட்மான் [Didier Sandman]

திசைகள் கவிதை என்னைப் பாதித்தது அம்மா சொல்லும் வார்த்தைகளால் துவண்டுபோனேன். இக்கவிதைகளை நான் சிங்கள மொழியில் வெளிக் கொணர முயலுவேன்

– கல்வியாளர் ஒஸ்மான்.

35 ஆண்டுகளாக இங்கு வாழும் ஒரு சமூகத்தினது எண்ணங்களை அவர்களது வாழ்வியலை இதிலுள்ள கவிதைகள் பிரதிபலித்தால் நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன்.

– கிபி அரவிந்தன்.

சண்டை முடிந்திருந்தாலும் பிரச்சனைகள் தீராத ஈழத் தமிழரின் அவல வாழ்வை நினைக்கும்போது வேதனையாகவே இருக்கிறது. எல்லாமே விழலுக்கிறைத்த நீராகிவிட்ட கதைகாகிப் போனது சோகம்தான்!

– டெல்லிப் பல்கலையில் பணியாற்றும் பிரஞ்சு மொழிப் பேராசிரியை ஒருவர்.

நிகழவை காணொலியில் கண்டபோது புளங்காகிதமடைந்தேன். அரங்கு நிறைந்த பல்லின பல்துறை வாசகர்கள் குழுமியிருக்க நோயுற்ற நிலையிலும் என் தோழனது கவிதை நூல் வெளிவந்த காட்சி மிக அருமையாக இருந்தது. நான் அவ்விடத்தில் இல்லாதது வேதனையளித்து. மிகவும் பயனுள்ள செயலை நண்பர் முருகையன் ஆற்றியுள்ளார். இதை நாம் பாராட்டி ஊக்கப்படுத்தவேண்டும் !!

– தொலைபேசி வாயிலாக மலேசியாவிலிருந்து தோழர் வரன்.

நாங்களும் 1956 ஆம் ஆண்டு எகிப்திலிருந்து வெளியேற்றப்பட்டு இங்குவந்து குடியேறிய யூதர்கள்தான். அங்கு பெரும் வணிகராகச் செல்வச் செழிப்போடு வாழ்ந்த குடும்பக் கதைகளை எனது அம்மா சொல்லிச் சொல்லி அழுவாஞ்.. இங்கு பெற்றோருடன் நான் சிறுமியாக வெறும் கைகளுடன் வந்திருந்தநிலை இன்றும் எனக்கு ஞாபகத்திலிருக்கிறது. அகதி வாழ்வு பற்றிய கிபி அரவிந்தனின் கவிதைகளை வாசித்தபோது எனது கடந்தகால நினைவுகள் மேலெழ திக்குமுக்காடிப் போனேன். என்னை அறியாது கலங்கினேன். எங்களது வாழ்விலும் அவர் பதிந்த பல விடையங்கள் ஆச்சரியமாக ஒத்து போகின்றன.

– கி.பி.அரவிந்தனின் துணைவி பணியாற்றும் வீட்டுக்காரி.

இருக்கவேண்டும் என்பதே எங்களுடைய முக்கிய இலக்கு. அடுத்து, அரவிந்தனின் கவிதைகள் புலம்பெயர் தமிழ் இலக்கிய வகையைச் சார்ந்தவை. மொழிபெயர்ப்பில் சவால்கள் ஏற்படுவது புதிதல்ல ஆனால் எல்லோரும் ஒரே மாதிரியான சிக்கல்களை எதிர்கொள்வதில்லை.

அரவிந்தன் தனது மூன்று கவிதைத் தொகுப்புகளில் அறுபத்தைந்து கவிதைகளை வெளியிட்டுள்ளார். முதலாவதாக எதிர்கொண்ட கேள்வி, இக்கவிதைகளில் எத்தனைக் கவிதைகளை எந்த அடிப்படையில் தேர்ந்தெடுப்பது என்பதுதான். எங்களுடைய இரு இலக்குகளையும் திருப்திபடுத்த வேண்டிய அதே வேளையில் கவிஞரின் உள்ளக்கிடக்கைகளையும்/எண்ணங்களையும் பண்பாட்டு தாக்கங்களை, குறுக்கீடுகளைத் தாண்டி பொருள்மயக்கமின்றி மொழிமாற்றம் செய்யவேண்டும் என்பது முக்கியமான சவாலாக இருந்தது. நானே தனித்து பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவர்களது சமூக அமைப்பு, பண்பாட்டு விதிகள், சாதி சமயக் கோட்பாடுகள், உரிமை பறிக்கப்பட்டோரின் ஆற்றாமை, காந்தி அல்லது அரவிந்தர் போன்ற ஆன்மீக வாதிகள் போராளிகளாக அவதரிக்க வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்படுகின்றது எனும் பல வேறுபட்ட கருத்துக்களை அடக்கி புனையப்பட்டுள்ள அவரது கவிதைகளை புரிந்துகொள்ள முயலுகின்ற எல்லோரும் என்னைப்போல் திக்குமுக்காடித்தான் போக வேண்டியிருக்கும்.**

முறையும் திரு அரவிந்தனுடன் கலந்து பலமுறையும் ஒவ்வொரு கவிதையாகப் படித்து பரிசீலனை செய்து பண்பாட்டுப் புரிதல்களில் சிக்கல் இல்லாத அல்லது சிக்கல்கள் மிகக் குறைவாக உள்ள கவிதைகளை முதலில் தெரிந்தெடுத்தோம். பின்னர் அவற்றுள் பண்பாட்டு முரண்பாடுகள் கொண்ட சாதியம் மற்றும் மதம் சார்ந்த கருத்துக்களை மொழிமாற்றம் செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. அடுத்து இலங்கைத்தமிழர்களின் உரிமைப் போராட்டங்கள் குறித்த கருத்துக்களை மிகத்துல்லியமாக அரசியல் தஞ்சம் பெற்ற ஒரு தனி மனிதனின், தந்தையின், சுதந்திர போராட்ட வீரனின் நிலையில் நின்று எவ்வாறு மொழிபெயர்ப்பது? இக்கேள்விகளை எல்லாம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது மொழிபெயர்ப்பு என்பது ஒரு மிகக் கடினமான மீட்டுருவாக்க பயிற்சி. இப்பயிற்சியை முடிந்த அளவு வெற்றியுடன் முடிக்க பலருடைய ஒத்துழைப்பும் தேவை என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

**இம் மொழிபெயர்ப்பின் போது இக்கவிதைகள் ஊடாக நீங்கள் பெற்ற அனுபவங்கள் என்ன?**

இலங்கைத் தமிழர் பற்றியும் அவர்களது தமிழ் மொழியின் தனித் தன்மைகள் பற்றியும் எவ்வளவோ படித்திருந்தாலும் அரவிந்தனின் கவிதைகள் மூலம் தெரிந்துகொண்டவை அளவிலடங்காது. அவர்களது சமூக அமைப்பு, பண்பாட்டு விதிகள், சாதி சமயக் கோட்பாடுகள், உரிமை பறிக்கப்பட்டோரின் ஆற்றாமை, காந்தி அல்லது அரவிந்தர் போன்ற ஆன்மீக வாதிகள் போராளிகளாக அவதரிக்க வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்படுகின்றது எனும் பல வேறுபட்ட கருத்துக்களை அடக்கி புனையப்பட்டுள்ள அவரது கவிதைகளை புரிந்துகொள்ள முயலுகின்ற எல்லோரும் என்னைப்போல் திக்குமுக்காடித்தான் போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேண்டியிருக்கும். உள்ளுக்குள் வீசும் பெரும் புயலை ஆற்றுப் படுத்தி அதனை ஆக்க சக்தியாக மாற்ற கவிஞனாக இருக்கவேண்டும் என்னும் பாடத்தை புகட்டுவதாக இருந்தது இம்மொழிபெயர்ப்பு அனுபவம்.

திரு அரவிந்தனின் கவிதைகளில் பெரும்பாலானவை புலம்பெயர்ந்த தாய் நாட்டைத்துறந்த சிறுபான்மைக் குழுவைச்சேர்ந்த ஒரு மனிதனின் உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துகின்றன. இக்கவிதைகளில் எல்லாம் அங்கும் இங்குமாக என்னுடைய அனுபவங்களில் பலவற்றை அடையாளம் கண்டேன்.

அரவிந்தனுடைய கவிதைகள் அவருடைய தனிப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் இருப்பினும் புலம் பெயர்ந்த ஒவ்வொருவருடைய உணர்வுகளையும் ஏதோ ஒருவகையில் சித்திரிப்பதாக உள்ளன. இக்கவிதைகளை என்னுடைய மாணவர்களுடன் பகிர்ந்து கொண்ட போது ஒவ்வொருவரும் அவர்களுடைய தனிப்பட்ட அனுபவங்களில் ஏதோ ஒரு சில அரவிந்தனது கவிதைகளில் பிரதிபலிப்பதாகக் கூறினர். அரவிந்தனுடைய கவிதைகள் எல்லை கடந்த உணர்வுகளின் பிரதிபலிப்பு. அவை அவர் உலகுக்கு விடுத்த தூது என்று கொள்வது மிகையாகாது.

நிகழ்வின் நிறைவாக புலம்பெயர்வு நாட்டு வழமையின்படி நொறுக்குத் தீனியுடன் பானங்கள் பருக அரங்கம் களைகட்டியது. நூல் வெளியீட்டு அரங்கம், கவிஞரதும் மொழிபெயர்ப்பாளரதும் கையொப்பத்தைப் பெறும் பரபரப்பில் இருந்தது. பிரஞ்சுக் கவிதையும், தமிழ் கவிதையும் கொடுத்த தாக்கத்தை பலரும் வெளிப்படையாகவே கூறினர். முதன் முதலாக தாம் கேட்ட 'கவித் தமிழ்' செவிக்கு மிகவும் இனிமையாக இருந்தது என பல்லினத்தவர் மகிழ்வுடன் தெரிவித்து கிபி அரவிந்தனைக் கரம்பற்றிக் குலுக்கி மகிழ்ந்த காட்சியைக் கண்ணுற்று கிறங்கிப்போனேன். யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது... என அன்றே மகாகவி பாரதி பொழிந்த கவிதைகள் ஞாபகத்தடமாய் தரிசனமாக...

"ஈழத்துத் தமிழ் இலக்கியம் உலக இலக்கிய வாசற்கதவுகளைத் தட்டத்



தொடங்கியுள்ளது. 'கனவின் மீதி' ஒரு நல்ல கவிதைத் தொகுப்பு. எங்கள் அண்மைக்கால வரலாற்று அனுபவங்களுக்கான உதாரணம். சமூக அனுபவங்கள் ஆழ, அகலமாகி கீழ்நோக்கிச் சென்று உயிர்க்குலையைப் பிடிக்கும் பொழுது மறக்கமுடியாத கலை இலக்கியங்கள் தோன்றும். இது உலகப் பொதுவிதி. ஆனால் இதற்கு நாம் கொடுக்கும் விலை...?"

"இது ஒரு முக்கிய கட்டம். ஈழத்துத் தமிழ் அகதி என்கின்ற நிலையிலிருந்து அப்பாலே போய் ஒரு சர்வதேசியத்திற்குச் செல்லுகின்ற தன்மை இதில் காணப்படுகிறது. ஈழத்து அகதி வாழ்க்கையின் பிரக்ஞைநிலை இன்னொரு தளத்திற்கு மாறுகிறது. இதனை மற்றைய கவிஞர்களும் பேசியுள்ளனர். ஆனால் இந்தத் துன்பங்களுக்கு அப்பால் உள்ள, இவற்றின் காலான சர்வதேச முதலாளித்துவம் அரவிந்தன் கைக்குள் பிடிபட்டு விடுகிறது. "அதிசயம் வளரும்" எனும் கவிதையில் அரவிந்தன் அந்த உண்மையைச் சிக்கெனப் பிடித்துக் கொள்கிறார். ஈழத்துத் தமிழ்க் கவிதை பிரக்ஞை பூர்வமாக சர்வதேசியத்திற்குச் செல்கிறது."

எனும் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் மேலெழும்பித்தழுவ வாக்கியங்கள் நினைவுக் குமிழிகளாக பாரீசு நகர வீதியில் மிதந்தவாறு வீடு திரும்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபத்தின் நாய்க்குட்டிபோல
# எப்போது அலைகிறீர்கள்?

எப்படி துல்லியமாக அளவிடுகிறீர்கள்
யாருக்கும் பங்கிடாத
கருணையை

கடன் கொடுத்தவன் போல
பக்கத்து வீட்டுக்காரன்
எதிர் பார்க்கும் அன்பை
பச்சையமில்லாத காதலை
சதா வன்மத்துடன் அலையும்
கண்களை எப்படி அளவிடுகிறீகள்

அளவீடுகளை
எப்படி தயாரித்தீர்கள்
மகனைக்கொண்டோ
மகளைக்கொண்டோ
அதை சரிப் பார்த்தீர்களா

உங்கள் கைகள் இரக்கத்தால்
தயாரிக்கப்பட்டதா
உங்கள் கண்கள்
அன்பின் பங்கிடுதலை எங்கிருந்து கற்றது
உங்கள் இதயம் வெறும் குருதியினால்
நிரம்புகிறதா
அல்லது கருணையினாலா

கால்கள் எந்த திசை நோக்கி ஓடுகிறது
உதவி கேட்கும் திசையிலா
அல்லது அதற்கு எதிர் திசையிலா

உங்கள் தொந்தியை போல
உங்களிடம் அன்பு மிகுதியாக இருக்கிறதா
உங்கள் முதுகு
யாருடைய வலிகளின் சுமைதாங்கி
பூமி முழுக்க அளவு கோள்
கொம்பு முளைத்த மனிதர்கள்
நம்மை போல திரிகிறார்கள்
அவர்களின் அளவீட்டை எப்படி கடப்பது

எதிரில் பேசிக்கொண்டிருக்கும் போதே
நம் ரத்தத்தை பரி சோதனை செய்வார்களா
மறைத்து வைத்த அந்தரங்கத்தை
அதன் அழுக்குகளை

எப்பொழுது
உங்கள் இதயம் வேகமாக செயல்படும்
நிஜமான கொலை
நிகழ்த்தப்படும் போதா

அல்லது தொலைக்காட்சி தொடரில்
கொலையை பார்க்கும் பொழுதா

விபத்தில் சிக்கி
உயிருக்குப் போராடுகிறவனை
எந்த அவசரத்தில் கடப்பீர்கள்
டம்மி வார்த்தைகளால்
உச்சரிக்கப்படும் ஆறுதலை
தின்று அவன் பிழைக்கக்கூடும்
என்பதை அறிவீர்களா

துயரத்தின் மீது ஈயை போல கூட
உங்கள் கண்கள் மொய்க்கவில்லை
நேயத்தை எப்படி அளவிடுகிறீர்கள்

உங்கள் கருணையின் கோப்பை
எப்போது வேகமாக நிரம்புகிறது
உங்கள் உடல்
எப்போது ஆத்திரத்தை உமிழ்கிறது
எந்த நொடியில்
தீயின் குரலாய் எழுகிறீர்கள்
கோபத்தின் நாய்குட்டி போல
எப்போது அலைகிறீர்கள்

நம் அலட்சியமின்மை
இன்னொருவருக்கு வலிகளாக மாறுகிறது
நம்மை அளவிடும் போது
எப்படி அளவிட விரும்புகின்றோம்
நம்மை பற்றி
நமக்கு அக்கறையில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மடல் திறப்பு

இன்குலாப் அவர்களின் அரசியல் கட்டுரை இன்றைய சூழ்நிலையில் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதை தருக்க ஒழுங்கோடு எடுத்துக்கூறியது. பாரதிய சனதாவை அல்ல – பாரதிய சனதா கூட்டணியை ஆதரிப்பதற்குரிய காரணங்களை மிகத்துல்லியமாக எழுதியிருந்தார். பா.ச.க.வை கண்டனம் செய்ய முனைந்த எழுத்தாளர்கள் குசராத்தைப் பார்த்தார்களே தவிரத் தமிழ் ஈழத்தைப் பார்க்கவில்லை என்று அவர் கூறுவது முற்றிலும் ஏற்புடையதாகும்.

**– க.இந்திரசித்து, உடுமலைப்பேட்டை**

இன்குலாபின் கட்டுரை (அரசியல்) படித்தேன். ஆழ்ந்து, தெளிந்து எழுதப்பட்ட அருமையான கட்டுரை. ஆனால் நாம் நினைப்பதெல்லாம் மக்கள் நினைப்பதில்லை. அவர்கள் அந்த நேர காசுக்காகவும், வீணாய்ப் போன வாக்குறுதிகளையும் நம்புபவர்கள். புதிய வாக்காளர்களுக்கு சொல்லவே தேவையில்லை. அவர்கள் மேம்போக்கானவர்கள். சிலர் கணினியில் உட்கார்ந்து கொண்டு வீணாய் பொழுது போக்குபவர்கள். வரலாற்றை தெரிந்து கொள்ளாமல் ஓட்டுப்போடும் வாக்காளர்கள் இருக்கும் வரை இங்கு எவர் வேண்டுமானாலும் வெற்றி பெறும் சூழலே அதிகம்.

**– சூர்யநிலா, சேலம்**

நாவுக் அரசன், நஸ்ரூல் இஸ்லாம் கவிதைகள் நன்று. இன்குலாப், எட்வின், சு.இராம சுப்பிரமணியன் (கிருஷ்ணாபுரம் கோவிலுக்கென்றே சென்று 3மணிநேரம் கவனமாகச் செலவிட்டுள்ளேன்), க.பஞ்சாங்கம், மா.அமரேசன், நித்தியபாரதி, வி.அ.இளவழகன் எழுதியுள்ள கட்டுரைகள் சிறப்பு.

**– கி.இளங்கோ, சேலம்**

பேராசிரியர் அ.மார்க்ஸ், தனது முகநூல் பக்கத்தில், பேரா.இன்குலாப் பற்றி செய்தி வெளியிட்ட விதமும், அதனை ஒட்டி, அவரது முகநூல்ஆதரவாளர்கள், 'கருத்து' தெரிவித்த விதமும், முகம் சுழிக்க வைத்த அநாகரிகம். தூக்கத்தில் இருக்கும்போதுகூட, 'ஜனநாயகம்' பேசும் தோழர்கள், தாங்கள் நினைப்பதையே, மற்றவர்களும் நினைக்க வேண்டும், தாங்கள் சொல்வதை மற்றவர்கள் ஏற்க வேண்டும் என எதிர்பார்ப்பதும்கூட, ஒருவித 'வன்முறை' தானே. உணர்ச்சிவசப்படாமல், சற்றும் தடுமாற்றம் இல்லாமல், தனது பக்கத்து நியாயத்தை, 'களங்களை இழந்திருக்கலாம். ஆனால், காலம் நமக்கானது' என்கிற தனது கட்டுரையில், இன்குலாப் நேர்மையாகவும், நாகரிகமாகவும் பதிவு செய்திருப்பது பாராட்டிற்குரியது. பெரும் பகுதியும், முகமற்ற முகங்களால் நிறைக்கப்பட்டிருக்கும் முகநூலில், இடப்படும் பதிவுகளும் (status), அவற்றிற்கான 'கருத்துப் பதிவுகளும்' (coments), அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி மட்டுமே 'நாகரிகத்தின்' வளர்ச்சிக்கான அளவுகோல் என்பது உண்மை அல்ல என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறது.

**– சு.இராமசுப்பிரமணியன், தோவாளை**

"காக்கை" சூன் இதழ் படித்தேன். தலையங்கத்தில் நாம் எதிர்பார்த்த 'மோடி' பிரதமர் ஆனாலும், அவருக்கான கடமையை உணர்த்துவது நம் உரிமை. செவ்வனே சொல்லியுள்ளீர்கள். நன்றி. இரா.எட்வின் அவர்களின் ''அரசியல்'' கட்டுரை ஆள்பவர்களை நோக்கி வைக்கப்பட்டதே . அவர் உணர வேண்டுமே! உணர வைப்போம். க.பஞ்சாங்கம் அவர்களின், தமிழ் மேடையில் சொல்லியுள்ளது போல இன்றும் திருக்குறள் பயன்பாட்டில் உள்ளது. பலர் அதன்படி வாழவும் முனைகிறார்கள். இளைய தலைமுறைக்கும் அது சென்று சேரத்தான் செய்கிறது. திருக்குறள். மதமல்லாத மதம்.

நித்திய பாரதியின் "மறைக்கப்படும் கொடூரம்". அமெரிக்காவின் பார்வை தமிழர் நலன்மீது விழ, தமிழர் பகுதிகளில் தங்கமோ, வைரமோ, பெட்ரோலோ கணிசமாக இல்லையே 'மோடி' அமெரிக்காவை நெருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலுமா! அல்லது அவரும் மன்மோகன் சிங் அரசைப் போல வியாபாரிகளின் பின்னால் செல்வாரா என்ன செய்யப்பபோகிறார்? நம்பிக்கையோடு காத்திருப்போம், மாற்றங்கள் வரும் என்று.

**- மா.வேணுகோபால், கரிச்சிப்பாளையம், (நாமக்கல்)**

ம.இலெ.தங்கப்பாவின் கவிதை இன்றைக்குக் குழந்தைப் பாடல்களை எழுதுகிறோம் என்று அறிவுரைகளை நீதிக் கருத்துகளைப் புகட்டுபவர்கள் படிக்க வேண்டிய ஒன்று. உண்மையிலேயே நாம் அதுவாக மாறினால்தான் அதைப்பற்றி எழுத முடியும். இழப்புக்கடல் என்பது கவிதையில் ஆழமான சொற்றொடர். சிசு இருக்க வேண்டிய கருப்பையையும், கருப்பையில் இருக்க வேண்டிய குழந்தை வெளியில் கிடப்பதையும் காட்டி சிதம்பரம் இரவிச்சந்திரன் நல்ல கதை எழுதி உள்ளார். வேறு எங்கும் விற்காதவை விற்கும் கடையில் தாய்மையும், உயிர் அன்பும் விற்குமா என்று யோசிக்க வைக்கிறது கதை.

**- வளவ.துரையன், கடலூர்**

காத்திருத்தல் நமக்கொன்றும் புதியதன்று. நல்லது நடக்கும் என்று காத்திருப்பதே நமக்கு வாடிக்கையாகிவிட்டது. தலையங்கத்தின் ஒன்பது திட்டங்கள் நிறைவேறும் என்ற நம்பிக்கையைப் பிரதமரின் பத்தம்சம்சம் ஏற்படுத்தியிருக்கிறது. பார்ப்போம். இன்குலாப் அவர்களின் கட்டுரை தமிழக மக்களின் நாடித்துடிப்பைச் சரியாகவே கணக்கிட்டிருக்கிறது. அமைதிப்புரட்சி என்பது இதுதானோ. எப்படி இந்த சுனாமி வந்தது என்பதற்கு அடித்தள மக்களுக்கு அவர் செய்த நலத்திட்டங்கள், தமிழக நலன்களுக்காக தில்லியை எதிர்த்துப் பெற்ற ஆணைகள், ஈழத்தமிர்களுக்கு ஆதரவாக துணிவுடன் எடுத்த நடவடிக்கை என ஆதாரத்துடன் எடுத்துக்காட்டிய பாங்கு அவர் இதில் அரசியல் சாணக்கியன் என்பதை நிரூபித்தது. அதேபோல் எட்வின் கட்டுரையும் தலித்துகள் இந்துதான் ஆனால் இந்துவல்ல என்பதைப் பாகிஸ்தான் பிரிவினையின்போது இருந்த நிலையே இன்று நிலவுவதைத் தெளிவாகக் காட்டியது. அசுஸ்தஸ்தான் இயக்கம் மீண்டும் உருவாகாமல் இருப்பது திரு.மோடியின் கைகளில்தான் உள்ளது. இந்துத்துவாவின் பிரதிநிதியாக மட்டும் இல்லாமல் இந்தியாவின் பிரதிநிதியாக பிரதமர் இருக்க வேண்டும் என்பதை அவரின் எழுத்து சொல்லாமல் சொல்லியது. காதலில் ஆண்கள் மட்டுமன்று பெண்கள் சாகசம் செய்திருக்கிறார்கள் என்பதைச் சிற்பம் கட்டுரையில் இராம சுப்பிரமணியன் நேரில் பார்த்து அனுபவித்து எழுதியுள்ளார். ஓரிடத்தில்கூட இதுபோன்ற காதல் கதைகள் நம் இலக்கியங்களில் இல்லையோ எனவும் எண்ணத் தோன்றுகிறது என எழுதியுள்ளார். மதுரைக் கலம்பக சிற்றிலக்கியத்தில் பெண்கள் மடலேறுவது பற்றி அருமையாகக் கூறப்பட்டிருக்கிறது. இது இளவரசனைக் கடத்திய குறத்தியின் தன்மைதானே.

**- கருமலைத்தமிழாழன், ஒசூர்**

"காத்திருப்போம்" தலையங்கம் சுருக்கமாகவும் மிகுந்த சுவையுடனும் எழுதப்பட்டுள்ளது அருமை. மருதுவின் மூன்று ஓவியங்களும் நெஞ்சில் நிற்பன. ஒரு தமிழ்த் தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தால் என்னவெல்லாம் செய்யுமோ அவற்றையெல்லாம் செயல்படுத்த முயன்றுள்ளார் ஜெயலலிதா. இன்குலாப் அவர்களின் அரசியல் பார்வை படைப்பாளர்கள் பெரும்பாலோரின் எண்ணமாக இருக்காது என்றே நம்புகிறேன்.

**- எழுஞாயிறு, சேலம்**

ஜூன் இதழ் தலையங்கம் "காத்திருப்போம்" மிகச்சிறப்பானதாக இருந்தது. நடுநிலையுடன் யாரையும் சாயாமலும், சாடாமலும் எழுதிய தலையங்கம், திரு.நரேந்திரமோடியைப் பற்றி எந்த ஒரு பத்திரிகையிலும் குறிப்பிடாதது சிறப்பாக இருந்தது.

**- கே.கணேசன், துணைப்பதிவாளர் (ஓய்வு), சென்னை-93**

அறிவிப்பு

தவிர்க்க இயலாத காரணங்களால் ஜூலை 2014 காக்கைச் சிறகினிலே தாமதமாக வெளிவருகிறது. அடுத்த இதழிலிருந்து வழக்கம்போல் முதல் தேதியில் காக்கை உங்கள் கைகளில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Owned and published by V.Muthaiah from 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084 and Printed by H.Dhanasekar at Sekar Offset Printers, New No. 50 ( Old No. 168/1), Big Street, Chepauk, Chennai - 600 005. Editor : V.Muthaiah

# தமிழ் நூல்கள் சிங்களத்தில்!

மறவன்புலவு சச்சிதானந்தன்




கல்தோன்றி மண் தோன்றா... பெருமையெல்லாம் பேசுவோம். பெருமை பேசிப் பேசியே உள்ள பெருமையையும் இழப்போம்.

பாருங்கள், இலங்கையில், தமிழ் நூல்கள் சிங்களத்தில்! சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி மூன்றும் சிங்களத்தில் உள்ளன.

மொழி பெயர்த்தவர் ஒரு சிங்களர். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கப் பண்டிதர். தவத்திரு தருமரத்தின தேரர்.

மகாவமிசத்தைப் பாளி மொழியில் இருந்து நேரடியாகத் தமிழுக்குத் தந்திருக்கிறார். சிங்கள தமிழ் அகராதி எழுதத் தொடங்கினார்.

வியன்கோட்டை (வியாங்கொடை)க்கு அருகே நெய்வேலி (நைவெலை) என்ற சிற்றூரில் பல்சாலை (பன்சல) சென்றேன். தவத்திரு தருமரத்தின தேரரின் மாணவரான தவத்திரு இசெல்லை இரத்தினசீக தேரரைப் பார்த்தேன். பலகல் (பலகல) சரசுவதிப் பிரிவினைத் (பிரிவேன) தலைவர் அவர். 1972இல் மறைந்த தவத்திரு தருமரத்தின தேரரின் தமிழ்ப் பணியைக் காட்டினார்.


நான் பார்த்ததை உங்களுக்குத் தந்திருக்கிறேன். பாருங்கள்



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Registrar fo Newspapers for India No. TNTAM/2012/43921
Postal Registration No. TN/CCN/588/2013-2015 ISSN 2348 - 4160 Date of Publication : 25.6.2014

Admission is in progress class starts from 2nd august

# Mains TNPSC 2014
## NEW ADMISSIONS
FOR
## Group I & Group II (Interview Posts)

- **Complete Coverage of Syllabus**
- **Complete Material Provided**
- **Time bound Programme**
- **Exclusive Test Series**

# IAS Mains - 2014
**Classes starts from 1st September**

SCHEDULE OF THE PROGRAMME

MORNING
(07:15 AM- 9:45 AM)

GS PAPER-2
(History , Geography, Culture, Social Issues)

GS PAPER-5
(Ethics, Values, Integrity, Aptitude, Attitude, Moral Philosophers, Ethics in Public Administration, International Relations, etc.,)

GS PAPER-1
(ESSAY)

EVENING
(5:30 PM – 8 PM)

GS PAPER-3
(Polity, Constitution, Governance, Social Justice, International Relations)

GS PAPER-4
(Economic Development, Environment, Disaster Management, Internal Security)

GK LEADERS IAS TRAINERS PVT. LTD.,
3032,'Z'BLOCK, 3RD STREET, 13TH MAIN ROAD, ANNA NAGAR WEST, CHENNAI-40
(ADJACENT TO NATESAN INSTITUTE OF CO-OPERATIVE MANAGEMENT)
CONTACT: 044-26224044, 9600033300
web: www.gkias.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org